# செம்மண்

நிலம் 1 துகள் 7 வள்ளுவர் ஆண்டு 2051 ஆவணி 29 - 4 புரட்டாதி வாரமலர் பக்கங்கள் 24 விலை ரூபா 50/-

## எங்கே எம் மன்னர்...? கொண்டு வாருங்கள் ஆதாரங்களை

### இராவணனை தேடும் இலங்கை!



தாஸ்

இராமாயண காவியத்தின் வில்லன் இராவணன். வட இந்திய அரசனான இராமனின் மனைவி சீதையை இலங்கைக்குக் கடத்திவந்து சிறைவைத்தான் என்றும் அதனால் இராமன் படைதிரட்டி வானரங்களுடன் வந்து இராவணனுடன் போரிட்டுச் சீதையை மீட்டுச் சென்றார் என்றும் இராமாயணத்தில் கூறப்பட்டுள்ளது.

(03ஆம் பக்கம் பார்க்க)

# இன்னும் 80 ஆண்டுகளில் பாதி இலங்கை

இன்னும் 80 வருடங்களில் இலங்கையின் சனத்தொகை அரைவாசியாகக் குறைந்துவிடும் என்று சொன்னால் நம்பவா முடிகின்றது. ஆனால், அதுதான் உண்மை என்கிறது உலகளவில் நடத்தப்பட்ட ஆய்வு.

உலகில் மனிதர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் வளப் பற்றாக்குறை உள்ளிட்ட பல சவால்கள் நம்முன் குவிந்து வரும் நிலையில் மனிதப் பெருக்கம் குறித்த ஆய்வு ஒன்றை 'தி லான்செட்' (The Lancet) என்கிற சஞ்சிகை நடத்தியது. இனப் பெருக்கம், இறப்பு, புலம்பெயர்வு உள்ளிட்ட மனித குலப் பெருக்கத்தில் தாக்கத்தைச் செலுத்தக்கூடிய பல காரணங்களை முன்வைத்து இந்த ஆய்வு நடத்தப்பட்டது. உலகிலுள்ள 195 நாடுகளையும் மையப்படுத்தி இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

இந்த ஆய்வின் முடிவுப்படி 2100ஆம் ஆண்டில் இலங்கையின் மக்கள் தொகை 10.45 ஆகக் குறைந்துவிடும் என்றுள்ளது...!

# செம்மண்

வாரப் பத்திரிகை



551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781



உரிமை மற்றும் வெளியீடு: கிரீன் மீடியா கவுஸ் பிரை. லிட்

**ஆசிரியர்: தே.பிரேமானந்த்**

**துணை ஆசிரியர்: ந.ஜெயதாஸ்**


## அமெரிக்க இனத்துவேசம் கற்றுத் தரும் பாடம்

அமெரிக்கா மீண்டும் போராட்டக் களமாகக் கொந்தளிக்கத் தொடங்கியிருக்கின்றது. ஜேக்கப் பிளேக் என்கிற கறுப்பினத்தவர் ஒருவர் வெள்ளையின காவல் அலுவலர்களால் பட்டப்பகலில் நாயைச் சுடுவதைப் போன்று சுடப்பட்டதைக் கண்டித்து இந்தப் போராட்டங்கள் பல நகரங்களிலும் வெடித்திருக்கின்றன. ஆங்காங்கே அவை வன்முறை வடிவத்தையும் எடுத்திருக்கின்றன.

ஜேக்கப் பிளேக் காவல் அலுவலர்களின் கட்டளைக்குக் கட்டுப்படாமல் தனது காரில் ஏறிப் பயணிக்க முயற்சித்தபோது அவரை அவரது முதுகுப் புறமிருந்து மிக நெருக்கமாக நின்று வெள்ளையினக் காவல் அலுவலர் 7 முறை துப்பாக்கியால் சுட்டார். படுகாயமடைந்த பிளேக் வாழ்க்கையில் இனி எழுந்து நடமாட முடியாத அளவிற்கு அவரது இடுப்புக்குக் கீழ்ப் பகுதி செயலிழந்துள்ளது.

காவலர்களின் சொல்லுக்குக் கீழ்படியாத பிளேக்கைக் கட்டுப்படுத்த துப்பாக்கியால் சுடுவது மட்டுமேதான் ஒரே தெரிவாக இருந்ததா என்பதற்குப் பின்னாலேயே இந்தச் சம்பவத்தின் பின்னுள்ள இனத்துவேசம் வெளிப்படுகின்றது. கார் டயர்களைச் சுடுவதன் மூலமோ அல்லது பிளேக்கையே அவரது கால்களில் சுட்டு நகரமுடியாதபடி வீழ்த்துவதன் மூலமோகூட கட்டுப்படுத்தியிருக்க முடியும் என்கிறபோதும் அந்த வெள்ளையின காவலர் பிளேக்கை மிக நெருக்கமாக நின்று அவரது முதுகில் இடுப்புப் பகுதியில் சுட்டார் என்பதை அங்கிருந்த பலரும் நேரில் பார்த்தார்கள். சம்பவத்தைக் காணொலியிலும் பதிவு செய்திருக்கிறார்கள்.

ஜோர்ஜ் புளொய்ட் என்கிற கறுப்பின அமெரிக்கர் ஒருவரின் கழுத்தில் காலால் நெரித்து அவரைக் கொலை செய்த வெள்ளையின காவலர்களுக்கு எதிராக அமெரிக்காவே கொதித்தெழுந்து பெரும் போராட்டங்களை நடத்தி முடித்து சிறிது காலமே ஆகியிருக்கும் நிலையிலும் மற்றொரு கறுப்பினத்தவர், வெள்ளையினக் காவலர்களால் சுடப்பட்டு இயங்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். இது இனத்துவேசம் என்பது எவ்வளவு வளர்ந்தாலும் இலகுவில் அகற்றிவிட முடியாத ஆழக்கூறு என்பதற்கான சான்று.

அமெரிக்க அதிபராகவே ஒரு கறுப்பினத்தவர் பதவியேற்றிருந்தபோதும், வரவுள்ள தேர்தலில் கறுப்பினத்தவர் ஒருவர் துணை அதிபர் தேர்தலில் போட்டியிடுகின்றபோதும் அதற்கான வெளியையும் வளர்ச்சியையும் அந்த நாடு கொண்டிருக்கின்றபோதும் கறுப்பினத்தவர்களுக்கு எதிரான வன்மமும் துவேசமும் அங்கு இன்னும் நீடிப்பதையே இந்தச் சம்பவங்கள் உணர்த்தி நிற்கின்றன.

இது ஒரு சில சம்பவங்கள் அல்ல, நீண்ட காலமாகவே கறுப்பினத்தவர்களுக்கு எதிரான இனத்துவேச நடவடிக்கைகளின் தொடர்ச்சி மட்டுமே என்று ஜோர்ஜ் புளொய்ட் சம்பவத்தின் போதே விமர்சிக்கப்பட்டது. அதனால்தான் மிகப் பெரும் அளவிலான போராட்டங்களும் அங்கு வெடித்திருந்தன.

வளர்ச்சியடைந்த அமெரிக்கா போன்ற நாடுகளிலேயே இனத்துவேசத்தை அடியோடு நீக்குவது என்பது எட்டாக் கனியாக இருக்கும் நிலையில், இலங்கையில் அதிபர் மற்றும் தலைமை அமைச்சர் ஆகியோர் கூறும் "நாம் அனைவரும் இலங்கையர்" என்கிற முழக்கம் எவ்வளவு தூரம் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிரான சிங்கள பௌத்த இனவாதத்தில் இருந்து பாதுகாக்கப் போகின்றது என்பது மிகப் பெரும் கேள்வி.

இனங்களுக்கு இடையேயான நட்புறவைப் பலப்படுத்துவதும் இனத்துவேசத்தைக் களைவதும் படிமுறை அடிப்படையில் நீண்ட, தெளிவான திட்டமிடலுடன் மேற்கொள்ளப்படவேண்டியதொரு நடவடிக்கை. அதற்கான முயற்சிகள் எவையும் இலங்கையில் மேற்கொள்ளப்படவில்லை.

அமெரிக்காவில் புளொய்ட்டின் கொலையுடன் தொடங்கிய விவாதங்களில் ஒன்று, வெள்ளையின பெற்றோர்கள் தமது பிள்ளைகளிடம் இனங்களுக்கு இடையிலான வேறுபாடு தொடர்பான கலந்துரையாடல்களை எத்தனை வயதில் தொடங்குகிறார்கள் என்பது. பெரும்பாலான பெற்றோர் அத்தகைய உரையாடல்களைத் தவிர்த்துவிடுவதும் இத்தகைய எதிர்காலங்களுக்குக் காரணம் என்று வாதிடப்பட்டது. இலங்கையிலும் தமிழ், முஸ்லிம் மக்களின் அரசியல் உரிமைகள் தொடர்பில் தமது பிள்ளைகளுடன் எத்தனை சிங்களப் பெற்றோர்கள் உரையாடுகின்றார்கள்?

## எதிர்காலம்

பிரேம்


வேகமாக வளர்ந்துவரும் அறிவியல் உலகில் மாற்றங்கள் எண்ணிப் பார்க்க முடியாத விரைவில் வியக்கத்தக்க வகையில் வருகின்றன. இந்தப் பகுதியில் அவற்றைப் பற்றித்தான் தொடர்ந்து பார்க்கப் போகின்றோம்.

வீடுகளைக் கட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் சிவப்புச் செங்கற்களில் சக்தியை அல்லது ஆற்றலைச் சேமிப்பதற்கான வழிவகையை அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

கற்பனை செய்து பாருங்கள் உங்கள் வீட்டுச் சுவரில் எந்த இடத்தில் வேண்டுமானாலும் மின்சாரம் இல்லாத நேரத்தில் கூட பிளக்கில் சொருகி உங்கள் அலைபேசியை மின்னேற்றம் (சார்ஜ்) செய்துகொள்ள முடியும் என்பது எவ்வளவு அற்புதமானது.

அமெரிக்காவின் மிசோரி மாநிலத்திலுள்ள செயின்ட் லூயிஸில் வாஷிங்டன் பல்கலைக்கழகத்தின் தலைமையிலான மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இலகுவாகவும் மலிவாகவும் கிடைக்கக்கூடிய செங்கற்களை "ஸ்மார்ட் செங்கற்களாக" மாற்றக்கூடிய ஒரு முறையை உருவாக்கியுள்ளனர். இந்தத் திறன் செங்கற்கள் மின் கலங்களைப் போன்று ஆற்றலைச் சேமித்து வைக்கக்கூடியவை.

இந்த ஆராய்ச்சி இன்னும் நிரூபிக்க வேண்டிய கருத்து என்கிற கட்டத்தில் இருந்தாலும், இத்தகைய திறன் செங்கற்களைக் கொண்டு உருவாக்கப்படும் கட்டடம் கணிசமான அளவு ஆற்றலைச் சேமிக்கக் கூடியதாக இருக்கும் என்கிறார்கள் அறிவியலாளர்கள். அதாவது ஒரு மணி நேரத்தில் லட்சம் தடவைகளுக்கு மேல் மின்னேற்றம் செய்துகொள்ளக்கூடியதாக இருக்கும் என்கிறார்கள் அறிவியலாளர்கள். சாதாரண செங்கல்லை திறன் கல்லாக மாற்றுவதற்கான முறை ஒன்றை உருவாக்கியிருக்கிறார்கள்.



அப்படி மாற்றப்பட்ட இந்தக் கற்கள் சுப்பர்கப்பாசிட்டர் என்று அழைக்கப்படுகின்றன.

செங்கற்களின் மேல் பெடோட் என்கிற ஒருவகை வேதியல் பொருளைப் பூசி விடுகிறார்கள். அந்தப் பூச்சு கற்களில் காணப்படும் நுண்துளை அமைப்புகள் ஊடாகக் கசிந்து அவற்றை ஆற்றல் சேமிக்கும் மின்கலங்களாக மாற்றுகின்றன.

செங்கற்களில் உள்ள சிவப்பு நிறமியான இரும்பு ஒட்சைட் இந்தச் செயல்முறைக்கு உதவியது என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

விரைவிலேயே இத்தகைய செங்கற்களால் உருவாக்கப்பட்ட வீடுகளில் நாம் வாழக் கொடுத்து வைக்கலாம்.

> **“ கற்பனை செய்து பாருங்கள் உங்கள் வீட்டுச் சுவரில் எந்த இடத்தில் வேண்டு மானாலும் மின்சாரம் இல்லாத நேரத்தில் கூட பிளக்கில் சொருகி உங்கள் அலை பேசியை மின்னேற்றம் (சார்ஜ்) செய்துகொள்ள முடியும் என்பது எவ்வளவு அற்புதமானது.**

## இன்னும்....

2017ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி இலங்கையின் சனத்தொகை 2 கோடியே 16 லட்சம். இந்த வளர்ச்சி உச்சமடைந்து 2031ஆம் ஆண்டளவில் 2 கோடி 23 லட்சத்து 40 ஆயிரத்தை எட்டும்.

அதன் பின்னர் இந்த வளர்ச்சி வீதம் வீழ்ச்சியடையத் தொடங்கி 2100ஆம் ஆண்டளவில் அது பாதியாகக் குறைந்துவிடும் என்கிறது ஆய்வு.

உலக அளவில் மனிதர்களின் பெருக்கம் 2064ஆம் ஆண்டளவில் அதன் உச்சத்தை எட்டும் என்று இந்த ஆய்வு எதிர்வு கூறியிருக்கின்றது. 9.73 பில்லியன் என்கிற உயரத்தை அது எட்டும். அதன் பின்னர். 2100ஆம் ஆண்டுக்குள் 8.79 பில்லியன் என்கிற அளவுக்குக் குறையும்.

2100ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலத்தில் மனித குலத்தின் வளர்ச்சி மிக மெதுவானதாகவே இருக்கும் என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. வாழ்பவர்களில் 2.37 பில்லியன் பேர் 65 வயதைத் தாண்டியவர்களாக இருப்பார்கள். 1.70 பில்லியன் பேர் மட்டுமே 20 வயதுக்குக் குறைந்தவர்களாக இருப்பார்கள்.



தற்போதுள்ள 114 மில்லியன் என்கிற நிலையில் இருந்து 80 வயதுக்கு மேற்பட்டவர்களின் எண்ணிக்கை 866 என்கிற நிலையை எட்டும். 1950ஆம் ஆண்டு நபர் ஒருவர் 80 வயதை எட்டியபோது 25 பிறப்புக்கள் நிகழ்ந்தன. 2017ஆம் ஆண்டில் அது 7ஆகக் குறைந்தது. 2100ஆம் ஆண்டில் நபர் ஒருவர் 80 வயதை எட்டும்போது புதிதாக ஒருவர் மட்டுமே பிறப்பார் என்று எதிர்வுகூறுகின்றது இந்த ஆய்வு.

இந்த ஆய்வின்படி 2017ஆம் ஆண்டில் ஒரு பெண் பெற்றெடுத்த சராசரிக் குழந்தைகளின் எண்ணிக்கை 1.80 ஆனால் இன்னும் 80 வருடங்களில் இது 1.46 என்கிற அளவிற்குக் குறைந்துவிடும்.

மருத்துவ, சுகாதார விதிகளுக்குக் கீழ் ஒரு நாட்டின் இனப்பெருக்க வீதம் 2.1 சதவீதத்தைவிடக் குறைந்துபோனால் அந்த நாட்டின் சனத்தொகை வளர்ச்சி வீழ்ச்சியடையும்.

இது பல்வேறு காரணங்களினாலும் நிகழக்கூடியது என்று வல்லுநர்கள் கூறுகின்றார்கள். பொருளாதாரத் தராதரங்கள், சுகாதாரத் தராதரங்கள், தொழில்துறைச் சவால்கள். பெற்றோர்கள் எதிர்கொள்ளும் சமூகச் சவால்கள் போன்ற இன்னோரன்ன காரணங்களால் இந்த நிலைமை ஏற்படும் என்று அவர்கள் விளக்குகின்றார்கள்.

இத்தகைய ஒரு நிலை ஏற்படும்போது இலங்கை வயோதிபர்களை அதிகம் கொண்ட ஒரு நாடாகவும் அவர்களைப் பராமரிக்க முடியாத இளையவர்களைக் கொண்ட நாடாகவும் மாறி இருக்கும்.

மிகச் சிறப்பான, பரந்துபட்ட, திறந்த குடியேற்றக் கொள்கைகளைக் கொண்ட நாடுகளே இந்தச் சவாலை வெற்றிகொள்ளக் கூடிய நாடுகள் என்கின்றது 'தி லான்செட்' ஆய்வு.

# எங்கே எம் மன்னர்...?

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீதையைக் கடத்திய இராவணன் தனது புஷ்பரக விமானத்தில் அவளை ஏற்றி வான் வழியாகப் பறந்து கடலால் பிரிக்கப்பட்டிருந்த நிலப்பரப்பான இலங்கையை அடைந்து அங்குள்ள அசோக வனத்தில் சீதையைச் சிறை வைத்தான் என்பது இதிகாசமான இராமாயணம்.

காவியத்தின்படி வில்லனாக இருந்தாலும், இராவணன் ஒரு சிவபக்தன். சீதையைக் கவர்ந்தது தவிர அவன் செய்த தவறு என்று எதுவும் இல்லை இராமாயணத்தில்.

இந்த இதிகாசம் உண்மையில் வரலாற்று நிகழ்வின் பதிவா அல்லது ஒரு கற்பனைக் கதை மட்டுமேவா என்கிற விவாதங்கள் ஆய்வாளர்கள். அறிஞர்கள் மத்தியில் இன்றும் தொடர்ந்துகொண்டே இருக்கின்றது. ஆனால், இந்தியாவில் அது இந்துத்துவாவுக்கும் மதச் சார்பின்மைக்கும் இடையிலான அரசியல் மோதலாகவும் இந்த விவகாரம் ஊன்று வருகின்றது.

அங்கு இராவணனைத் தங்கள் கடவுளாகக் கொண்டு அவனுக்காகப் பெரும் வழிபாடுகளை இயற்றுவதன் மூலம் அரசியல் எதிர்புணர்வை வெளிப்படுத்தும் நிகழ்வுகளும் அங்கு அரங்கேறி வருகின்றன.

அறிஞர்கள் மத்தியில் இராமாயணம் கூறும் இலங்கை இன்றைய சிறிலங்காவா அல்லது இந்தியாவிற்குள்ளேயே இருக்கின்றன ஒரு பகுதியா என்கிற விவாதங்களும் இருக்கின்றன. வட இந்தியாவில் உள்ள ஒரு பகுதியே இலங்கை என்றும் அங்கேயே சீதை சிறை வைக்கப்பட்டார் என்றும் நிறுவும் ஆய்வுப் புத்தகங்கள் இந்தியாவில் ஏற்கனவே வெளியாகி இருக்கின்றன.

இலங்கையரைப் பொறுத்தமட்டில் இராவணன் இலங்கையை ஆண்ட ஓர் அரசன் என்றே பலரும் நம்புகிறார்கள். இலங்கைத் தமிழர்கள் மட்டுமன்றி சிங்களவரிடையேயும் அதே கருத்து காணப்படுகிறது.

ஆனால், கடந்த சில ஆண்டுகளாக இலங்கையில் வேரூன்றி வரும் பௌத்த - சைவ மோதலில் இராவணன் சிவ பக்தன் என்பதால் அவன் தமிழனாகவே இருப்பான் என்கிற உரிமை கோரல் குரல்கள் எழத் தொடங்கியிருக்கின்றன. சாம வேதத்தில் நிபுணத்துவம் பெற்ற இராவணன் தனது கை நரம்புகளால் சாம கானம் பாடிச் சிவனை மகிழ்வித்தான் என அவனை வில்லனாகச் சித்திரிக்கின்ற இராமாயணமே கூறுவதை ஒரு பகுதியினர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்கின்றனர்.

இந்த நிலையில் இப்போது திடீரென இலங்கை ஆட்சித் தரப்பு இராவணனைப் பற்றிய ஆய்வுகளைத் தொடங்கியிருப்பதாக அறிவித்துள்ளது. தமிழர் தரப்பு இராவணனைத் தமிழ் மன்னர் என்று உரிமைகோரி நிற்க, இராவணனே உலகின் முதல் வானோடியாக இருக்கக்கூடும் என்கிற ரீதியில் தமது மன்னன் என்று அவனை உரிமைகோரும் முடிவில் செயற்படுகின்றது ஆட்சித் தரப்பு.

இராவணன் தொடர்பான ஆவணங்கள், புத்தகங்கள் மற்றும் ஆராய்ச்சிப் பொருள்களைப் பகிர்ந்து கொள்ளுமாறு மக்களைக் கோரும் பகிரங்க அறிவிப்பு, விளம்பரம் தெற்கில் இருந்து வெளியாகும் ஆங்கில, சிங்களப் பத்திரிகைகளில் வந்துள்ளது.


Ministry of Tourism and Aviation
Civil Aviation Authority of Sri Lanka
Notice
Conducting a Research on King Ravana and Lost Heritage of Aviation Dominance

Environment, Research and Project Section of the Civil Aviation Authority of Sri Lanka (CAASL) has initiated a research on "The King Ravana and Lost Heritage of Aviation Dominance".

To develop basement for the research,CAASL is collecting tangible literature related to the King Ravana.

General public hereby requested to assist CAASL by providing documents, Evidence on King Ravana Story.

Therefore,if you have any documents or books related to King Ravana and if you like to share these documents with CAASL, please inform us via contact 0766317110 or email mgrrdp@caa.lk before 31st July 2020. Suitable payment will be paid.

Civil Aviation Authority of Sri Lanka
No. 152/1,
Minuwangoda Road, Katunayake

இந்த விளம்பரத்தை இலங்கைச் சுற்றுலா மற்றும் வான்பறப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ளது. இராவணன் மற்றும் இலங்கையின் பண்டைய வான்பறப்பு வரலாறு குறித்து விரிவான ஆராய்ச்சி நடத்த ஆட்சியாளர்கள் விரும்புகின்றனர் என்றும், அவர் பயன்படுத்திய வான் பாதைகளின் அன்றைய பயன்பாடு குறித்து ஆய்வு செய்வதே இந்தத் தேடலின் நோக்கம் என்றும் அந்த விளம்பரம் சொல்லி நிற்கிறது.

சீனா தனது பாரம்பரிய பட்டுப்பாதையை இந்து சமுத்திரக் கடலோரம் எங்கும் தேடிவருவதைப் போன்று இராவணனின் வான்பாதையை இலங்கை ஆட்சியாளர்களும் தேடத் தொடங்கியிருக்கிறார்கள்.

## இலங்கையின் முதல் வானோடி இராவணன்

இராமனின் காலத்தில் இலங்கையின் ஆட்சியாளராக இருந்த இராவணன் ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சீதையைக் கடத்திக் கொண்டு வானில் பறந்ததே உலகின் முதல் வானூர்தி என்று இலங்கை ஆட்சித் தரப்பில் ஒரு பகுதி நம்பத் தொடங்கியிருப்பதையே இது புலப்படுத்துகின்றது.

சுமார் 5 ஆயிரம் 6 ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் தமது முன்னோர்கள் எனக் கூறப்படுபவர்கள் பறக்கப் பயன்படுத்திய முறைகளைக் கண்டறிய நாடு இப்போது ஆர்வமாக உள்ளது. எனவே அதன் முதல் கட்டமாக, இராவணன் தொடர்பான ஆவணங்கள், புத்தகங்கள் மற்றும் பிற வரலாற்று உள்ளடக்கங்களை சேகரிக்கத் தொடங்கியுள்ளதாக அமைச்சின் அறிவிப்பு தெரிவிக்கின்றது.

இலங்கை சார்பில் வானூர்தியைப் பறக்கவிட்ட முதல் நபர் இராவணன் என்பதை நிரூபிக்க மறுக்கமுடியாத உண்மைகள் உள்ளன என்கிறார் இலங்கையின் பொதுமக்கள் வான்பறப்பு ஆணையகத்தின் முன்னாள் துணைத் தலைவரான சஷி தனதுங்கே. "இராவண மன்னன் ஒரு மேதை. அவர் தான் முதலில் வானில் பறந்தவர். அவர் ஒரு திறமையான வானோடியாக இருந்தார். இது புராணம் அல்ல. இது ஓர் உண்மை. இது குறித்து விரிவான ஆராய்ச்சி இருக்கவேண்டும். அடுத்த ஐந்து ஆண்டுகளில், இதை நாங்கள் நிரூபிப்போம்" என்றார் அவர்.

இந்தப் பின்னணியிலேயே அன்று சீதையைக் கடத்திய இராவணனைத் தேடும் படலம் தொடங்கியுள்ளது.

## இராவணன் கனிவான ஆட்சியாளர்

இராவணனைத் தேடும் இந்தத் திட்டத்துக்கு இலங்கையின் பொது மக்கள் வான்பறப்பு ஆணையகமே தலைமை தாங்குகிறது. நாங்கள் தான் இலங்கையின் முக்கிய வான்பறப்பு ஒழுங்குமுறை ஆணையகத்தினர். இராவணன் ஒரு வானூர்தியைப் பறக்கவிட்டது பற்றியும் வான் வழிகளைப் பயன்படுத்தியது பற்றியும் பல ஆண்டுகளாகச் செவி வழிக் கதைகள் இருந்து வருவதால், இந்த விடயத்தை நாங்கள் தேட விரும்புகிறோம் என்று அந்த ஆணையகத்தின் சார்பில் குரல் தரவல்ல அதிகாரி ஒருவர் தெரிவிக்கிறார். இலங்கையை ஆண்ட இராவணனைப் பெரும் அறிஞர் என்றும் கனிவான ஆட்சியாளர் என்றும் தாம் நம்புகிறது என்று குறித்த வான் பறப்பு ஆணையகம் மனம் திறந்துள்ளது.

## ராவணன் 1

விண்வெளி ஆராய்ச்சிகள், பயணங்களில் போர் முடிந்த கையோடு அதிக ஆர்வம் செலுத்த ஆரம்பித்துள்ள இலங்கை தனது விண்வெளிப் பயணத்தின் ஒரு பகுதியாக விண்வெளியில் ஒரு செயற்கைக்கோளை ஏவியது. அந்தச் செயற்கைக்கோளுக்கும் 'ராவணன் 1' என்றே அது பெயரிட்டிருந்தது. இராவணன் மீதுள்ள நாட்டமும், பிடிப்புமே இன்று இலங்கைப் பொது மக்கள் வான்பறப்பு ஆணையகத்தின் தேடலுக்கும் வழி வகுத்துள்ளது என்பதும் பொதுவான கருத்து.

## சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் செயல்

இலங்கையின் சுற்றுலாத் துறையை ஊக்குவிக்கும் முகமாகவே இராவணன் குறித்த தேடல் இருக்கும் என்று இந்த அறிவிப்பு வெளியாகிய கையோடு பேச்சுகள் எழுந்துவிட்டன.

சீனா தனது பாரம்பரிய பட்டுப்பாதையை இந்து சமுத்திரக் கடலோரம் எங்கும் தேடிவருவதைப் போன்று இராவணனின் வான்பாதையை இலங்கை ஆட்சியாளர்களும் தேடத் தொடங்கியிருக்கிறார்கள்.

இராவணன் ஆதிகாலத்திலிருந்தே வானூர்தியைப் பயன்படுத்தியதையும், அதற்குரிய சிறப்பான பறத்தல் பாதைகளை இலங்கை கொண்டிருந்ததையும் விளம்பரப்படுத்திச் சுற்றுலாத் துறையை ஊக்குவிக்கும் முயற்சி இது என்று கருதப்படுகிறது.

2016ஆம் ஆண்டில் கொழும்பில் நடைபெற்ற மாநாடொன்றில் உரையாற்றிய அப்போதைய போக்குவரத்து மற்றும் பொது வான் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபாலா டி சில்வா, உலகளாவிய வான் பயணத்தின் நவீன வரலாறு ரைட் சகோதரர்களுடன் தொடங்கி யிருந்தாலும், இலங்கையில் அது அதற்கு முன்பே இராவணனால் தொடங்கப்பட்டுவிட்டது என்று பெருமை பாராட்டினார்.

இராவணன் மற்றும் இலங்கையின் விமானப் போக்குவரத்து வரலாறு குறித்து இலங்கை அரசு ஆராய்ச்சிகளை நடத்த விரும்பும் அதேநேரம் தற்போது இழக்கப்பட்டுள்ள வான் வழிப் பாதைகளின் பண்டைய ஆதிக்கம் குறித்து ஆய்வுகள் நடத்த திட்டமிடப் பட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.



# அகராதி பிடிச்சவன் பதில்கள்



**கே:** சந்தையில் கிடைக்கும் மரக்கறிகளைவிட இயற்கை விவசாயத்தின் மூலம் கிடைப்பவைதான் சிறந்தவை என்று இப்போதெல்லாம் சொல்கிறார்களே! இது உண்மையா அகராதி பிடிச்சவரே?

**ப:** செயற்கை உரங்களும் செயற்கைப் பூச்சிகொல்லிகளும் பயன்படுத்தப்படக்கூடிய விவசாய உற்பத்திகளைத் தவிர்ப்பது நல்லதுதான். பெருகிவரும் மனித இனத்தின் தேவையைப் பூர்த்தி செய்ய ஒரு காலத்தில் செயற்கை உரங்களும், செய்கைப் பூச்சி கொல்லிகளும்தான் தீர்வு என்று அறிவியலாளர்கள் கருதினார்கள். மனிதப் பெருக்கத்திற்கேற்ப உற்பத்தியைப் பெருக்குவதற்கான ஒரே வழி என்று கருதப்பட்டது. நாளடைவில் இதனால் நிலம் மலட்டுத்தனமாக மாறிவருவதும் பூச்சிகொல்லிகள் வெறுமனே பூச்சிகளை மட்டும் கொல்லவில்லை, அவற்றின் முறையற்ற பாவனையால் மனிதர்களையும் கொல்லத் துடிக்கின்றன என்பதையும் கண்டறிந்தார். அதனால் இயற்கையான உற்பத்திகளைப் பயன்படுத்துவது நல்லதுதான். அப்படிப்பட்ட இயற்கை உற்பத்திகளை நீங்களே உங்கள் வீடுகளில் உற்பத்தி செய்து கொள்வதே சிறந்தது. அதைவிடுத்து "இயற்கை உற்பத்தி" என்கிற அடைமொழியின் கீழ் பன்னாட்டு நிறுவனங்களும் பெரு வணிக நிறுவனங்களும் சந்தைப்படுத்தும் பொருள்களில் போய் விழுந்துவிடாதீர்கள். ஏனெனில் இப்போது வர்த்தகச் சந்தையின் இத்தகைய அடைமொழிகள்தான் விற்பனையைப் பெருக்குவதற்கான ஊக்கிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. பணத்தைக் கறக்க அவர்கள் எதையும் செய்வார்கள்.

**கே:** அரசமைப்பின் 13ஆவது சட்டத் திருத்தத்தை நீக்குவோம் என்று அரசு கூறுகின்றது, இந்தியாவின் அனுமதியின்றி அது முடியாது என்று வாசுதேவநாணயக்காரவும் தமிழ் அரசியல்வாதிகள் பலரும் கூறுகின்றார்கள். எது நடக்கும்?

**ப:** ராஜபக்சக்களைப் பொறுத்தவரையில் முடியாது முடியாது என்பவற்றையெல்லாம் கடந்த காலங்களில் முடித்துக் காட்டியவர்கள். புலிகளை ஒருபோதும் தோற்கடிக்கவே முடியாது என்றார்கள், குறிப்பாக ஊடகங்களில் பத்தி எழுதியவர்கள். தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதரவு இன்றி ஒரு அதிபர் அதிகாரத்துக்கு வரமுடியாது என்றும் பக்கம் பக்கமாக எழுதித் தள்ளினார்கள், தொலைக்காட்சிகளில் விவாதம் நடத்தினார்கள். விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறையின் கீழ் ஆட்சித் தரப்பு ஒன்று மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பெறவே முடியாது அதற்காகத்தான் ஜே.ஆர். இந்தத் தேர்தல் முறையையே கொண்டு வந்தார் என்றார்கள். இப்படி முடியாது முடியாது என்று இவர்கள் கூறியதெல்லாவற்றையும் அவர்கள் நடத்திக் காட்டவில்லையா? அதுபோலவே 13ஆவது திருத்தத்திற்கும் நடக்காது என்பதற்கு உத்தரவாதம் ஏதுமில்லை. அப்படி நடந்தால் அதைத் தடுக்கும் பலம் இந்தியாவுக்கு அறவே கிடையாது என்பதும் தமது சுய இன்ப அரசியலுக்காக இவர்கள் இவ்வாறு கூறிவருகின்றார்கள் என்பதுமே உண்மையானது.

**கே:** குமார் மனோ, கல்முனை
காதலி மனைவியாவதா அல்லது மனைவி காதலி யாவதா சிறந்தது?

**ப:** காதலி மனைவியாவது எல்லோருக்கும் நடப்பதற்கு வாய்ப்பிருக்கின்றது. நடக்க வேண்டும் என்கிற அவசியமில்லை என்பதை ஒருபுறம் வைத்து விட்டாலும் அதற்கு வாய்ப்பிருக்கின்றது. ஆனால், மனைவி காதலியாவது எல்லோருக்கும் நடப்பதற்கான வாய்ப்பிருப்பதில்லை. இங்கே பல திருமணங்கள் நிர்ப்பந்தத்தின் பட்சத்தில் காலங் கடத்துகின்றனவே தவிர, மனமொத்த வாழ்க்கையாக மலர்வதில்லை என்பது வெள்ளிடை மலை. அதற்கும் மேலாக பாழுங்கிணற்றில் விழுவது என்று முடிவெடுத்த பின்னர் அது நீர் நிறைந்த கிணறாக இருந்தால் என்ன நீரில்லாத கிணறாக இருந்தால் என்ன? உங்கள் விதியை யாரால் காப்பாற்ற முடியும் சொல்லுங்கள்.

உங்கள் கேள்விகளை
551 A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
என்கிற தபால் முகவரிக்கு
அல்லது
shemman.redsoil@gmail.com
என்ற மின்னஞ்சல் முகவரிக்கு
அனுப்பி வையுங்கள்.

---

ரி.பி.அன்ரன்

# ஓயாத குத்துவெட்டு!







தமிழரசுக் கட்சிக்குள் குத்துவெட்டுக்கள் இன்னும் முடிந்தபாடாக இல்லை. தேர்தலையொட்டித் தொடங்கிய உட்கட்சிப் பூசல் நீடிக்கின்றது. அதன் நீட்சியாக கட்சியின் செயலாளர் நாயகமான சி.துரைராஜ சிங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை முன்வைப்பதற்கான முன்னறிவிப்புக் கொடுக்கப்பட்டுள்ளது.

கட்சியின் மூத்த உறுப்பினர்களான சி.வி.கே. சிவஞானம் (மூத்த உப தலைவர்), கனகசபாபதி (பொருளாளர்), முன்னாள் மாகாண சபை உறுப்பினரான பரஞ்சோதி, கட்சியின் இளைய உறுப்பினர்களில் ஒருவரும் யாழ். நகர முதல்வருமான இ.ஆர்னோல்ட் ஆகியோர் இணைந்து இந்த முன்னறிவிப்பைக் கொடுத்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குப் பொதுத் தேர்தலில் கிடைத்த ஒரேயொரு தேசியப்பட்டியல் ஆசனத்தைக் கட்சித் தலைவருக்கே தெரியாமல் அம்பாறை மாவட்டத்திற்குக் கொடுக்கும்படி தேர்தல்கள் ஆணையாளருக்குக் கட்சியின் செயலாளர் என்ற முறையில் துரை ராஜசிங்கம் அறிவித்துவிட்டார், இது முறையற்ற செயல் என்கிற காரணத்தைக் காட்டியே அவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட உள்ளது.

கட்சியின் மத்திய குழுக் கூட்டம் சனிக்கிழமை வவுனியாவில் கூடும்போது இந்தத் தீர்மானத்துக்கான முன்மொழிவு தொடர்பில் ஆராயப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. கட்சியின் கிழக்கு வட்டாரத்தில் துரைராஜசிங்கத்திற்கு கணிசமான எதிர்ப்பு இருக்கின்றபோதும், அவரை வடக்கில் உள்ளவர்கள் இந்த வகையில் வெளியேற்றுவதை துரைராஜசிங்கத்தின் எதிர்ப்பாளர்களேகூட ஏற்றுக்கொள்ளவில்லை என்று கூறப்படுகின்றது.

பொதுத் தேர்தலின் பின்னர் ஆவணி (ஓகஸ்ட்) 15ஆம் நாள் திருகோணமலையில் நடந்த கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் தேசியப்பட்டியல் விவகாரம் ஆராயப்பட்டு, அம்பாறை மாவட்டத்திற்கு அதனைக் கொடுத்தது சரியானதே என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. கட்சித் தலைவருக்குத் தெரியாமல், அவரோடு கலந்தாலோசிக்காமல் செய்யப்பட்டதே தவறு என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. அதாவது செய்தது சரி, செய்த முறை பிழை என்று வாதிடப்பட்டது.

இந்த விவகாரம் குறித்து மத்திய குழுக் கூட்டத்திலும் ஆராயப்படவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டதன் அடிப்படையில் அதற்கும் இணக்கம் தெரிவிக்கப்பட்டது. அப்போதே துரைராஜசிங்கத்திற்கு எதிரான வியூகங்கள் தயாராகத் தொடங்கியிருந்தன.

தேசியப்பட்டியலை அம்பாறை மாவட்டத்திற்குக் கொடுப்பது என்கிற முடிவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தமிழ் அரசுக் கட்சிப் பொதுச் செயலாளர் துரைராஜசிங்கம், கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரே முடிவு செய்தனர்.

அந்தத் தேசியப்பட்டியல் ஆசனத்தை கட்சித் தலைவரான மாவை சேனாதிராசாவுக்கு கொடுக்க வேண்டும் என்று கட்சிக்குள் ஒரு சாரார் குரல் கொடுத்தனர். அப்படியான ஒரு நிலை ஏற்பட்டால் தான் அந்தப் பதவியை ஏற்றுக்கொள்வார் என்று கட்சித் தலைவர் மாவை. சோ.சேனாதிராசாவும் அறிவித்திருந்தார். இந்த நிலையில்தான் அந்தப் பதவி அம்பாறை மாவட்டத்தில் கலையரசனுக்குக் கொடுக்கப்பட்டது.

இது கட்சித் தலைவர் நாடாளுமன்றத்திற்குச் செல்வதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளில் ஒன்று என்று கட்சிக்குள் இருக்கும் மூத்தவர்கள் சிலர் கருதுகின்றனர். இந்தச் சதித் திட்டத்திற்கு பொதுச் செயலாளரும் உடந்தையாக இருந்தார் என்று அவர்கள் சந்தேகிக்கின்றனர்.

கட்சியின் செயலாளரான துரைராஜசிங்கம் சுமந்திரனும் அணிசேர்ந்திருக்கிறார் என்றும் இந்தத் தரப்பினர் கருதுகின்றனர். இதனாலேயே அவர் மீதான வன்மம் மேலும் அதிகரித்திருக்கின்றது.

தேர்தல்களைப் பொறுத்தவரையில் கட்சிகளின் செயலாளர்கள் பதவி மிக முக்கியமானது. அவர்களின் கையெழுத்து மிக முக்கியமானது. தேசியப்பட்டியல் உள்ளிட்ட பல விடயங்களில் அவர்களின் கையெழுத்து இல்லாமல் எதுவும் செய்ய முடியாது.

மாகாண சபைத் தேர்தல்களும் வரவுள்ள நிலையில் நாடாளுமன்ற உறுப்பினரான சுமந்திரன் மற்றும் சிறிதரன் அணியினருக்கு ஆதரவாக இருக்கக் கூடியவரான பொதுச் செயலாளரை அகற்றிவிடவேண்டும் என்பதே கட்சிக்குள் இருக்கும் ஒரு சிலரது கனவு, நம்பிக்கை.

கட்சிச் செயலாளரை மாற்றி கட்சியின் கட்டுப்பாட்டைத் தலைவர் என்கிற ரீதியில் மாவை சேனாதிராசா தனது கைகளில் எடுக்கவில்லை என்றால் பின்னர் அது தமக்குப் பிரச்சினைக்குரியதாக மாறிவிடும் என்று இந்தக் குழுவினர் கருதுவதால் துரைராஜசிங்கத்திடம் இருந்து அந்தப் பதவியைப் பறிப்பதற்கு அவர்கள் முனைப்புக் காட்டுகின்றார்கள்.

அவர்களது திட்டம் சனிக்கிழமை மத்திய குழுக் கூட்டத்தில் நடைபெறுவதற்கு வாய்ப்பில்லை என்று செம்மண் பத்திரிகையிடம் சுட்டிக்காட்டின கட்சியின் முக்கிய வட்டாரங்கள்.

செயலாளர் செய்தது சரி என்று கூறியதன் பின்னர் அவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவது கட்சிக்குள் உள்ள சிலரின் சுயநலன் கருதிய செயற்பாடுகளே தவிர, வேறில்லை என்று கூறிய அந்த வட்டாரங்கள் கட்சி இதே நிலையில் சென்றால் அது அழிவதைத் தவிர வேறு தெரிவு இருக்காது என்றும் சுட்டிக்காட்டின.

# எங்கே போகிறோம்? 7

*அமைதியான நதியினிலே ஓடும் ஓடம் அளவில்லாத வெள்ளம் வந்தால் ஆடும்...*

பாடல் மெல்லிசை தூக்கல்! இப்படியான பாடல்கள் உலகமும் தமிழும் உள்ள வரை நிலைக்கும்.

இன்று பாடல்களோ வல்லிசையில்! கேட்பதோ காது பிளக்கும் வகையில். உச்சஸ் தாயியில். இளைஞர்களின் மனப்பாங்கோ பாடல்களை, இசையினை காது செவிடாகும்வரை கேட்க வேண்டும் என்பது. சுப நிகழ்வோ அசுப நிகழ்வோ ஒலிவடிவம் உச்சத்தில் இருக்கவேண்டும் என்ற அறியாமை. நிகழ்வுகள், திருமணங்களில் அந்த ஆளுயரக் கறுத்த பாட்டுப் பெட்டிகளுக்கு முன்னால் நின்றால் ஆளையே தூக்கி எறிகிறது, வாகனங்களின் சென்சர்கள் ஒலி எழுப்புகின்றன. காதுச் செவிப்பறை மென்சவ்வு தாங்குமா? குழந்தைகள் வீரிட்டு அழுகின்றன. யாரை யார் திருத்துவது?

இசையை மென்மையாக ரசித்தால் அதுவே பல பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையும், மன அழுத்தத்தைக் குறைக்கும், என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அதே இசையின் சத்தம் எல்லை தாண்டும்போது, ஒலி மாசு ஆகின்றது. அது மன அழுத்தத்தை அதிகரித்து அமைதியின்மையை ஏற்படுத்தவே செய்யும்.

பின்னணி இசையாக மெல்லத் தவழும் சங்கீதம் உற்சாகமாக வேலைகளைச் செய்ய உதவும். நீண்ட நேரம் கணினியில் வேலை செய்பவர்களை இது ஊக்குவிக்கிறது. நிகழ்வுகளில் மக்கள் கூடும் இடங்களில் முதன்மை அம்சமாக அமையாது பின்னணியில் மெதுவாக ரீங்காரம் செய்யும் சங்கீதம் அபாரம்.

பின்னணிப் பாடல்கள் என்றுதானே அறிமுகம். அவை எப்படிக் குத்துப் பாடல்களாக, வன்முறைக் காட்சிகளாக, முன்னணிக்கு நகர்ந்தன? அமைதியைக் குலைத்து, குருதி அழுத்தத்தை அதிகரித்து, அமைதியின்மையை ஏற்படுத்துகின்றன?

கடுமையாகப் படிப்பில் ஈடுபடும் மாணவர்கள் அன்று ஒரு இருபத்து நான்கு மணி நேரமும் ஓயாத வானொலிப் பெட்டியோடுதான் உயிரை விட்டார்கள். அது ஓர் உந்துசக்தி என்றே ஆய்வுகளும் இன்று உறுதிப்படுத்துகின்றன.

ஆனால் இன்றைய குத்துப் பாடல்களும் பல வழி ஒலியமைப்புக்களும் இருந்து படிக்க விடுவதில்லை. எழும்பி ஆட வைக்கின்றன. தவிர வீடியோ வசதிகள் கவனத்தைச் சிதைக்கின்றன. கட்டவுட்டுக்கு பால்வார்க்க வைக்கின்றன.


வாகனங்களில் இசைக்கப்படும் பாடல்கள் விபத்துக்கே வழி கோலுகின்றன. தவிர தனிப்பட காதில் சொருகிய ஹெட்போன்கள் உளவியல் உடலியல் சமூகவியல் ரீதியாக மிகவும் ஆபத்தானவை.

கொழும்புப் பயண இரவு நேர பேருந்துகளில் பயணிகள் ஆளுக்கு ஒரு திரைப் படத்தை கேட்டுச் சண்டை பிடிக்கிறார்கள். தொடர்ந்து பயணம் செய்பவர்கள் தினம் ஒரு புதுப் படம் கேட்கிறார்கள். எல்லோரும் உறங்கியபின் அனுபவமான சாரதிகள் இசைக்கவிடும் ரி.எம்.சௌந்தர்ராஜன் (TMS) காலப் பாடல்கள் தாலாட்டுகின்றன. அவை எதுவித விபத்துக்களுக்கும் இடம் கொடுப்பதில்லை.

இனிய மெல்லிசை மன அழுத்தத்தை ஏற்படுத்தும் கோடிசோல் (cortisol) ஓமோன் சுரப்பினைக் குறைத்து, டொபாமைன் (dopamine) சுரப்பினை அதிகரிக்கச் செய்கிறது. இசை சத்தமாக எல்லை மீறி ஒலிப்பின் இந்த செயற்பாடு எதிர்மாறாகவே நடைபெறும்.

எமது தேவார திருவாசகங்கள் கோடிசோல் (cortisol) சுரப்பினைக் கட்டுப்படுத்தும் வகையில்தான் இயற்றப்பட்டு இசைக்கப்படுகின்றன. பஜனை வழியில் எமது முன்னோர்கள் அமைதி கண்டார்கள். இன்று அவற்றை விமர்சனம் செய்து பிழைப்பு நடாத்துவோர் அமைதி காண வழியேது?

சிவபுராணத்தின் சந்தம் உறக்கம் இல்லாத இரவுகளில் மன நிம்மதியைத் தர வல்லது. அதில் உள்ள ஆய்வுக்குரிய அறிவியல் தத்துவங்கள் வேறு விடயம். ஆனால் அதனை ஒத்த வகை பாடல்கள் தூக்க மாத்திரைகளின் விற்பனையைத் தூக்கி எறிய வல்லன என்று ஆய்வுகள் இன்று தெரிவிக்கின்றன. இதனால் மேற்குலகில் அமைதியான பஜனை பலரையும் ஈர்த்துப் பிரபல்யமடைந்து வருகிறது. அதிகாலை சுப்ரபாதம் நாள் முழுவதும் உற்சாகமாக இயங்க வைக்கிறது.





**எழுத்தாளர் மு.சிவநேசன் எழுதும் தொடர்**

இந்தியா சொன்னால் பரிகாசம், எமது அறிவாளிகள் தமிழ் நாட்டில் ஆர்ப்பாட்டம். கந்தசஷ்டி கவசத்தோடும் மோதல். ஆனால் மெல்லிசை சில தீராத தீவிர நோய்களைக் குணமாக்கும் வகையில் ஓமோன் மட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்தி நோயெதிர்ப்பு சக்தியை அதிகரித்து, கலச் சிதைவுகள் காயங்களை துரிதமாக மீள வைத்து, கான்சர், எலும்பு முறிவு போன்ற சிக்கலான நிலமைகளில் இருந்து மனிதர்களை விரைவாக மீட்கிறது.

இன்று ஆலயங்களில் ஒலிபெருக்கிப் பாவனை உச்சத்தில் இருப்பது விமர்சனங்களைத் தோற்றுவிக்கிறது. கிராமம் முழுவதும் ஒலிக்க விடப்படுவது குழந்தைகள், நோயாளிகள், கல்வி கற்போரை உளத் தாக்கத்திற்கு உள்ளாகிறது. முதன்மை வீதிகளில் பல கி.மீ. நீளத்திற்கு ஒலிபெருக்கிகள் கட்டப்படுவது வாகனப் போக்குவரத்தை ஆபத்தில் சிக்க வைக்கிறது. சில பிரபல ஆலயங்களில் ஒலிபெருக்கி பாவனை அறவே இல்லை.

அன்று தேங்காய் எண்ணெய் விளக்கொளியில் மூலஸ்தானத்தில் சுவர்களில் பட்டு ஒலிக்கும் மந்திரங்களின் ஸ்வரங்களின் இனிமை இன்றைய கதறும் ஒலி பெருக்கிகளில் இல்லை.





மின் உபகரணங்கள் அனைத்திலும் நீங்கள் காணும் குறியீடு இது. மின் சாதனத்தின் செயற்பாட்டை ஆரம்பிக்கவும், நிறுத்தவும் பயன்படும் பட்டன்களில் இந்தக் குறியீடு இடம்பெறும். ஆரம்பத்தில் ஒன்று மற்றும் பூச்சியம் ஆகிய தனித்தனி இலக்கங்களாகத் தனித்தனிப் பகுதிகளில் ஆளிகளில் இடம்பெற்ற இந்தக் குறியீடு தொழில்நுட்ப வளர்ச்சியால் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தனவாகின. ஒரே பட்டனிலும் பதிப்பாகின. மொழி கடந்து அனைவராலும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் இருப்பதாலும், தரவுகளின் (டேரா) உள்ளடக்கமாக இந்த ஒன்று மற்றும் பூச்சியங்கள் இருப்பதாலும் மின் சாதனங்களில் இந்தக் குறியீடுகள் பதிப்பாகின்றன.


Lion Comics & Muthu Comics

உங்கள் மனங்கவர்ந்த காமிக்ஸ் புத்தகங்கள்!

இலங்கையிலும் விற்பனையாகின்றன!




யாழ்ப்பாணத்தில்

பாக்யா புத்தகசாலை - கொக்குவில்
ஸ்ரீலங்கா புத்தகசாலை - யாழ்ப்பாணம்

கொழும்பில்

பூபாலசிங்கம் புத்தகசாலை - வெள்ளவத்தை
கந்தையா அன்ட் சன்ஸ் - 357, காலிவீதி, பம்பலப்பிட்டி

தபாலில் பெற விபரங்களுக்கு (SMS மட்டும்) - 0769 355 944

https://www.facebook.com/tamilcomics/

லயன், முத்து காமிக்ஸ் குழும வெளியீடுகளை அனுமதியின்றி அச்சுவடிவிலோ மின்னிதழ் வடிவிலோ விற்பனை செய்தல், பரிமாறுதல் போன்ற நடவடிக்கைகள் காப்புரிமச் சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும்! - வெளியீட்டாளர்




Price: Rs. 1150 (Islandwide Free Delivery for ezcash Payment)

விபரங்களுக்கு அழையுங்கள்: 0769 355 944

யாழ்ப்பாணத்தில் கிடைக்குமிடம்:

'யாழ் முற்றம்' - இல: 461, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(அத்தியடி உப தபால் நிலையம் அருகில்)

## குடல் கறி

வாழைக் காய்ப் பிட்டு, பலாக்கொட்டைக் கஞ்சி, முடக்கத்தான் இலை இட்லி என உடலுக்கு ஆரோக்கியமளிக்கின்ற தானிய - சைவ உணவுகள் தயாரிப்பது எப்படி என்று பார்த்திருந்தோம். அந்த வரிசையில் இம்முறை சற்று மாறுபாடாக, மாமிச விரும்பி களுக்குப் பிடித்தமான ஓர் உணவு வகை குறித்துப் பார்ப்போம்.

மாமிச விரும்பிகள் இறைச்சி வகைகளை உண்பது வழமையான துதான். இறைச்சியைச் சமைத்துண்ணல் என்பது அவ்வகை யினரால் பரவலாக மேற்கொள்ளப்படுகின்ற செயலுமாகும். ஆனால் இறைச்சி யைத் தாண்டிக் குடலைச் சமைத்துண்பது அவர்களிலும் அரிது. அல்லது குறைவு என்றே கொள்ளலாம். அந்த வகையில் இம்முறை ஆட்டுக் குடலில் கறி தயாரிப்பது எப்படி என்று பார்ப்போம்.

### என்னென்ன தேவை?

நன்கு கழுவிச் சுத்தப்படுத்திய ஆட்டுக் குடல், சோம்பு - 2 மேசைக் கரண்டியளவு, சீரகம் - 1 மேசைக் கரண்டி, மஞ்சள் தூள் - அரை மேசைக் கரண்டி, கறுவாப் பட்டை - 4 துண்டுகள், கராம்பு - 6, ஏலக்காய் - 4, மிளகு - 1 மேசைக் கரண்டி, தேங்காய்த் துருவல் - 1 கப், உள்ளி - எட்டுப் பல், இஞ்சி - 25 கிராம், சின்ன வெங் காயம் நறுக்கியது - ஒரு கப், பெரிய வெங்காயம் - 2, மரக்கறி எண்ணெய் - 3 மேசைக் கரண்டியளவு, கறிவேப்பிலை - சிறி தளவு, தக்காளிப் பழம் - 3, மிளகாய்த் தூள் - 3 மேசைக் கரண்டி, மல்லித் தூள் - 5 மேசைக் கரண்டி, உப்பு - தேவையான அளவு. புளி - சிறிதளவு

### எப்படிச் சமைப்பது?

சுத்தம் செய்யப்பட்ட குடலைச் சிறிது சிறிதாக வெட்டி வைத்திருங்கள். சீரகம், மஞ்சள் தூள், மிளகு, தேங்காய்த் துருவல், பூண்டு, இஞ்சி, சின்ன வெங்காயம் ஆகியவற்றைச் சேர்த்து முதலில் மிக்ஸியில் அரைத்துக்கொள்ள வேண்டும்.


சோம்பு, கறுவாப் பட்டை, கராம்பு, ஏலக்காய் ஆகியவற்றில் அரைவாசியளவுக்கு எடுத்து இதனுடன் சேர்த்து அரையுங்கள். அகலமான பாத்திரத்தில் எண்ணெய் ஊற்றி, மீதமுள்ள சோம்பு, கறுவாப் பட்டை, கராம்பு, ஏலக்காய், கறிவேப்பிலை ஆகியவற்றைப் போட்டுத் தாளித்து, இரண்டு வெங்காயங்களை நறுக்கிச் சேர்த்து வதக்குங்கள்.

பின்னர் தக்காளியைச் சேர்த்து வதக்கி, சுத்தம் செய்த குடலை யும் சேர்த்து வதக்குங்கள். குடல் அவிந்த பிறகு மிளகாய்த் தூள், மல்லித் தூள் என்பவற்றுடன் முதலில் மிக்சியில் அரைத்த பொருள்களையும் சேர்க்க வேண்டும். தேவையான அளவு உப்புச் சேர்த்து, சிறிது தண்ணீர் ஊற்றிக் கலந்து மூடியவாறு 20 நிமிடங்கள் வரை வேகவைக்க வேண்டும்.



குடல் நன்றாக வெந்த பின்னர் ஒரு எலுமிச்சம் புளியைக் கரைத்து ஊற்றி, ஒரு கொதி கொதிக்க விட்டு இறக்க வேண்டும். இப்போது நாவுக்குச் சுவை யான ஆட்டுக் குடல் கறி தயார்.





# மனிதனையும் மிஞ்சிய மிருகம்..!!

● குமரன்

ஆச்சரியம் என்னவென்றால் மனி தர்களில் இருந்து முழுதும் வேறு பட்ட ஐந்தறிவு கொண்ட ஒரு மிருகமும் ஒருவனுக்கு ஒருத்தி என்னும் கொள்கை யோடு வாழ்கிறது என்பதுதான்..!

யூரேசியா, வட அமெரிக்கா போன்ற பகுதி களுக்குச் சொந்தமான அந்தப் பகுதிகளில் அதி கம் வாழுகின்ற சாம்பல்நிற ஓநாய்கள்தான் இந்த உயர்ந்த பண்பாட்டுக்குச் சொந்தமான விலங்கு. இந்த உயரிய பண்பாட்டினைக் கொண்ட பாலூட்டி வகையைச் சேர்ந்த சாம்பல் நிற ஓநாய்கள் கொண் டிருக்கின்ற இன்னொரு அற்புதமான பண்பாடு கூட்டுக்குடும்ப முறை. முப்பது பேர் வரை சேர்த்துக்கொண்டு தங்களுக்குள் தலைவன், தலைவி எனப் பிரித்து அவர்களின் கட்டளைக் குக் கீழ்ப்படிந்து வாழும் பண்பாட்டினைக் கொண்டுள்ளன.

இந்த கூட்டத்தின் தலைவன், தலைவி மட் டுமே இணை சேர்ந்து அடுத்த தலைமுறையை உருவாக்குகின்றன. இந்தக் கூட் டத்தில் ஒரு இரை வேட்டையா டப்பட்டதும் அவர்களின் தலை வனும், தலைவியும் முதலில் சாப்பிடுவார்கள். அதன் பின்னரே மற்ற விலங்குகள் சாப்பிடுமாம். எங்கும் துரோகம் எதிலும் துரோ கம் என்று வாழுகின்ற எங்கள் மத்தியில் சாம்பல் நிற ஓநாய்கள் கூட்டமாக வாழ்ந்தாலும் தன் இணைக்கு (துணைக்கு) துரோ கமே செய்யாது என்பதில் பெரி தும் வேறுபட்டு நிற்கின்றது.

'ஒருவனுக்கு ஒருத்தி' பண்பாடு தான் சாம்பல் நிற ஓநாய்களின் வேதவாக்கு..! சாம்பல்நிற ஓநாய்களுடைய இந்த பண்புக்கு எடுத்துக்காட்டாக இந்த விடயம் நடந்தேறியுள்ளது. "சாம்பல்நிற பெண் ஓநாய் ஒன்று தனக்குரிய துணையைத் தேடி சுமார் இரண்டு ஆண்டு காலம் தனியாக அலைந்து இறுதியில் இறந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. அமெ ரிக்காவின் வடமேற்கு மாகாணமான ஓரிகன் மற்றும் கலிபோர்னியா எல்லைப் பகுதிக்குள் 4 வயதான இந்த ஓநாய் சுமார் 8,700 மைல்கள் அலைந்து திரிந்துள்ளது, இரண்டு ஆண்டுகள் நீண்ட இந்த ஓநாயின் தேடுதலானது நாளுக்கு 21 கி.மீ. தூரங்கள் வரை வியாபித்துள்ளது. வட கிழக்கு கலிபோர்னியாவில் கடந்த பெப்ர வரி மாதம் 5ஆம் திகதி OR-54 (ஓரிகன் மாகா ணத்தின் 54ஆவது சாம்பல் நிற பெண் ஓநாய்) என பெயரிடப்பட்டுள்ள இந்த ஓநாய் இறந்த நிலையில் மீட்கப்பட்டது. ஓநாய்களின் கழுத் தில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கருவி களில் ஒன்று கடந்த டிசெம்பர் மாதம் செயல் பாட்டை நிறுத்தியது. இதனையடுத்து குறித்த ஓநாய் இறந்தமைக்கான உறுதியான காரணம் தொடர்பில் அறிந்துகொள்ள முடியவில்லை" என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஓநாய் இறந்ததற்கான காரணம் தொடர்பில் தற்போது விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ள தாக கூறப்படுகிறது. சட்டவிரோத வேட்டையாடு தல் காரணமாக குறித்த இனத்திலான ஓநாய்களின் எண்ணிக்கை பெருமளவு சரிவை சந்தித்தது. இந்த காரணத்துக்காகவே OR-54 என்கின்ற பெயரை வைத்தாக தெரிவிக்கப்படுகின்றது.

மனித - ஓநாய் மோதல்கள் காரணமாக வருடம் ஒன்றுக்கு உலகின் பல பகுதிகளிலும் நூற்றுக் கணக்கான ஓநாய்கள் கொல்லப்பட்டு வருவதாக ஆய்வாளர்களால் சொல்லப்படுகின்றது. அவற றுள் அருகிப்போகும் சாம்பல் நிற ஓநாய்களும் உள்ளடங்குகின்றன.

தனது உணவுக்காக மற்றைய விலங்குகளை வேட்டையாடும் தன்மை கொண்டிருந்தாலும் அருகிப்போகும் இந்த இன ஓநாய்களை பாது காப்பதற்காக இவை வாழும் நாடுகளின் வனவளத்துறையினர் அவற்றுக்கான வாழ் விடங்களை அமைத்தல், மனித நடமாட்டத் தினை அந்தப் பகுதிக்குள் அனுமதிக்காது தடுத் தல், அவைபயணம் செய்யும் தாழ்வாரங்களை அடையாளப்படுத்துதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



இவை சாம்பல் ஓநாய்கள் என்று அழைக்கப்பட்டாலும் சுத்த வெள்ளை யில் இருந்து மண்ணிறம், கறுப்பு, இளஞ்சிவப்பு நிறங்களிலும் காணப் படும். ஒரே நேரச் சாப்பாட்டுக்கு ஒரு ஓநாய் 20 முதல் 30 பவுண்டு கள் வரை மாமிசம் உண்ணும். ஆனால், 14 நாட்கள் வரையில் அதனால் பாதிப்பு ஏதும் இன்றிப் பட்டினி கிடக்க முடியும்.

பிறக்கும்போது இதன் குட்டிகள் குருடாகவும் செவிடாகவுமே பிறக் கின்றன. அவை இந்த உலகத்தை நேரில் பார்ப்பதற்கு 10 மாதங்கள் வரையில் அவற்றின் பெற்றோரால் பராமரிக்கப்படவேண்டியிருக்கின் றன. ■

— நெடுந்தீவு மகேஷ்

“ இன்றைய தேர்தலின் முடிவுகளின்படி தேர்தல் நாடகமாடிய நடிகர்கள் இ ப் சிலரை நிசவாழ்வின் தேவைகளை உண்மை யாய் வென்றெடுக்க வேண்டும் என்ற நோக்கோடு இந்த ஜனநாயகம், மக்கள் மன்றத்திற்குத் தெரிவு செய்து அனுப்பி வைத்துள்ளது. ”

# நல்லவர்கள் விலகினால்...!



திடீரென எழுந்த சண்டையை அவதானித்துக் கொண்டிருந்த புவனேஸ்வரராசாவுக்கு அந்தச் சண்டையைத் தடுத்து நிறுத்தும் வேகம் இருந்தாலும் சுந்தரலிங்கம், செல்வநாதனைத் தரையில் வீழ்த்திப் ‘பேப்பர் வெயிற்’றால் தலையில் அடிப்பதற்கிடையில் தடுக்க இயலாமற் போய்விட்டது.

செல்வநாதனின் நெற்றியின் மேலாகத் தலையில் செந்நிறத்தில் மோதக வடிவில் தசை புடைத்திருந்தது. குருதி கட்டி அது வீங்கிவிட்டது. விலக்குப் பிடித்த புவனேஸ்வரராசா மிகவும் வேதனைப்பட்டார். மூடிக்கிடந்த அறைக்குள் நிகழ்ந்ததை இந்த மூவரையும் தவிர வேறெவரும் அறியவில்லை.

இந்த அலுவலகத்தின் ஓரறையில் ஒன்றாகவே வேலைசெய்யும் இவர்களுக்கிடையில் இப்படி ஒரு சம்பவம் முன்னர் என்றுமே ஏற்பட்டதில்லை.

இருவருக்குமிடையில் சில மணி நேரம் விவாதத்தில் தொடங்கிய பேச்சுக்கள், முற்றிக் கைகலப்பாக மாறும் அளவுக்கு வீங்கிப் போகும் என்று ஒருவரும் எதிர்பார்க்கவில்லை. குறிப்பாக புவனேஸ்வரராசாவால் அதனைச் சீரணிக்க முடியவில்லை.

இப்பொழுது இந்தச் சம்பவம் அறைக்கு வெளியே கசிந்து விடாமல் இருப்பதில் மூவருமே கவனமாக இருப்பதாகத் தெரிந்தது. செல்வநாதனும் சுந்தரலிங்கமும் இப்பொழுது தங்களின் வேண்டாத வாதத்தால் விளைந்த கோபத்தையும் சண்டையையும் எண்ணிச் சிலபொழுது குழப்பமடைந்தனர்.

மனித வாழ்வின் பெரும்பகுதி ஆசைகளாலும் பெருமைகளாலும் வடிவமைக்கப்பட்டிருப்பதாகவே புவனேஸ்வரராசாவுக்குத் தோன்றியது. எது சரி? எது பிழை? என்பதைத் தீர்மானிக்க இயலாதவகையில் ஒவ்வொருவரும் தமது ஆசைகளை நிறைவேற்றவே வாழ்க்கைப்பாதையில் ஓடிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த அரசியல் வாழ்வும் அதிலே தம்மை இணைத்துக் கொண்டு பெருமை கொள்ளும் எண்ணமும் சேர்ந்ததாகவே வேட்பாளர் பலரின் ஆர்ப்பாட்டங்கள் இருந்தன. அவற்றையே இந்தத் தேர்தலில் அவர் பார்த்தார். வெற்றிகளை நோக்கிப் பயணிக்கும் சிலரது ஆசை பல இரகசியங்களையும் சூழ்ச்சிகளையும் போர்த்திக் கொண்டிருந்ததாகவே அவர் எண்ணமிட்டார்.

எவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் விரைந்து தொற்றுகின்ற இந்தக் கொடிய கொறொனாவை விடவும் இந்தத் தேர்தலில் பலர் ஆடிய ஆட்டங்களும் கூடிய கூட்டங்களும் ஓய்ந்துவிட அறிவிக்கப்பட்ட வெற்றியின் முடிவுகள் பலருக்கும் பலவிதமான வருத்தங்களை ஏற்படுத்தியே இருக்கின்றன.

பட்டதாரியான செல்வநாதன் தனக்கு வேலைவாய்ப்புக்கு வழிசமைத்தவராகத் தோற்றம் காட்டியவரையே இந்தத் தேர்தலில் ஆதரித்தார். அதில் ஆச்சரியம் எதுவுமில்லை. செல்வநாதனின் வாக்கு அவருக்குத்தான்.

தனது உறவினரான மருத்துவர் வேதானந்தம் கொலை செய்யப்படக் காரணமானவர் இவரே! என்று சுந்தரலிங்கம் வாதிடத் தொடங்கிய போதுதான் அவர்களின் விவாதம் சூடுபிடித்தது.

தனது வாதத்திற்கு ஆதாரமாக அவர் வைத்த குற்றச்சாட்டுகள், செல்வநாதனால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

செல்வநாதன் அவர் செய்த நன்மைகளைப் பட்டியலிட்டார். சுந்தரலிங்கமோ அவர்செய்த ஊழல்களையும் கொலைகளையும் மீண்டும் மீண்டும் உரத்துச் சொல்லி அவரைக் குற்றவாளியாக்கினார்.

விவாதம் முட்டி மோதி உச்சமடைந்தது. இருவரிடையேயும் ஆத்திரத்தையே மூட்டியது.

இவர்களின் விவாதத்திற்குள் சிக்கிக்கொள்ளாமல் சிரித்துக் கொண்டிருந்த புவனேஸ்வரராசா, தனது வாக்கினை யாருக்குப் போட்டார்? என்ற இரகசியத்தைத் தனக்குள்ளேயே சிந்தித்து வாதிட்டுச் சந்தோசப்பட்டுக் கொண்டார்.

இவர் வாக்களித்த பெருமகனார் வெற்றி பெற்றுவிட்டார். அவ்வளவுதான்!

அவர்களின் பேச்சுவார்த்தைக்குள்ளே புவனேஸ்வரராசா, சரி பிழை கண்டு தனது எண்ணங்களை நுழைக்காமல் மௌனமாகவே அவர்களின் விவாதத்தைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

இந்தச் சூழலில் திடீரெனப் பாய்ந்தெழுந்த சுந்தரலிங்கம் செல்வநாதனைக் கன்னத்தில் அறைந்தார். கட்டிப் புரண்டார். மேசையிலிருந்து கையிலகப்பட்ட ‘பேப்பர் வெயிற்’றால் செல்வநாதனின் தலையில் ஓங்கி அறைந்தார்.

எதிர்பாராமல் நிகழ்ந்த இந்த மோதலைத் தடுக்கப் புவனேஸ்வரராசா, இருவர் மீதும் தனது பலத்தைப் பிரயோகித்தார். மேசையும் கதிரைகளும் ஒழுங்கு குலைந்து அறையின் ஓரங்களில் ஒதுங்கின.

சண்டை ஓய்ந்தது.

போர் ஓய்ந்த அமைதி நிலவியது. மௌனமாக சில பொழுது இருந்தவர்களில் முதலில் வெளியேறியவர் செல்வநாதன்.

அவர் வெளியேறிய கையோடு “ஏனடாப்பா செல்வநாதனை பேப்பர் வெயிற்றால் அடிச்சனி. அவன்ரை நெத்தியும் தலையும் வீங்கிப் போச்சுது” என்று நட்பு ரீதியாகக் கேட்டு அனுதாபப்பட்டார் புவனேஸ்வரராசா.

“இவங்களாலதான் அரசியலில் நல்லவர்கள் தோற்றுப் போறாங்கள்” என்று சொன்ன சுந்தரலிங்கத்தின் பார்வை புவனேஸ்வரராசாவின் முக மாற்றத்தை ஆழமாக நோக்கியது.

நல்லவர்கள் ஏன் தோற்றுப் போகிறார்கள்?

கொலைகாரரும் கள்வர்களும் முன்னணியில் நிற்கிறார்களா?

அப்படியில்லை. இது மக்களாட்சி நாடு.

மக்கள் ஒவ்வொருவருக்கும் வாக்களிக்கும் உரிமை உண்டு.

கெட்டவர்களையும் கொலைகாரரையும் நாட்டில் ஆட்சியில் வைக்க எந்தக் குடிமகனும் விரும்ப மாட்டானே!

சிந்தித்தார்!

புவனேஸ்வரராசா குழம்பிப் போனார்.

ஜனநாயகம்!

மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஆட்சிமன்றம்!

ஒவ்வொரு வாக்காளரும் இனத்தையும் நாட்டையும் மொழியையும் மக்களையும் அவர்களின் மேன்மையையும் கருத்திற்கொண்டுதானே ஒரு வேட்பாளருக்கு வாக்களிப்பார்கள்?

புவனேஸ்வரராசா ஒரு வாக்காளர் என்ற நிலையில் அவரது கடமையில் இப்படி எதனையும் அவர் என்றுமே சிந்தித்ததாகத் தெரியவில்லை.

ஊரவனா? உறவினனா? நண்பனா? நம்மவனா? என்பதே அவரது வாக்களிப்பு முறையில் முன்னணியில் நின்ற தேர்வு விருப்பு!

“எனக்கு வந்த ஆத்திரத்தில என்ன செய்யிறதெண்டு தெரியாம அடிச் சுப்போட்டன்” சுந்தரலிங்கம் பொழுது கவலைப் பட்டார்.

தேர்தல் ஒரு நாடகம். அது பல கலை அம்சம் பொருந்திய காட்சிகளாகவும் கவலைதரும் சோக நிகழ்வுகளாலும் வடிவமைக்கப்படுகின்றன. இதிலே பொய்யும் புழுகும் காசும் களவும் கலந்திருக்கும்.

பேச்சுப் போட்டிகளும் பட்டிமன்றங்களும் நிகழலாம். இதில் பல வேளைகளில் பல திறப்பட்டவர்களாக ஊடகவியலாளர்களும் பங்கேற்பதுண்டு. ஒவ்வொரு வேட்பாளருக்கும் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் பல ஆதரவாளர்கள் இருக்கவே செய்தனர்.

இந்தத் தேர்தலில் நடிக்கவரும் ஒவ்வொரு வேட்பாளரும் மக்களைக் கவரும் வகை தேர்ந்து ஒவ்வொரு வேடம் போட்டு ஆடிய நாடகத்தைத்தான் தேர்தல் காலத்தில் பார்த்தோமே!

இப்பொழுது அவர்கள் ஆடிய நாடகத்தின் சிறப்பும் வெற்றியும் அவர்கள் போட்ட் நாடகத்தால் ஏமாற்றப்பட்ட மக்களால் ஜனநாயக விதிமுறைகளுக்கு ஏற்பத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இன்றைய தேர்தலின் முடிவுகளின்படி தேர்தல் நாடகமாடிய நடிகர்கள் சிலரை நிசவாழ்வின் தேவைகளை உண்மையாய் வென்றெடுக்க வேண்டும் என்ற நோக்கோடு இந்த ஜனநாயகம், மக்கள் மன்றத்திற்குத் தெரிவு செய்து அனுப்பிவைத்துள்ளது.

நிசவாழ்வில் இவர்கள் முன்னெடுக்கும் மக்கள் தேவையை நிவர்த்திப்பதற்கான செயற்பாடுகளின் வெற்றிகளே, ஒரு நாட்டின் மனிதநேய ஜனநாயக நடைமுறைகளின் எழுச்சியாகவேண்டும். புவனேஸ்வரராசா அமைதியாகச் சிந்தித்தார்.

“எனக்கு என்னவோ மனம் ஆறுதில்லை! அரசியலில் மனித நேயம் மிக்க நல்லவர்கள் ஏனோ இந்தத் தேர்தல்களில் நிற்பதில்லை! நின்றாலும் வெற்றி பெறுவது அபூர்வமே!” சுந்தரலிங்கத்தின் மனம் புகைந்தது.

சுந்தரலிங்கத்தின் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளும் எண்ணமற்ற புவனேஸ்வரராசாவின் மனப்பதிவு குழம்பியது.

தெற்கே தொலைவில் வேட்புமனுத் தாக்கல் செய்த பின்னர் விலகிய செய்தியுடன் ஒரு நல்லவரின் அழகிய முகம் தோன்றி புவனேஸ்வரராசாவுக்கு மகிழ்ச்சி தந்தது. அந்த வேட்பாளரின் பார்வையில் அவரோடு போட்டிக்கு நிற்பவர்களும் அவரது தொகுதி வாக்காளர்களும் கொண்டிருக்கும் நீதியற்ற முனைப்புகளே அவரை வேதனைப்படுத்தியது என்றே புவனேஸ்வரராசா நினைத்தார்.

மனம் புளுங்கிய நிலையில் அந்த வேட்பாளர் தனக்கு வாக்களிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு வாக்காளரிடம் கேட்டுத் தேர்தலிலிருந்தே விலகிக்கொண்டார்.


இந்த அரசியல் ஒரு சாக்கடை என்பதும் அதில் பங்குகொள்ளும் அரசியல்வாதிகள் கொள்ளைக்காரர்கள் என்பதும் உண்மையா?

இதைச் சொல்லிச் சொல்லியே நல்லவர்கள் யாவருமே அரசியலிலிருந்து விலகினால்........!

நமக்குக் கிடைக்கும் ஆட்சி ?



# நிர்வாக சேவையில் தமிழர்கள்...?



வி.அருணாசலம்

இலங்கைக்கான வெளிநாட்டுத் தூதுவர்களாகப் பல நாடுகளில் பணியாற்றிக்கொண்டிருந்த 80க்கு மேற்பட்ட இலங்கையர்கள் 2013ஆம் ஆண்டு மத்தள வானூர்தி நிலையத்துக்கு வந்திறங்கினர். மாத்தறையிலிருந்து யாழ்ப்பாணம் வரை 2 பெரிய அதி சொகுசு பஸ்களில் அவர்கள் பயணம் செய்தார்கள். 2009ஆம் ஆண்டில் போர் முடிந்த பின்னர் இலங்கையின் அபிவிருத்தியில் எத்தகைய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை அவர்களுக்கு நேரடியாகக் காட்டுவதன் மூலம் அது பற்றிய செய்திகளை அவர்கள் பணிபுரியும் நாட்டுத் தலைவர்களுக்கு எடுத்துக் கூறுவதே இந்தத் திட்ட முன்னெடுப்பின் நோக்கமாகவும் அடி நாதமாகவும் இருந்தது.

அவர்கள் பயணித்த இடங்களில் எல் லாம் செய்து முடிக்கப்பட்டிருந்த அபிவிருத்தி வேலைகளுக்குப் பங்களிப்புச் செய்த அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், ஜப்பான், சீனா, இந்தியா ஆகிய நாடுகளில் பணிபுரியும் இலங்கைத் தூதுவர்களும் இந்தக் குழுவில் அடங்கியிருந்தனர். இந்தப் பயண ஒழுங்கைப் பசில் ராஜபக்ச தலைமையிலான அன்றைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சு பொறுப்பேற்றுச் செய்தது. ஏறத்தாழ ஒரு வார காலச் சுற்றுலா அது.

## சிறுபான்மையினத்தவர் ஒரு சிலர்...

இந்தப் பயணக் குழுவில் அடங்கியவர்களில் திருமதி பேரியல் அஷ்ரப், இன்னொரு முஸ்லிம், தமிழர்கள் 2 பேர் எனச் சிறுபான்மையினத்தவர்களைப் பிரதிபலிக்கும் வகையில் இடம் பெற்றிருந்தவர்கள் நால்வர் மாத்திரமே. அவர்கள்கூட உலகின் முன்னனி நாடுகளின் தூதர்கள் அல்லர். ஏனைய அனைவரும் சிங்களவர்கள். இவ்வாறு அதிகளவானவர்கள் சிங்களவர்களாக இருப்பதற்குக் காரணம், தொடர்ந்து வருகின்ற அரசுகள் கவனமாகச் செயலாற்றி நிர்வாக உயர்மட்ட அதிகாரிகளாகச் சிறுபான்மையினத்தவர்கள் அதிகளவாக வரவிடாமல் பார்த்துக்கொண்டமையே.

## போட்டிப் பரீட்சையின்போது மட்டுப்படுத்தல்

இலங்கை நிர்வாக சேவை, வெளிநாட்டுச் சேவை என்பனவற்றில் பணி புரிபவர்கள் போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுகிறார்கள். இத்தகைய ஒரு பரீட்சையில் 150 பேர் தெரிவு செய்யப்படுகிறார்கள் என்று வைத்தால், அதில் தமிழர் இருவர், 2 அல்லது 1 முஸ்லிம் என்ற அடிப்படையில் சித்தியடைவதாக இருக்கிறது. வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் அரசு தொடர்பில் பல முக்கிய பதவிகளை வகிப்பவர்கள் என்ற வகையில் அதன் அறுதிப் பெரும்பான்மையைச் சிங்கள இனத்தவர்கள் வைத்திருக்க வேண்டும் என்று கணிக்கப்பட்டுப் போட்டிப் பரீட்சைத் தெரிவின்போதே தமிழர்களும் முஸ்லிம்களும் மட்டுப்படுத்தப்பட்டு முக்கிய தீர்மானங்கள் எடுக்கும் பதவி நிலைகளில் சிறுபான்மை இனத்தவர்கள் தொடர்ச்சியாகத் தவிர்க்கப்பட்டு வந்திருக்கிறார்கள்.

போர் முடிந்த பின்னரான தமது அரசியல் செயற்பாடுகளில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுக்கவோ, காணாமலாக்கப்பட்டவர்கள், அரசியல் கைதிகள் விவகாரம் ஆகியவற்றுக்குத் தீர்வு பெற்றுக் கொடுக்கவோ தவறியதோடு, மேற்குறிப்பிட்டது போன்ற சிறுபான்மையினத்தவர்களைப் பின்தள்ளும் விவகாரங்களிலும் கவனம் செலுத்தத் தவறித் தமது அரசியல் வாழ்வை நகர்த்தியிருக்கின்றனர் தமிழ் அரசியல்வாதிகள்.

## ஒரே ஒரு தமிழ்ச் செயலர்

கோத்தபாய ராஜபக்ச தலைமையிலான புதிய அரசு பதவி ஏற்று 30 அமைச்சுகளும் 40 ராஜாங்க அமைச்சுகளும் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த அமைச்சுகள் மற்றும் ராஜாங்க அமைச்சர்களின் செயலர்களாகப் பொதுச் சேவையில் உள்ளவர்களே நியமிக்கப்பட்டனர். அதில் ராஜாங்க அமைச்சுப் பதவிகளில் ஒரே ஒரு அமைச்சுக்கு மட்டுமே சுந்தரம் அருமை நாயகம் என்கிற தமிழர் செயலராக நியமிக்கப்பட்டுள்ளார். முஸ்லிம்களில் ஒருவர்கூட இல்லை.

> “எதிர்காலத்தில் தமிழ், முஸ்லிம் அதிகாரிகள் பதவி நிலைகளுக்கு வந்துவிடக்கூடாது என்பதற்காகத் திட்டமிட்டுச் சிங்கள ஆட்சியாளர்கள் மேற்கொண்ட நடவடிக்கையின் வெற்றியே இது என்பதைச் சிறுபான்மையினத்தைப் பிரதிபலிக்கின்ற அரசியல்வாதிகள் விளங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை.”

எதிர்காலத்தில் தமிழ், முஸ்லிம் அதிகாரிகள் இவ்வாறான பதவி நிலைகளுக்கு வந்துவிடக்கூடாது என்பதற்காகத் திட்டமிட்டுச் சிங்கள ஆட்சியாளர்கள் மேற்கொண்ட நடவடிக்கையின் வெற்றியே இது என்பதைச் தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகள் விளங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை. இலங்கை அரசும் சிங்கள ஆட்சியாளர்களும் மிகவும் திட்டமிட்ட வகையில் வெளிநாட்டுச் சேவை மற்றும் பொதுச் சேவையில் தமிழ் - முஸ்லிம் அதிகாரிகளை எப்போதிருந்தோ குறைத்து வந்ததன் காரணமாகவே அமைச்சுகளின் செயலர்களாக நியமிக்கத் தகுதி வாய்ந்த தமிழ் அதிகரிகளுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

> “ஓய்வுபெறும் நிலையிலுள்ள தமிழ் உயர் அதிகாரிகளைக்கூடத் தீர்மானம் எடுக்கின்ற முக்கிய பதவிகளில் அனுமதிக்காது அல்லது அரசியல் தீர்மானங்களை எடுக்கவிடாது வேறு துறைகளில் செயலர்களாகப் பணியாற்ற வைக்கப்படுகின்றது.”

## கட்டுப்படுத்தப்படும் தமிழ் அதிகாரிகள்

பொதுச் சேவை அதிகாரிகளாகவுள்ள ஒருசில தமிழர்களைக்கூடத் தமிழர் பகுதிகளில் முக்கிய தீர்மானங்களை எடுப்பதற்கு அரச இயந்திரம் அனுமதிப்பதில்லை. பிரதேச செயலர்கள், மாவட்டச் செயலர்கள், பிரதம செயலர்கள் ஆகிய பதவி நிலைகளில் தமிழர்கள் இருந்தாலும் ஆளுநர்கள் மற்றும் அமைச்சுகள் மூலம் தமிழ் பொது அதிகாரிகள் கட்டுப்படுத்தப்படுகின்றனர். முன்னாள் அதிபர் ரணசிங்க பிரேமதாச தனது முக்கிய நிர்வாகத் தேவைகளுக்கு பாஸ்கரலிங்கத்தையும், இன்னும் நான்கு லிங்கங்களையும் நம்பியிருந்தார் என்றொரு செவிவழிக் கதையுண்டு. ஆனால் இன்று அவ்வாறான நிலையில்லை. ஓய்வு பெறும் நிலையிலுள்ள தமிழ் உயர் அதிகாரிகளைக்கூடத் தீர்மானம் எடுக்கின்ற முக்கிய பதவிகளில் அனுமதிக்காது அல்லது அரசியல் தீர்மானங்களை எடுக்கவிடாது வேறுதுறைகளில் செயலர்களாகப் பணியாற்ற வைக்கப்படும் நிலையே இருக்கிறது.

## சிங்களவர்களால் நிரப்பப்படவிருக்கும் நிர்வாகம்

மிக நீண்ட காலத்துக்கு முன்பிருந்தே யாழ். மாவட்ட செயலர்களாக, பொதுச் சேவை அதிகாரிகளாகச் சிங்கள அதிகாரிகள் பலர் பணியாற்றியுள்ளார்கள். கேணல் உடுகம, நிசங்க விஜயரத்ன, என்.டி. ஜெயவீர, வேணன் அபயசேகர, வாமரசேகர, திஸ்ஸ தெவேந்திர, விஜயபால, லயனல் பெனாண்டோ, டி.எம்.ஆரியரத்ன போன்றவர்களை உதாரணமாகக் குறிப்பிட முடியும். இதுபோன்ற நியமனங்கள் இனியும் நடக்காது என்று கூறுவதற்கில்லை.

ஒரே நாடு ஒரே சட்டம் என்ற அதிபர் கோத்தபாய ராஜபக்சவின் புதிய அரசியல் சித்தாந்தத்தின் பிரகாரம் அது நடக்கக்கூடியதே. இலங்கை அரசின் சட்டங்களின் பிரகாரம் காணி தொடர்பான அதிகாரம் பிரதேச செயலர்களின் கையில் இருப்பதால் தமிழ்ப் பொதுச் சேவை அதிகாரிகள் போதாத நிலையில், சிங்கள அதிகாரிகளையே அந்தப் பதவிகளுக்கு நியமிக்க வேண்டியிருக்கும். பல்தேசிய இனங்கள் வாழ்கின்ற ஒரு நாட்டில் வேலை வாய்ப்புகள், பணியமர்த்தல்களின்போது திறமைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டுமே தவிர இன ரீதியாக முக்கியத்துவம் கொடுப்பது நீண்ட காலத்தில் சிறு தேசிய இனங்களைப் பாதிக்கவே செய்யும். அது இலங்கையில் எப்போதிருந்தே ஆரம்பிக்கப்பட்டுவிட்டது.

புதிய அரசு சிறுபான்மை இனத்தவரை இந்த நாட்டின் அபிவிருத்திக்காகப் பயன்படுத்த நினைத்தால், இன ரீதியாகப் பிரித்துப் பார்க்காமல் திறமைக்கு முக்கியத்துவம் கொடுப்பதன் மூலம் சிறந்த நிர்வாகிகளை உருவாக்கி வெற்றியீட்ட முடியும். ■




கதை 1

●தெய்வேந்திரம்

பேய் அல்லது ஆவிகள் பற்றிய பல கதைகள் மிக நீண்ட காலமாகவே மக்கள் மத்தியில் உலாவி வருகின்றன. இதன் உண்மைத் தன்மை பற்றி ஆராய்ந்தவர்களில் மருத்துவர் ஆபிரகாம் கோவூர் முக்கியமானவர். இந்தியாவின் கேரளாவில் பிறந்த கோவூர் தன் வாழ்க்கையின் பெரும்பாலான காலத்தைக் கொழும்பில் கழித்தவர். இலங்கையில் பல பாடசாலைகளில் தாவரவியல் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். ஓய்வு பெற்ற பின்னர் ஆவிகள், பேய்களின் விந்தை நிகழ்வுகள் தொடர்பான தம் வாழ்நாள் ஆராய்ச்சியைப் பற்றிப் பேசவும் எழுதவும் தொடங்கினார்; இறுதிவரை அவர் தீவிர பகுத்தறிவாளராகக் கொள்கை முழக்கம் செய்தார். தான் கடவுளின் அவதாரம் அல்லது தெய்வீக ஆற்றல் உள்ள மகான் என்று சொல்லும் அனைவருமே பொய்யர்கள், ஏமாற்றுவாதிகள் என்பதை நிறுவுவதே கோவூரின் முக்கிய குறிக்கோளாக இருந்தது. பேய், ஆவி போன்றவற்றின் உண்மைத் தன்மை பற்றித் தான் தேடியவற்றை உரிய ஆதாரங்களுடன் பல நூல்களாக எழுதியிருக்கிறார் அவர். அவை பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுமுள்ளன. அவர் தமிழில் எழுதிய கோர இரவுகள், மனக் கோலங்கள் ஆகிய நூல்கள் வீரகேசரி வெளியீடுகளாக வந்திருக்கின்றன.

**இந்தப் பேய் அல்லது ஆவிகள் குறித்து மக்கள் தாம் கண்டவற்றையும் உணர்ந்தவற்றையும் தமது முன்னோர்களிடமிருந்து அறிந்தவற்றையும் பகிர்ந்து கொள்வதே இந்தப் பத்தியின் நோக்கம். ஆர்வமுள்ளவர்கள் செம்மண் பத்திரிகைக்கு அவை குறித்து எழுதுங்கள்.**



**1993.** நான் கொழும்பில் வேலை செய்த காலம். அதிகாலையில் கொழும்புக்குச் செல்வதற்காக முதல் நாள் இரவு குருநாகல் நகரிலுள்ள ஒரு வீடியோக் கடையில் நண்பர்களுடன் தங்கினேன். குருநாகல் நகர மத்தியில் எல்லா இடமும் வீதி விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. நான் தங்கிய மேல் மாடி அறையில் சுற்றிவரக் கண்ணாடிகள் பூட்டப்பட்ட ஜன்னல்கள் இருந்தன. நானும் இன்னும் 3 பேரும் அன்றிரவு தங்கினோம்.

அதே அறையிலிருந்து பார்த்தால் நகரத்தில் நடப்பது மிகத் தெளிவாகத் தெரியும். நான் ஜன்னல் ஓரமாகக் கிடந்த ஒரு கட்டிலில் படுத்தேன். இன்னொரு நண்பர் எதிரில் கிடந்த கட்டிலில் படுத்தார். ஏனைய இருவரும் நிலத்தில் பாய் போட்டுப் படுத்தார்கள். இரவு 2 மணியிருக்கும்... எனது கட்டிலின் மெத்தை மீது ஒருவர் நடந்து செல்வதைக் கண்டேன். உடனே எழும்ப முயற்சித்தபோது என்னால் எழும்ப முடியவில்லை. கதிர் என்ற நண்பரைக் கூப்பிட முயற்சித்தபோது நெஞ்சு அடைப்பதுபோல உணர்ந்தேன். அதுவும் முடியவில்லை.

ஜன்னல் கதவுகள் திறந்து இருந்தாதால் வெளிக் காற்று வீசிக்கொண்டிருந்தது. அதனால் மூச்சடைப்பு ஏற்பட வாய்ப்பிருக்கவில்லை. நான் சுய நினைவுடன் இருந்தேன். ஆனால், எழும்ப முடியவில்லை. நான் படுத்திருந்த அறைக்கு ஏறி வருவதற்கான மரப் பலகைப் படிகளினூடாக ஒருவர் கீழே இறங்கும் சப்தம் தெளிவாகக் கேட்டது. ஒவ்வொரு பலகைப் படிச் சத்தத்துடனும் மெட்டி ஒன்றின் சத்தமும் கேட்டது. அறைக்குள் கள்ளன் வந்து போகவில்லை என்று அப்போதுதான் உணர்ந்தேன்.

சற்று நேரத்தில் நான் எழுந்து வெளியே சென்று பார்த்தேன். நகரம் இயல்பாக அமைதியாக இருந்தது. எனக்கு உடல் வியர்த்திருந்தது. நண்பர்கள் மூவரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார்கள். யோசனைகள் சூழ்ந்தன. சற்று நேரம் வரை மனம் அலை பாய்ந்தது. சிறிது நேரத்தில் நான் நித்திரையாகி விட்டேன். அதிகாலையில் எழுந்து கொழும்பு செல்லப் புறப்பட்டபோது, நண்பர் கதிர் என்னுடன் பஸ் நிலையம் வரை வந்தார். அப்போது இரவு நடந்ததை அவரிடம் கூறினேன். அவர் சிரித்து விட்டு "உங்களுக்கு நடந்தது பரவாயில்லை" என்றார்.

"அந்த அறையில் அப்படி ஒரு பிரச்சினை இருக்குது. பல வருடங்களுக்கு முன் ஒரு பெண் வன்புணரப்பட்டுக் கொலைசெய்யப்பட்டிருக்கிறாள். அவளுடைய ஆவிதான் அது. கீழே கடை நடத்தும் நண்பர் ஒரு பெண் தலையிழுத்துக் கொண்டிருப்பதை யாருமற்ற அந்த அறைக்குள் கண்டிருக்கிறான். 2 மாதங்களுக்கு முன் ஒரு முஸ்லிம் பையன் பகல் வேளையில் மேல் மாடிக்கு ஏறியபோது யாரோ காலைப் பிடித்து இழுப்பதை உணர்ந்திருக்கிறான். அவனுக்கு உருவம் எதுவும் தெரியவில்லை. அவன் அலறியடித்துக் கொண்டு குதித்து ஓடிவிட்டான். அதற்குப் பிறகு அவன் அந்தக் கடைப் பக்கம் வருவதேயில்லை." என்று தொடர்ந்து கூறினார்.




இந்தச் சம்பவம் பொய்யில்லை. ஆனால், இதை விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்க முடியவில்லை என்பதே இதிலுள்ள மர்மம் என நினைக்கிறேன்.

energy evolved (pvt) Ltd.
E. B. CREASY & CO. PLC
Since 1878

முதலீடு

நீங்களும் சூரிய ஒளியிலிருந்து
மின் சாரத்தை உற்பத்தி செய்து
இலங்கை மின்சாரசபைக்கு விற்பனை
செய்வதன் மூலம் சிறந்ததொரு மாதாந்த
வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடியும் ...



சிறிய, நடுத்தர, பாரிய அளவிலான முதலீடுகள்.

அரச அங்கீகாரத்துடன் இலங்கை மின்சார சபையினால்
20 வருடங்களுக்கு செய்து கொள்ளப்படும் வலுவான ஒப்பந்தம்.

மத்திய வங்கியால் வழங்கப்படும் மானிய வட்டி
அடிப்டையில் இலகுவான முறையில் கடன் வசதி.

சிறிய முதலீட்டின் மூலம் உங்களது வீட்டு மின்
கட்டணத்தை (00 ரூ) பூச்சியம் ரூபாய் ஆக்கமுடியும்.

சூரிய ஒளி மின்சக்தி தொழில் நுட்பங்களில் 18 வருட அனுபவம்.

அலகு ஒன்றிற்கு ரூபாய் 22/- மின்சார சபையிடம்
இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

SPECIAL OFFERS ARE AVAILABLE

| வழமையான மின் கட்டணம் | முதலீடு |
|---|---|
| 3363.00 | 185000.00 |
| 6763.00 | 285000.00 |
| 13963.00 | 495000.00 |

ENERGY EVOLVED (PVT) LTD
071 1387066
வாடிக்கையாளர் சேவை நிலையம்
மட்டக்களப்பு கல்லடி பாலம்
மீன் இசை பூங்கா, கட்டடத்தொகுதி.

# செம்மண் கட்டுரை குறித்து எனது கருத்து...

▌மா. சிறீதரன்

செம்மண் பத்திரிகையின் ஆவணி மாத 22ஆம் திகதிய வார இதழில் 'வீதியை அகற்று - விசித்திரமான மக்கள் போராட்டம்' என்ற தலைப்பில் தின்னவேலி - தாழையடி கொங்கிறீட் வீதி தொடர்பான மக்கள் பிரச்சினை ஒன்றை வெளிக் கொணர்ந்திருப்பது வரவேற்கத்தக்கது. இந்தப் பிழைக்கு நல்லூர்ப் பிரதேச சபை சொல்லும் காரணம் போலவே வடக்கின் பிரதேச சபைகள் பலவும் தாம் பிழையாகச் செய்த வேலைகள் பலவற்றுக்கும் பொருத்தமற்ற விளக்கங்களைக் கூறி வருகின்றன.

உண்மையிலேயே இங்குள்ள பிரதேச சபைகள் இருவேறு நிர்வாகக் கட்டமைப்புக்குள் இயங்கி வருகின்றன. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மூலமாகத் தெரிவு செய்யப்படுகின்ற தவிசாளர் உட்படத் தெரிவாகும் சபை ஒன்று. மற்றது செயலர் தலைமையிலுள்ள அரச நிர்வாகம். இவ்விரு துறைசார் பிடுங்குப்பாடுகளும்கூட மக்களின் கருத்துக்களை உள்வாங்காமல் செயற்படுவதற்குக் காரணமாகின்றன. தவிசாளர் சொல்வது, செயலருக்குப் பிடிப்பதாகவிராது. செயலர் கூறுவது தவிசாளருக்குப் பிடிக்காது.

தவிசாளர் சார்ந்திருக்கும் கட்சிக்கும் ஏனைய சபை உறுப்பினர்களுக்குமான முரண்பாடும் வேறு அதில் சிக்கலாக இருக்கிறது. இந்த முரண்பாடு வடக்குக் கிழக்கில் அதிகம் சிக்கலை ஏற்படுத்தியிருக்கிறது. நல்லூர்ப் பிரதேச சபையிலும் இவ்வாறான பிரச்சினை உள்ளதா அல்லது வேறு ஏதேனும் உயர் மட்டத்தார் மூக்கை நுழைத்து இந்தக் காரியத்துக்கு அடிகோலினரா என்று கண்டறிய வேண்டும். ஏனெனில் இத்தகைய அதிகார முறைகேடுகளுக்குப் பின்னால் பலமான அரசியல் அல்லது அதிகார சக்திகள் நிச்சயம் இருக்கும்.

இலங்கையிலுள்ள வீதிகளை ஏ.பி. சி.டி.இ.எவ். எனத் தரம் பிரிக்கின்றனர். இதில் ஏ.பி. ரக வீதிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையாலும், சி தர வீதி வீதி அபிருத்தித் திணைக்களத்தாலும், டி தர வீதிகள் பெரும்பாலும் பெரிய வாய்க்கால்களுக்கு அருகில் இருப்பதால் நீர்ப்பாசனத் திணைக்களத்தாலும், ஈ ரக சிறிய வீதிகள் கமநல சேவை அபிவிருத்தித் திணைக்களத்தாலும் எவ் ரக கிராம வீதிகள் பிரதேச சபைகளாலும் பராமரிக்கப்படுவது நடைமுறை.

கிராமிய வீதிகள் என்பதால் பிரதேச சபையின் கீழ் உள்ள வீதிகளை அமைப்பதற்கும் மறுசீரமைப்பதற்கும் பொறியியலாளர் ஒருவர் நியமிக்கப்படுவதில்லை. கிராம வீதிகளை மறுசீரமைப்பது என்பது ஒரு சிறிய விடயமாகப் பார்க்கப்பட்ட போதிலும் அவற்றைச் சரிவரச் செய்து முடிக்கக்கூடிய ஆற்றல், அனுபவம் தொழில் நுட்ப உத்தியோகத்தருக்கு (ரெக்னிக்கல் ஒவ்பீசர்) முழுமையாக இருக்கும் என்று சொல்லிவிட முடியாது. தாளையடி வீதியில் வெள்ள நீரோட்டத்தைக் கவனத்தில் எடுக்காமல் கொங்கிறீட் போடப்பட்டதற்கு தொழில்நுட்ப அறிவற்ற ஒருவரின் மேற்பார்வை கூடக் காரணமாக இருந்திருக்கலாம்.

பல்வேறு வீதிகள் பாலங்கள் என ஒரு பிரதேச சபை நிறைவேற்ற வேண்டிய வேலைகள் நிறைய இருக்கின்றன. அமைக்கப்படவிருக்கின்ற பாதையின் நீளம், அகலம் என்பவற்றை மட்டும் வைத்து, அவற்றின் நில அமைவு சூழல் போன்றவற்றை நேரில் சென்று பார்வையிடாமலும் மக்களுடன் நேரில் பேசாமலும் தமது பாதீடுகளை (எஸ்ரிமேற்) தயாரிக்கின்றார்கள் பட வரைஞர்களும், தொழில் நுட்ப உத்தியோகத்தர்களும். இதனால் தாழையடி வீதிகள் போன்ற பல வீதிகள் பெரும் சிக்கல்களுக்குள் மாட்டியிருக்கின்றன.

உண்மையில் தாளையடி வீதிக்கான பாதீடுகள், முன்னெடுப்புகள் ஒரு வடிவமைப்புப் பொறியிலாளரால் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். ஏற்கனவே தண்ணீர்

> “செம்மண்ணில் வெளியாகிய அந்த விடயப்பரப்பை நாட்டின் அதிபர் செயலகத்துக்குச் சமர்ப்பிப்பதன் மூலமோ, அல்லது அந்தப் பகுதி மக்கள் தாம் தனிப்பட்ட முறையில் இது குறித்து அதிபர் செயலணிக்குத் தெரியப்படுத்துவதன் ஊடாகவோ சரியான தீர்வைப் பெற முடியும்”

திறம்பட வழிந்தோடக் கூடியதாக விருந்த தார் வீதியின் மட்டத்துக்கு 'லெவலிங்' செய்யப்பட்டிருக்க வேண்டும். இத்தகைய ஒரு வேலையைத் திட்டமிடக்கூடிய தொழில் நுட்ப அறிவு தொழில் நுட்ப அலுவலர் ஒருவருக்கு அப்பாற்பட்டது. இவ்வீதிகள் அடிப்படையில் கிராம வீதிகளாக இருந்தபோதிலும் கொங்கிறீட் வீதிகளைப் பிரதேச சபைக் கட்டமைப்புக்குள் மேற்கொள்ள அனுமதித்ததே ஒரு தொழில் நுட்பத் தவறுதான்.

இதைவிட யாழ்ப்பாணத்து ஒப்பந்தகாரர்களுக்குக் கொங்கிறீட் வேலைகளில் அனுபவம் போதாது (மிகக் குறுகிய காலத்துக்குள் பல கொங்கிறீட் வீதிகள் வெடித்துக் காணப்படுகின்றன.) பொறியியலாளர்களினதும், தொழில் நுட்பவியலாளர்களினதும், பட வரைஞர்களினதும் மனைவிமார்கள், மச்சான்மார்கள், சகோதரர்கள், நண்பர்கள் என ஒரு வகைப் பட்டாளத்தினர் தான் இவை சார்ந்த ஒப்பந்தப் புத்தகங்களை வைத்திருப்பவர்களாக அதிகம் காணப்படுவர். ஒப்பந்தகாரருக்கு அலுவலகங்கள், நிரந்தரப் பொறியியலாளர்கள், கட்டுமானத்துக்குரிய கனரக வாகனங்கள் எனப் பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் பல பெரிய ஒப்பந்தகாரர்களிடம் சாதாரண தள்ளுவண்டி கூடச் சொந்தமாக இருப்பதில்லை.

யாழ்ப்பாணத்திலுள்ள ஒப்பந்தகாரர்களின் அலுவலகங்களையும் அவர்களின் கொள்ளவையும் (உள்ளடக்கம்) பரீட்சிக்கும்படி அதிபர் செயலணிக்குத் தெரிவிப்பது இதற்கானதொரு சரியான தீர்வாக இருக்க முடியும். குறைந்தபட்சம் மாவட்டச் செயலர், ஆளுநர் போன்றவர்கள் அவற்றைப் பரிசீலித்தால் பல ஒப்பந்தகாரர்கள், ஒப்பந்த நிறுவனங்கள் என்பன யாழ்ப்பாணத்தில் கறுப்புப் பட்டியிலில் இடம்பெற வாய்ப்புண்டு. இந்த ஒப்பந்தகாரர்கள் தாம் எடுக்கும் ஒப்பந்தங்களை உப ஒப்பந்த காரர்களுக்கு விற்பனை செய்கின்றனர். இத்தகைய ஒரு வியாபாரம் யாழ். குடாநாட்டில் பல வருடங்களாக நடந்து வருகிறது.

தாழையடி மக்களின் பிரச்சினை நியாயமானது. கிடைத்த பணத்துக்கு வேலை செய்வது என்ற பிரதேச சபைகளின் செயற்பாடு, மக்களுக்கு உகந்ததாக அமையாது. அபிவிருத்தி செய்யப்பட்டதன் பின்னர்”முன்பு கிடந்ததே நல்லது” என்று கூறும் அளவுக்கு நிலமை மோசமாக இருக்கிறது. அரச நிதிகள் பிழையான வழிகளில் செலவழிக்கப்பட்டுள்ளது என்பதற்குத் தாழையடி கொங்கிறீட் வீதி தக்க உதாரணமாகும். இவ்வாறான உதாரணங்கள் அநேக ஊர்களில் உண்டு. செம்மணில் வெளியாகிய அந்த விடயப்பரப்பை நாட்டின் அதிபர் செயலகத்துக்குச் சமர்ப்பிப்பதன் மூலமோ, அல்லது அந்தப் பகுதி மக்கள் தாம் தனிப்பட்ட முறையில் இது குறித்து அதிபர் செயலணிக்குத் தெரியப்படுத்துவதன் ஊடாகவோ சரியான தீர்வைப் பெற முடியும்.

தாழையடி கொங்கிறீட் வீதி என்கிற கெட்ட உதாரணத்தை மழை காலம் நெருங்கியதும் சரியாக நிரூபிக்கும் வாய்ப்பு மக்களுக்கும் ஊடகங்களுக்கும் கிடைக்கும். அதை உரியவாறு பயன்படுத்திக் கொள்வதன் மூலம் இவ்வாறான பிழைகள் மீள நிகழாமல் தவிர்க்க முடியும். அத்தோடு இதன் பின்னால் இருக்கக்கூடிய அரச அதிகாரத்திலுள்ள பெரும் புள்ளிகளையும் கண்டறிந்து தண்டனைக்குள்ளாக்க முடியும். அவர்கள் தங்கள் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தப் பார்ப்பார்கள் என்றாலும் மக்கள் விடாப்பிடியாக நின்றால் வெற்றி அவர்களுக்கானதே! ■

தமிழ்

# கரைகிறது கிறீன்லாந்து!


மேற்கு ஐரோப்பிய நாடுகளில் ஒன்று கிறீன்லாந்து. ஆஸ்திரேலியாவுக்கு அடுத்து உலகிலேயே மிகப் பெரிய தீவு நாடு. வடதுருவத்தில் ஐரோப்பாவுக்கும் கனடாவுக்கும் இடைநடுவில் அமைந்திருக்கிறது. கனடாவின் தீவுகள் சிலவற்றை அடுத்தும் மேற்கு ஐரோப்பாவுடன் தொடர்புபடாத வகையிலும் கடல் தாண்டிப் பிரித்தானியா, ஐஸ்லாந்துக்கு அடுத்தபடியாகவும் அது இருக்கிறது. ஐரோப்பிய நாடுகள் குளிர் தேசங்களாக இருக்க அவற்றின் மேலுள்ள கிறீன்லாந்தின் நிலை எப்படியிருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள்...? சுருக்கமாகச் சொன்னால், கிறீன்லாந்து பனிப் பாலைவனத் தேசம்.

## நாடெங்கும் பனிப்பாளங்கள்...!

இந்தத் தீவு நாட்டின் 85 வீதமான நிலம், பனித் தகடுகளால் நிரந்தரமாக மூடப்பட்டுள்ளது. இந்தப் பகுதிகளில் எவரும் குடியிருக்க முடியாது. எஞ்சியிருக்கும் நிலப்பரப்பில்தான்,



மனிதர்களின் வாழ்க்கை. ஏராளமான கடல் கழிமுகங்களையும், மலைகளையும் கொண்டுள்ள மேற்குக் கிறீன்லாந்தின் கீழ்ப் பகுதிகளிலே அதிக மக்கள் வாழ்கிறார்கள். வடக்கெயுள்ள தூலே என்ற பிராந்தியத்திலும் சிறு தொகை மக்களைக் காண முடியும். உலகிலுள்ள தூய நீரில் 7 வீதம் இங்கே பனிப்பாளங்களாகக் காணப்படுகின்றன. இவை உருகினால், கடல் மட்டம் 7 மீற்றரால் உயரும் பெரு அபாயம் காத்திருக்கின்றது. இங்கே கடலில் மிதக்கும் பனிப் பாளங்களின் உயரம், கடல் மட்டத்திலிருந்து 3ஆயிரத்து 300 மீற்றர் என்று சொல்லப்படும்போது, யானைகள் புரண்டு படுத்திருப்பது போல இவை நீர்ப்பரப்பில் கிடப்பதைக் காணமுடியும். உலகறிந்த ரைற்றானிக் கப்பல் தன்னுடைய கடல் பயணத்தின் போது, இப்படியொரு இராட்சதப் பனிப்பாளத்தில் மோதியால்தான் அத்தனை உயிரிழப்புகள்!




## உருகத் தொடங்கியுள்ள பனி

கிரீன்லாந்தில் பனிப்பாறைகள் உருகுவது கடந்த வருடங்களில் அதிகரித்துள்ளது என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். 1948ஆம் ஆண்டில் இருந்து எடுக்கப்பட்டு வருகின்ற இது குறித்த பதிவுகளில் வரலாறு காணாத அளவுக்கு அங்கு பனி உருகி வருகிறது என்று சமீபத்திய ஆய்வுகள் தெரிவிக்கின்றன. கடந்த கோடையின்போது, கிறீன்லாந்துப் பகுதியில் தடைப்பட்டு நின்ற உயர் அழுத்த வளிமண்டலங்கள் தான் இதற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. உலக நாடுகளின் காபனீரொட்சைட் வாயு உற்பத்தி அதிகரிப்பே கிறீன்லாந்தில் அதிக பனி உருக்கத்துக்குக் காரணம் என்பது பொதுவான கருத்து. 1990களில் இருந்ததைவிட இப்போது 7 மடங்கு அதிகமாக அங்கு பனி உருகிக் கொண்டிருக்கிறது. கடந்த ஆண்டு முழுக்க கிரீன்லாந்தில் 532 ஜிகா தொன்கள் அளவுக்குப் பனி உருகியுள்ளது.

> கோடையின்போது, கிறீன்லாந்துப் பகுதியில் தடைப்பட்டு நின்ற உயர் அழுத்த வளிமண்டலங்கள் தான் இதற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. உலக நாடுகளின் காபனீரொட்சைட் வாயு உற்பத்தி அதிகரிப்பே கிறீன்லாந்தில் அதிக பனி உருக்கத்துக்குக் காரணம் என்பது பொதுவான கருத்து.

## கடல் மட்டம் அதிகரிக்கும் அபாயம்

கடந்த 30 ஆண்டுகளில் கிறீன்லாந்தில் அதிக அளவில் பனி உருகியதால் உலக அளவில் கடல் மட்டம் கணிசமாக உயர்ந்துள்ளது. பிரிட்டனைச் சுற்றிய கரைகள் 2.5 மீற்றர் அளவுக்கு நீரில் மூழ்குவதற்கு இணையானதாக, 2019 ஆம் ஆண்டில் கிறீன்லாந்தில் பனி உருகியுள்ளது என்று டென்மார்க்கைச் சேர்ந்த பருவநிலை விஞ்ஞானி மார்ட்டின் ஸ்டென்டெல் கூறுகிறார். கடந்த ஆண்டும், 2012 ஆம் ஆண்டும் உயர் அழுத்த மண்டலம் காரணமாகக் கிறீன்லாந்துப் பகுதியில் பனி உருகுவது அதிகரித்துள்ளது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். அதைவிட 2019ஆம் ஆண்டில் உருகிய பனியின் அளவு அதிகம் என்று குறிப்பிடும் ஆராய்ச்சியாளர்கள், கிறீன்லாந்தின் பனிப் பாறைகள் உருக்கம் கடல் நீர் மட்ட அதிகரிப்பக்கு வழிகோலி வருவது குறித்த கரிசனை தேவை என்றும் எச்சரிக்கின்றனர்.




## எச்சரிக்கைகள்...

'2019ஆம் ஆண்டில் அதிக அளவு பனி உருகி இருப்பது கவலையைத் தருகிறது. இந்தப் பொக்குத் தொடர்வதும் கவலை தருவதாக இருக்கிறது என்று தென் ஆபிரிக்காவின் கோபன் ஹேகனில் உள்ள டென்மார்க் வானிலை ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த கலாநிதி ரூத் மோட்ராம் தெரிவிக்கிறார். இதே போக்கில் கிறீன்லாந்தின் பனிப் பாறைகள் உருகிச் சென்றால், 2100 ஆம் ஆண்டளவில் உலக அளவில் கூடுதலாக 10 சென்ரி மீற்றர் அளவுக்குக் கடல் மட்டம் உயரும் என்று கூறப்படுகிறது. கிறீன்லாந்தில் பனி உருகுவது தொடருமானால், இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் ஆண்டுதோறும் 25 மில்லியன் பேர் வெள்ளத்தால் பாதிக்கப்படக் கூடும் என்று கட்டியம் கூறப்பட்டுள்ளது. காபனீர் ஒட்சைட் வாயுவின் உற்பத்தியைக் குறைத்து, உலக வெப்பமாதலைக் குறைத்தால், கிறீன்லாந்தில் பனி உருகும் வாய்ப்பும் குறையும். மனிதர்கள் அதற்குச் சம்மதிப்பார்களா?

## ஐஸ்வர்யா ராஜேஷுக்குப் பிறந்த ஆசை!

இந்தியாவின் தேசிய விருதைத் தட்டிச் சென்ற காக்கா முட்டை திரைப் படத்தில் முதன்மைப் பாத்திரங்களான அந்த 2 சிறுவர்களுக்கும் தாய் வேடத்தில் நடித்துக் கவனத்தை ஈர்த்தவர் ஐஸ்வர்யா ராஜேஷ். அந்தப் படத்தின் வெற்றியைத் தொடர்ந்து, தர்மதுரை, வடசென்னை, செக்கச் சிவந்த வானம், கனா, நம்ம வீட்டுப் பிள்ளை என அவர் நடித்த படங்களும், கதாபாத்திரங்களும் தொடர்ந்து பேசப்பட்டன. அடுத்து அவர் நடிப்பில் வெளிவர இருக்கும் படம், 'பூமிகா'.

இதில் அவர் மனநோய் மருத்துவராக நடித்து இருக்கிறார். இது வேதாளம் சொல்லும் கதை படத்தை இயக்கிய ரதீந்திரன் ஆர்.பிரசாத் இயக்கியுள்ள படம் இது. இதில் நடித்தது பற்றி ஐஸ்வர்யா ராஜேஷ் அண்மையில் கூறும்போது, "இது, எனக்கு 25ஆவது படம். கனமான கதாபாத்திரம். துணிச்சல் மிகுந்த வேடம். பொதுவாகக் கதையும், கதாபாத்திரமும் பிடித்தால் மட்டுமே நடிக்கிறேன்.

இனி வரலாற்றுப் படம் ஒன்றில் நடிக்க வேண்டும் என்று விரும்புகிறேன். குறிப்பாக, மனோரமாவின் வாழ்க்கை குறித்த படத்தில் நடித்து, தேசிய விருது பெற வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். இது, எனது





நீண்ட கால ஆசை. அது நிறைவேறினால் மகிழ்ச்சி' என்றுள்ளார்.

# எங்கட ஊருக்கு எப்ப கரண்ட் வரும்…?

## ஒரு குட்டி ஸ்ரோறி

● தயாளன்

வவுனியா வடக்கிலுள்ள சிறு கிராமம் காஞ்சுரமோட்டை. வவுனியா வடக்குப் பிரதேச செயலகத்தின் ஆட்சி அதிகார எல்லைக்குட்பட்ட சிறிய கிராமம் அது. தமிழர் தாயகத்தின் எல்லைப் புறமாகிய அங்கு வாழ்ந்த மக்கள் போர்க் காலங்களில் பல இன்னல்களைச் சந்தித்தனர். இதன் காரணமாக அங்கிருந்து இடம்பெயர்ந்து இந்தியா உட்பட வேறுபகுதிகளில் தஞ்சமடைந்தனர். **1980**கள் தொடங்கி **1990**கள் வரையான காலப் பகுதிக்குள் நடந்தேறிய சம்பவம் இது.

**2009**ஆம் ஆண்டில் உள்நாட்டுப்போர் முடிவுறுத்தப்பட்டுச் சில வருடங்களின் பின்னர் அந்த மக்கள் தமது பூர்வீக நிலம் நோக்கி ஓரிருவராக மீண்டு வரத் தொடங்கினர். தமது நிலத்தைத் தேடி வந்தவர்களுக்கு இடி காத்திருந்தது. காடு மண்டிப் போன அந்தக் கைவிடப்பட்ட தேசத்தில் தமது காணிகளைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது. கிணறுகள், கட்டடங்கள் எனத் தாம் வாழ்ந்த காலத்தில் அமைத்தவை சிதைந்து கிடந்த நிலையில் அந்த எச்சங்களை ஆதாரமாகக் கொண்டு தமது காணிகளை எல்லையிட்டுக் குடிகொண்டனர். அவர்கள் குடிகொண்ட கையுடன் அரசின் வன வளத் திணைக்கள ரூபத்தில் வந்திறங்கியது அவர்களுக்குப் பெரும் இடி.

“நாங்கள் திரும்ப வந்து காடுகளாக்கிடந்த எங்கட காணியளைக் கண்டுபிடிச்சித் துப்புரவாக்கினம். நாப்பது குடும்பங்கள் அளவில வந்து சேர்ந்திட்டம். கொட்டிலுகளைப் போட்டுக்கொண்டிருக்க… இந்தக் காணியள் தங்கடை திணைக்களத்துக்கு உட்பட்டதாம் எண்டு வனவளத் திணைக்களக்காரர் வந்து நிண்டிச்சினம். நாங்கள் சட்டவிரோதமா இருக்கிறம் எண்டும் அவை சொல்லுகினம்” இடம்பெயர்ந்துவிட்டு இருப்பிடம் திரும்பிய போது காடுகள் மண்டிக் கிடந்த மக்களின் காணிகளை வனவளத் திணைக்களம் அபகரித்துவிட்டதையும், தமது காணிகளில் அதிகாரம் செலுத்த முயன்றதையும் அழாத குறையாக ஒப்புவித்தனர் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள்.

பிறகு நடந்துவரும் சம்பவங்களை உங்களுக்குச் சொல்லித் தெரியவேண்டிய அவசியமிருக்காது. அந்தப் பகுதி மக்கள் தங்களது நிலத்துக்காக அரச பாசறைகளை நோக்கி அறவழிப் போராட்டங்களை முன்னெடுத்து அலைந்துதிரிவதையும், அரச நிர்வாகங்கள் தமக்கு வழங்கப்பட்டிருக்கின்ற நிகழ்ச்சி நிரலுக்கேற்ப அந்த மக்களுக்குக் காரணங்களும் கதைகளும் சொல்லி அலைக்கழித்து - இழுத்தடித்து வருவதையும் அந்த மக்களின் அவலம் தொடர்வதையும் ஒரு இதிகாசமாகவே எழுதி முடிக்கலாம்.

புதிதாகக் காணிகளைத் துப்புரவாக்கினாலோ, குடிமனைகள் அமைத்தாலோ கைது செய்யப்படுவீர்கள் என்கிற எச்சரிக்கைவேறு வன வளத் திணைக்களத்தினரால் அந்த மக்களுக்கு விடுக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் மக்களின் இருப்பிடத்துக்கான போராட்டம் தொடர்கிறது.

“நாங்கள் இருக்கிறதுக்கு வீடுகளைக் கட்ட வெளிக்கிட வனவளத் திணைக்களம் தடையை ஏற்படுத்துது. கடந்த ஆட்சிக் காலத்தில சஜித் பிரேமதாசவால எங்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுத் திட்டத்தைக் கட்ட வெளிக்கிட மறிச்சுப் போட்டினம். பிறகு நாங்கள் அதிகாரியளிட்டையும் அங்கையுமிஞ்சையுமா ஓடிப்போய் முறையிட்டு, அலைஞ்சு திரிஞ்சு ஒருமாதிரி அந்த வீடுகளைக் கட்டத் தொடங்கினம்.” என்றனர் காஞ்சுரமோட்டையைச் சேர்ந்தவர்கள்.

தாம் ஏற்கனவே வனவளத் திணைக்களத்தினரின் இலக்குகளாக இருக்கும் நிலையில் தமது தனிப்பட்ட பெயர் விவரங்கள் வெளியிடப்படுவதால் பழிவாங்கலுக்கு உட்படுத்தப்படுவோமோ என்று மக்கள் அஞ்சுகிறார்கள்.

வீடுகளைக் கட்ட ஆரம்பித்த கையுடன் மக்களுக்கும், வன வளத்துறையினருக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலை தொடர்கிறது. இதனால் பல வீடுகளும் முற்றுப்பெறாமல் கிடக்கின்றன. இந்த முறுகல் நிலையின் தொடர்ச்சியாகத்தான் அந்தப் பகுதி மக்களை இருளில் மூழ்கடித்து வைத்திருக்கின்றது வன வளத் திணைக்களம்.

“நெடுங்கேணி வெடிவைச்ச கல்லு வீதியில் மருதோடைக் கிராமத்தில் வரும் குறுக்கு றோட்டில… நெடுங்கேணியில் இருந்து கிட்டத்தட்ட **10** கிலோ மீற்றரில வரும் எங்கட ஊர். மருதோடைச் சந்தியில இருந்து பார்த்தா… **2** கிலோ மீற்றர் வரும். சண்டை முடிஞ்ச பிறகு ஊருக்குத் திரும்பி வந்த நாங்கள் அப்போதைய பிரதேச செயலருடைய முயற்சியாலைதான் இஞ்சை இருக்கவே முடிஞ்சுது. காட்டுக்க இருட்டுக்க கிடந்த எங்களுக்கு முன்னாள் மாகாண சபை அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கத்தின்ர முயற்சியாலை சோளர் கரண்ட் வசதி வந்து சேர்ந்துது. நெடுங்கேணியில இருந்து மருதோடை வரைக்கும் மின்சார சபைக்காரரின்ர கரண்ட் வருகுது. அதை எங்களுக்கும் தாங்கோ எண்டு நாங்கள் பல தடவை மின்சார சபைக் காரரிட்டக் கேட்டுக்கொண்டு வாறம். தாங்கள் எங்கடை இடத்துக்குக் கரண்டைக் கொண்டு வாறதுக்கு றோட்டுக்குக் குறுக்க சில மரங்கள் நிக்குது என்றும் அந்த மரங்களை அகற்றித் தருமாறு வனவளத் திணைக்களத்தக் கேட்டால் அவை அனுமதி தருகினமில்லை என்றும் மின்சார சபைக்காரர் சொல்லுகினம்”

> “காட்டுக்கு மத்தியில் வாழ்கின்ற 35 குடும்பங்களுக்கான மின்சாரத்தை, 16 மரங்களைக் காரணம் காட்டி இரண்டு ஆண்டுகளாக வழங்க மறுக்கின்ற அரச இயந்திரத்தின் அடாவடித்தனமும் மக்களின் பூர்வீக நிலத்தை அபகரித்து நிற்கிற சூக்குமமும் நிறைந்த கதை இது.”

தமது அதிகாரத்தை மீறி மக்கள் அங்கு இருப்பிடம் அமைத்துவிட்டதன் காரணமாகவும், அதனைத் தொடர்ந்து தமக்கு வன வளத் திணைக்களத்தால் ஏற்படுத்தப்படுகின்ற இடையூறுகளைப் பல்வேறு அரச மட்டங்களுக்கும், பொது வெளிவரையிலும் மக்கள் எடுத்துச் செல்வதன் விளைவாகவும் அந்தப் பகுதி மக்கள் மீது தனது அதிகார இறுக்கத்தைச் செலுத்திவருகிறது வனவளத் திணைக்களம். அதை மூடி மறைக்க அது பல பொய் மூடைகளையும் அவிழ்த்து விடுகிறது.

மக்களுக்கு மின்சாரத்தை வழங்குவதற்குத் தாம் தயாராக இருப்பதாகக் கூறுகிறது மின்சார சபைத் தரப்பு. ஆனால், இடையில் இருக்கும் மரங்களைத் தறிக்காமல் மின்சார வயர்களை இழுக்கமுடியாது என்பதில் அது விடாப்பிடியாக இருக்கின்றது. காடோ வனவளத்திணைக்களத்தின் பொறுப்பிலிருக்கும் விடயம் என்பதால் வன வளத் திணைக்களம் காரியம் சாதிக்கிறது. இழுத்தடிக்கிறது.

காடுகளுக்குள் இருக்கும் இராணுவ முகாம்களுக்கு நிரந்தரக் கட்டடங்கள் அமைக்கப்படுவதும் மின்சார வசதி வழங்கப்படுவதும் எப்படி நிகழ்ந்தது, நிகழ்கின்றது என்பது இவர்களுக்குத் தெரிந்திருக்க நியாமில்லைப் போலும். அங்கெல்லாம் இந்த விதிமுறைகளை இந்த இரு திணைக்களங்களினதும் அதிகாரிகள் எப்படியெல்லாம் நடைமுறைப்படுத்தியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்க மக்கள் ஆவலோடு காத்துக்கொண்டிருக்கிறார்கள். காடுகளுக்குள் வீடுகளைக் கட்டுவதற்கும் மின்சார இணைப்பைப் பெறுவதற்குமான வழிகளை இராணுவத்திடம் இருந்து கேட்டறிந்து கொள்வதற்கு அவர்கள் இப்போது தயாராகி வருகின்றார்கள், ஏனெனில் தமிழ் அரசியல்வாதிகள் உட்பட வேறு எவருக்கும் அது தெரிந்திருக்கவில்லை என்பதால்.

வனவளத் திணைக்களத்தில் வேண்டுமென்றே தடைகளை ஏற்படுத்துகிறார்கள் என்று சந்தேகப்பட போதுமானளவு ஆதாரங்கள் உள்ளன. முதலில் மின் இணைப்பை வழங்குவதானால் **150** மரங்களைத் தறிக்கவேண்டி வரும் என்று மக்களிடம் கூறியிருக்கிறார்கள். எமது செய்தியாளர் வனவளத் திணைக்களத்தினரிடம் இது பற்றிக் கேள்வி எழுப்பியபோது **54** மரங்கள் தடையாக இருக்கின்றன, **5** மரங்களுக்கு மேல் தறிப்பதென்றால் கொழும்பி



லிருந்துதான் அனுமதி பெறவேண்டும், நாங்கள் எழுதியிருக்கின்றோம் இன்னும் வரவில்லை என்று கூறினார்கள். மின்சார சபையோ மின் கம்பிகளை இழுப்பதற்குத் தடையாக நிற்கும் 16 மரங்களை மட்டும் முழுமையாகவோ பகுதியளவாகவோ அகற்றித் தந்தால் தமக்குப் போதுமானது என்கிறார்கள்.

இது தொடர்பில் வவுனியா வடக்குப் பிரதேச சபையின் தவிசாளர் தணிகாசலத்தைத் தொடர்பு கொண்டு கேட்டால், அந்தப் பகுதி மக்களுக்கு மின் இணைப்பை வழங்க வழியேற்படுத்திக்கொடுக்கும் முகமாக, உள்ளூராட்சி சபையால் அந்தக் காட்டுப் பாதையை நாம் சீர் செய்தபோது, அந்தப் பணியில் ஈடுபட்டிருந்த இயந்திரத்தையும் சாரதியையும் வனவளத் திணைக்களத்தினர் கைது செய்துவிட்டனர். இதன் காரணமாக எம்மால் உதவ முடியவில்லை என்று கைவிரித்தார்.

இந்தச் சர்ச்சைகளின் முக்கிய சூத்திரதாரியான வனவளத் திணைக்களத்தினரைத் தொடர்பு கொண்டு கேட்டால், அவர்கள் அதிகார நடைமுறையைப் புராணமாகப் பாடுகிறார்கள்.

அந்தப் பகுதிக்கு மின் இணைப்பை வழங்குவதற்கு மரங்கள் இடையூறாக இருப்பின் இலங்கை மின்சார சபையானது, பிரதேச செயலருக்கும் மாவட்டச் செயலருக்கும் அறிக்கையிட வேண்டும். பிரதேச செயலரின் முன்மொழிவை மாவட்டச் செயலர் தனது சிபாரிசுடன் மாவட்ட வனவளத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும். அங்கிருந்தே மரங்களை அகற்றுவதற்கு அனுமதி பெறப்பட வேண்டும் என்று தாங்கள் படாமாக்கி வைத்திருந்தவற்றைச் சொல்லினர்.

இரண்டு ஆண்டுகளாக இந்த நடைமுறை பின்பற்றப்படவில்லையா? எனப் பதில் கேள்வி கேட்டால், பணிப்பாளருக்குக் கடிதங்கள் இதுவரை முறையாக விண்ணப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்கின்றனர். மற்றைய அதிகாரிகளோ தாங்கள் எல்லாவற்றையும் முறைப்படி ஏற்கனவே செய்துவிட்டோம் என்கின்றனர்.

மக்களுக்கான சேவையைத் துரிதமாக வழங்க மறுப்பதற்கு அரச திணைக்களங்கள் ஒன்றையொன்று மாறிச் சாட்டுப்போக்குச் சொல்லி நிற்க, இது தொடர்பில் பிரதேச செயலர் இந்திரராசா பிரதாபனிடம் கேட்டோம்.

அந்த மக்களுக்கு மின்சாரத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதில் தாம் உறுதியாகவுள்ளார் எனவும், மரங்களைத் தறிக்கத் தாமதம் ஏற்பட்டால் அவற்றின் கிளைகளை வெட்டி அதனூடாகவேனும் மின் இணைப்பெற ஏற்பாடு செய்ய முயற்சிக்கிறார் எனவும், அந்த வீதியில் 300 மீற்றர் அளவுக்கே இந்தப் பிரச்சினை இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். ஆனால் எப்போது இவையெல்லாம் சாத்தியமாகி அந்த மக்களுக்கு மின்சாரம் கிடைக்கும் என்பது அவருக்கும் தெரியவில்லை.

"இந்தக் கிராமத்திற்கு அண்மையாகச் சிங்கள மக்களின் குடியிருப்பு வந்துவிட்டது. இதனை அண்டிய நிலங்களைச் சிங்கள மக்களுக்குப் பகிர்ந்தளிக்கும் கபட நோக்கத்துடனேயே வனவளத் திணைக்களம் செயற்படுகின்றது. 16 மரங்களுக்கு உள்ள மதிப்புக்கூட 35 தமிழ்க் குடும்பங்களுக்கு இந்த நாட்டில் இல்லை என்று அரசு கூறுகின்ற செய்தியாகவே இந்த விடயத்தை நாம் பார்க்கின்றோம்" என்றார் மருத்துவர் ப.சத்தியலிங்கம்.

தமக்குத் தொடர்பேயில்லாத புதியதொரு காட்டுக்குள் குடிகொண்டு, பெருமெடுப்பில் காடழிப்பில் ஈடுபட்டால், விடயம் வெளியே தெரிந்துவிடுமென்ற கபட நோக்கில் மெல்ல மெல்ல அந்தப் பகுதிக் காடுகளை அழித்து இன்றைக்குப் பெரியதொரு குடியேற்றத் தொகுதியாக உருவாகி அநுராதபுரத்தில் ஆரம்பித்து வவுனியா வரை மாவட்டம் தாண்டியும் ஊடுருவிவிட்ட சிங்களக் குடியேற்றம் ஒன்றைக் கூகுளின் வரைபடம் காட்டிக் கொடுத்திருந்தது பற்றிக் கடந்த இதழ்களில் கூறியிருந்தோம். பல தசாப்தங்களாகத் தாம் அங்கு வாழ்ந்து வருகிறோம் என்று பெருமளவில் காடழிப்பில் ஈடுபட்டு நிலம் பிடித்துவிட்ட அந்த மக்கள் இனி நியாயம் உரைப்பர்.

இவ்வாறிருக்க, இங்கு தமது பூர்வீக நிலத்துக்காகவும், அதில் குடியிருப்பதற்காகவும் மின்சாரம் பெறுவதற்குப் 16 மரங்களை அகற்றுவதற்கும் அந்தப் பகுதி மக்களுக்கு வன வளத் திணைக்களம் என்கிற அரச இயந்திரம் மிகுந்த சிரமத்தைக் கொடுத்து வருவது எவ்வளவு எதிரும் புதிரும்...? யாரிடம் முறையிடுவோம் பராபரமே!

# குடியேற்றங்களால் கைவிடப்படும் தொன்மைத் தமிழ்க் கிராமங்கள்

ஜெரா

முல்லைத்தீவு மாவட்டத்தின் பாரம்பரியமான தொன்மைக் கிராமங்களில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொட்டே மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர். அவ்வாறு தமிழ் மக்கள் தொன்று தொட்டு வாழ்ந்த கிராமங்கள் இன்று கைவிடப்பட்ட பெருங் காடுகளாகக் காட்சி தருகின்றன. இலங்கையில் ஆங்கிலேய காலனியாதிக்கம் ஏற்படும் வரையில் மக்கள் இவ்வகை தொன்மைக் கிராமங்களிலேயே வாழ்ந்திருக்கின்றனர். அதற்கான தொல்லியல் சான்றுகளை இப்போதும் அவ்விடங்களில் பார்க்கமுடியும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்காக பனங்காமம் தொடக்கம், கிழக்காக கொக்கிளாய் நீரேரிப் பகுதி வரைக்கும் இத்தகைய தொன்மைக் கிராமங்கள் மக்கள் நிலவுகைக்கு ஏற்ற வகையில் இருந்துள்ளன. வெள்ளம், வாந்திபேதி, மலேரியா, இயற்கைப் பேரிடர்கள் போன்றன காரணமாக அவ்விடங்களை விட்டு மக்கள் இடம்பெயர்ந்திருந்தாலும் தம் விவசாய நிலங்களையும், மரபார்ந்த ஆலயங்களையும் கைவிடாது பேணி வந்துள்ளனர். இன்றைக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தின் தற்போதைய நகரவாசிகளின் பூர்வீகக் காணிகள் வயல்நிலங்கள் அடர்வனங்களுக்கு நடுவில் இருக்கின்றமை இதற்குத் தகுந்த ஆதாரமாகும்.

இவ்வாறு வயல் நிலங்களாக இருக்கும் கிராமங்கள் பல திட்டமிட்ட குடியேற்றங்களின் விளைவுகள் காரணமாக கைவிடப்பட்டுள்ளன. உதாரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலர் பிரிவில் இருக்கின்ற பல கிராமங்களைக் குறிப்பிடலாம்.

வட இலங்கையின் வரலாற்றிலேயே அமரிவயல் என்கிற கிராமம் மிகத் தொன்மையான மருத்துவ பாரம்பரியத்தைக் கொண்டது. அத்துடன் மக்கள் அக்கிராமத்தில் செல்வச் செழிப்புடன் வாழ்ந்தும் வந்துள்ளனர். வன்னிப் பெருநிலம் முழுவதற்குமான மருத்துவ மத்திய நிலையமாக இக்கிராமம் தொழிற்பட்டிருக்கின்றது. இன்றைக்கும் வன்னிப் பெருநிலத்திஷல் இருக்கும் அனேக சுதேச மருத்துவர்கள் இக்கிராமத்திலிருந்து பிரிந்துசென்றவர்களாகவே இருக்கின்றனர்.

1983ஆம் ஆண்டுக்குப் பின்னர் மகாவலி எல் வலய குடியேற்ற விரிவாக்கம் காரணமாக அமரிவயல் கிராமத்தின் எல்லைப் பகுதிவரை பெரும்பான்மையினக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1984ஆம் ஆண்டுகளுக்குப் பின்னர் இன முரண்கள் அதிகரிக்க புதிதாக குடியேற்றப்பட்ட மக்கள் அமரிவயல் போன்ற அயல் தமிழ் கிராமங்களுக்குள் நுழைந்து வன்முறைகளில் ஈடுபட்டனர். முல்லைத்தீவின் கொக்கிளாயையும், அமரிவயலையும் இணைக்கும் பாலத்தை உடைத்தெறிந்தனர். ஆண்கள், பெண்கள் எனப் பால்வேறுபாடின்றிப் பலரும் படுகொலை செய்யப்பட்டனர்.

பாழடைந்த வீடுகளுக்கு இடையே பழைய பிள்ளையார் ஆலயம் ஒன்று உள்ளது. அக் கிராமத்தவர்களுக்குரிய வயல் நிலங்கள் பெரும்பான்மையின மக்களுக்கு உரிமை மாற்றப்பட்டுவிட்டன. தற்போது இக் கிராமத்தின் எல்லைப் பகுதியில் இருக்கும் காணி உள்ளடங்கலாக 800 ஏக்கர் நிலம் புதிய பௌத்த விகாரையொன்றை அமைப்பதற்காகவும், அப் பௌத்த விகாரைக்குத் தானமாக வழங்கப்படுவதற்காகவும் வழங்கப்பட உள்ளன.

இதனால் ஏற்பட்ட அச்சநிலைமைகள் காரணமாக அக்கிராமத்தின் பூர்வீக மக்களால் அங்கு வாழமுடியாது போனது. இதனால் அமரிவயல் கிராமத்தை விட்டு மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக வெளியேறினர். வெளி நாடுகளுக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தின் பிற இடங்களுக்கும் அக்கிராம மக்கள் இடம் பெயர்ந்து சென்றுவிட்டனர். தற்போது அக்கிராமம் காடாகக் காட்சியளிக்கிறது.

பாழடைந்த வீடுகளுக்கு இடையே பழைய பிள்ளையார் ஆலயம் ஒன்று உள்ளது. அக் கிராமத்தவர்களுக்குரிய வயல் நிலங்கள் பெரும்பான்மையின மக்களுக்கு உரிமைமாற்றப் பட்டுவிட்டன. தற்போது இக் கிராமத்தின் எல்லைப் பகுதியில் இருக்கும் காணி உள்ளடங் கலாக 800 ஏக்கர் நிலம் புதிய பௌத்த விகாரையொன்றை அமைப்பதற்காகவும், அப் பௌத்த விகாரைக்கு தானமாக வழங்கப்படுவதற்காகவும் வழங்கப்பட உள்ளன.

இலங்கையில் போர் நிறைவுற்று அமைதிக்காலம் திரும்பியதாக அறிவிக்கப்பட்டு பதினொரு ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் குறித்த கிராம மக்கள் தம் பூர்வீக நிலத்துக்குத் திரும்பமுடியாதுள்ளமையும் அவர்களின் கிராமம் அபகரிக் கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

அதுபோலவே முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப் பற்று பிரதேச செயலர் பிரிவுக்குள் வருகின்றன ஆண்டான்குளம் கிராமமும் கைவிடப்பட்டிருக்கிறது. முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகளவு பரந்த வயல்நிலங்களைக் கொண்ட கிராமமாக ஆண்டான்குளம் காணப்பட்டது. பிரித்தானியர் வன்னியை நிர்வாகப்படுத்தும் போதே இக்கிராமத்தில் பெருமளவு நெல்விளைச்சல் இருந்துள்ளமை பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அவ்வகையான விவசாய கிராமத்தில் 1985ஆம் ஆண்டு காலப்பகுதியில் முல்லைத் தீவின் எல்லைக் கிராமங்களில் ஏற்படுத்தப்பட்ட குடியேற்றங்கள் காரணமாக வன்முறைகள் இடம்பெற்றன. இவ்வன்முறை களைத் தொடர்ந்து எல்லைக் கிராமங்களில் சிறுபான்மையினராகிய தமிழ் மக்கள் உயிர்வாழ முடியாத அசாதாரண நிலைமைகள் ஏற்பட்டன. இதனால் ஆண்டான்குளம் கிராமமும் முற்றாகக் கைவிடப்பட்டது.

தற்போது காடாக மாறிவிட்ட ஆண்டான்குளத்தின் தென் பகுதி வயல்கள் பெரும்பான்மையின மக்களால் அடாத்தாக அப கரிக்கப் பட்டுப் பயிர்ச்செய்கை நடைபெறுகிறது. ஏனைய பகுதிகள் காடாக மாறிவிட, அனேக வயல்பரப்பு நிலத்திலிருந்து தாழிறங்கிவிட்டது.

மணலாற்றில் (வெலி ஓயா) குடியேற்றப்பட்டுள்ள சிங்கள மக்களுக்காக மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் கெவுலுவாவி சுற்றாடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது எனச் சொல்லப்படுகிறது. கெவுலுவாவியை ஆழமாக்க ஆண்டான்குளம் வயல் பகுதிகள் தாழிறங்கி நீர்தேங்கும் பகுதியாக மாறிவருகின்றன. இதனால் மிகத் தொன்மையான வயல் கிராமமான ஆண்டான்குளமும் கைவிடப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது. ■

# கொரோனா இல்லாத 10 நாடுகள்!

■ ஜோதா

நாடுகளுக்குள்ளேயும், நாடுகளுக்கிடையேயும் நடந்து வந்த அனைத்துப் பிரச்சினைகளையும் புறந்தள்ளித் தனியொரு பிரச்சினையாக உருவெடுத்திருப்பது கொரோனா. உலகப் பெருந்தொற்று என்று வர்ணிக்கப்படுகின்ற அது உலக நாடுகளில் பரவிப் பல நாடுகளையும் தனது பிடிக்குள் வைத்திருக்கிறது - ஆட்டிப் படைக்கிறது. இவ்வாறிருக்க, இந்தக் கொரோனா வைரஸின் பிடிக்கு அகப் படாத நாடுகளும் இருக்கின்றன. கொரோனா பரவாத அந்த நாடுகளை உலக அதிசயங்களாகப் பார்க்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த நாடுகள் அனைத்தும் தீவு நாடுகள் என்பது கவனத்துக்குரியது. தீவுகளாகவும், சிறிய நாடுகளாகவும் காணப்படுகின்ற இந்த நாடுகள் ஆஸ்திரேலியாவை ஒட்டி அல்லது அண்மித்துக் காணப்படுகின்றன.


## 10 தீவு நாடுகள்

பலாவ், மைக்ரோனேஷியா, மார்ஷல் தீவுகள், நௌரு, கிரிபதி, சாலமன் தீவுகள், துவாலு, சமோவா, வனுவாட்டு, டோங்கா ஆகிய பத்துத் தீவு நாடுகளிலும் இதுவரையில் கொரோனா வைரஸ் உணரப்படவில்லை. பலாவ் என்பது ஆஸ்திரேலியா - பப்புவா நியூகினியாவுக்கு வடக்கேயுள்ள ஒரு தீவு. 1982ஆம் ஆண்டு அங்கு முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட உணவு விடுதியின் தோற்றத்துடன் ஆரம்பமாகியிருக்கிறது அந்த நாட்டின் வர்த்தகச் செயற்பாடுகள். அன்றிலிருந்து அந்த நாட்டில் சுற்றுலாத்துறை அதிவேகமாக வளரத் தொடங்கி 2019ஆம் ஆண்டில் 90ஆயிரம் சுற்றுலாப் பயணிகளை உள்ளீர்த்துள்ளது. கொரோனா வைரஸ் பரவல் பேச்சு ஆரம்பித்தவுடன் அதிரடியாகத் தனது போக்குவரத்துகளைத் தடைசெய்து தன்னைத் தற்காத்துக் கொண்டது பலாவ்.

## மார்ஷல் தீவுகள்

இந்த நாட்டிலிருந்து நான்காயிரம் கிலோ மீற்றர் தொலைவிலுள்ளவை மார்ஷல் தீவுகள். அங்கும் இதுவரை ஒருவருக்கு கூடக் கொரோனா பதிவாகவில்லை. பலாவ் நாட்டைப் போன்று மார்ஷல் தீவுகள் முற்றிலும் சுற்றுலாத்து றையை சார்ந்திருக்கவில்லை. சுற்று லாத்துறை வீழ்ச்சியை இந்தத் தீவுகளால் சமாளிக்க முடிந்தாலும் தமது பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கும் மீன்பிடித்துறை கொரோனா அச்சுறுத்தலால் பாதிக்கப்பட்டிருப்பதை ஈடுசெய்ய முடியாமலிருக்கிறது மார்ஷல் தீவுகளால்.

கொரோனா இல்லாத நாடாகத் தொடர்ந்து இருப்பதற்காக, பாதிக்கப்பட்ட நாடுகளில் இருந்து வரும் படகுகள் மார்ஷல் தீவுகளிலுள்ள துறை முகங்களுக்குள் நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. பிற கப்பல்கள் துறைமுகத்திற்குள் நுழைவதற்கு முன்பு கடலில் 14 நாள்கள் தனி




மைப்படுத்திக்கொள்ள வேண்டும்.

இதுபோன்ற கட்டுப்பாடுகளால், அங்கு மீன்பிடிச் செயற் பாடுகள் வீழ்ச்சியடைந்துள்ளன.

இந்த இரண்டு தீவுகளையும்போலத்தான் இந்தப் பகுதியில் அமைந்திருக்கின்ற ஏனைய எட்டுத் தீவுகளின் நிலையும். கொரோனாவிலிருந்து தம்மைத் தற்காத்துக் கொண்டாலும் தமது வாழ்வாதாரத் தொழிற்துறை முற்றிலும் முடங்கிப் போயுள்ளதால் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றன.

## பாதிப்பிலிருந்து தப்ப முடியாது

சுருங்கச் சொன்னால், கொரோனா வைரஸ் நெருங்காமல் பார்த்துக்கொள்ள முடியும், ஆனால் அதை வெல்ல முடியாது. ஏதோ ஒரு வகையில் அது இந்த நாடுகளுக்குப் பாதிப்பை விளைவிக்கிறது.

கொரோனா இல்லாத நாடாகத் தொடர எல்லைகளைத் தொடர்ந்து மூடுவதால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டாலும், அந்த நிலையிருந்து பின்வாங்கவே கூடாது என்று கூறுபவர்களும் இந்த நாடுகளில் இருக்கின்றனர்.

வனுவாட்டின் தலைநகர் போர்ட் விலாவிலிருந்து சுமார் 270 கிலோ மீற்றர் தூரத்திலிருக்கிறது அம்பே என்ற தீவு. அங்கு சுமார் பத்தாயிரம் பேர் வாழ்கின்றனர். ''முடிந்தவரை நாட்டின் எல்லைகளை மூடியே வையுங்கள்'' என்கின்றனர் அவர்கள். வனுவாட்டிலுள்ள 80 சதவீத மக்கள் இன்னமும் கிராமப்புறங்களிலே வசிப்பது மட்டுமின்றித் தங்க ளுக்குத் தேவையான உணவைத் தாங்களே விளைவித்து உண்டு வாழ்கிறார்கள். நோய்த் தொற்றிலிருந்து பாதுகாப்பாக இருப்பதே அவர்களுக்கு மிக முக்கியமாக உள்ளது.

> “கொரோனா வைரஸ் நெருங்காமல் பார்த்துக்கொள்ள முடியும், ஆனால் அதை வெல்ல முடியாது. கொரோனா இல்லாத நாடாகத் தொடர எல்லைகளைத் தொடர்ந்து மூடுவதால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டாலும், அந்த நிலையிருந்து பின்வாங்கவே கூடாது என்று கூறுபவர்களும் இந்த நாடுகளில் இருக்கின்றனர்.”



கதிரேசன் காத்தவராயன்

# தட்டுப்பாடு எப்பிடி வருகுது?

தட்டுப்பாடு எண்டால் என்ன? எண்ட கேள்வியோடை என்னை எங்கடை வாசிய சாலைக் கூட்டாளியள் வரவேற்ற திலை என்னவோ உள்நோக்கம் இருக்கோ தெரியாது. இப்ப எங்க போனாலும் எல்லாத்துக்கும் தட்டுப்பாடுதானே? இவங்கள் எதைக் கேட்கிறாங்கள்? ஏனெண்டால் அண்டாடச் சீவியச் சாமானுகள் தொடக்கம் அரசியல் வரைக்குமுள்ள பிரச்சினையல்லோ இந்தத் தட்டுப்பாடு என்டிற அய்ற்றம்?

"ஆ... என்னப்பா அது? என்ன கேட்டனிங்கள்?" யோசிச்சு முடிவெடுக்க ஓர் அவகாசமாய் இருக்கட்டு மெண்டு கேட்டன். அதிலையிருந்த கந்தசாமி "உண்ணாணை விளங்கேல்லையோ?" எண்டார்.

"உண்மையாத்தானப்பா விளங்கியிருந்தா பதிலைச் சொல்லியிருக்க மாட்டனே?" எண்டு சொல்லிக் கொண்டு அதிலை இருந்தன்.

"இஞ்சார் தட்டுப்பாடெண்டால் என்ன எண்டல்லே கேட்டனான்" எண்டிச்சுது மருதலிங்கம். வில்லங்கப் பேர்வழி.

"அட..அதோ! தேவைக்குக் குறைவாயிருக்கிறதுதான் தட்டுப்பாடு. அதுக்கென்ன இப்ப திடீரெண்டு?" எண்டதுக்கு, "இல்லைக் கதிரேசண்ணை டொக்ரர்மாருக்குத் தட்டுப்பாடெண்டும் தனியார் உற்பத்தியாலை தட்டுப்பாட்டைப் போக்கலாமெண்டும் ஒரு டொக்ரர் சொன்னதெண்ட செய்தியை நீ வாசிக்கேல்லையோ?" எண்டார்.

"படிச்சனான்தான்..... அதிலை என்ன உனக்குச் சந்தேகம் வந்திட்டுது?" எண்டொரு எதிர்க் கேள்வியைக் கேட்டன்.

"இஞ்சார் கதிரேசு... அக்கறையில்லாத மாதிரிக் கதைக்காதை... இதொரு பொதுப்பிரச்சினையில்லோ?" எண்டு கந்தசாமியர் நோண்டினார். "ம்..ம்ம்...பிரச்சினைதான்... ஆனால் உதுக்குள்ள நிறையக் கதையள் இருக்கெண்டும் சிலசில கதையள் காதிலை பட்டுதுகள்.. உண்மை பொய் எதுவெண்டு ஆரய்ஞ்சுதான் பாக்க வேணும் கண்டியளோ". "அந்தக் கதையள் தானே என்னவெண்டு கேக்கிறம்... நீ என்னெண்டால்?" எண்டு சரவணையர் சிடுசிடுத்தார்.

"இஞ்சார் நான்தான் கதைச்சதெண்டு இருக்கக்கூடாது பாருங்கோ... அரச ஆசுப்பத்திரியளிலைதான் டொக்ரர்மார் இல்லை.. அது இல்லை.. இது இல்லை...போற சனம் வருத்தத்துக்கு மருந்து வாங்குதுகளோ இல்லையோ நல்லாய் ஏச்சுப் பேச்சு வாங்குதுகள்... இல்லையோ? ஆனால் காசு ஆசுப்பத்திரியளிலை எல்லாமே கிடக்குதோ இல்லையோ? எனிக் கதையள் பேச்சுகள் எண்டு வேறு எவ்வளவு மரியாதை.... தட்டுப்பாடெண்டா என்னண்டு வாறதெண்டு தெரியுமோ?

> அரச ஆசுப்பத்திரியளிலைதான் டொக்ரர்மார் இல்லை.. அது இல்லை.. இது இல்லை...போறசனம் வருத்தத்துக்கு மருந்து வாங்குதுகளோ இல்லையோ நல்லாய் ஏச்சுப் பேச்சுவாங்குதுகள்... காசு ஆசுப்பத்திரியளிலை எல்லாமே கிடக்குதோ இல்லையோ? எனிக் கதையள் பேச்சுகள் எண்டு வேறு எவ்வளவு மரியாதை....

ஒண்டு உற்பத்தி குறைவாயிருக்க வேணும். அல்லது பதுக்கப்பட்டிருக்க வேணும்...இதிலை எது இப்ப பிரச்சினை எண்டது விளங்குமெண்டு நினைக்கிறன்."

"வருசத்துக்கு வருசம் கம்பசுக்கு பொடி பெட்டையள் போகுதுகள்.. படிச்சு எங்களிலை பழகிப் போட்டு டொக்ரராய் வெளிக்கிடுகுதுகள்... இல்லையே?" கதிரேசண்ணை எண்டு தன்ர அறிவைக் கந்தசாமியர் காட்டினார்.


"ஓஓஓ! சரியாச் சொன்னாய் கந்தசாமி...படிப்பு முடிஞ்ச வுடனயே கொஞ்சம் ஏற்றுமதியுமெல்லே ஆகுதுகள்.. அதையுமல்லே பாக்க வேணும்" எண்டார் சரவணையர்.

"சரிதான் அரச காசிலைதானே உவை படிச்சவை எண்டு கதைச்சாலும் அது எங்கட காசுதான்... அதிலை படிச்சுப்போட்டு... படிப்புக்குத் தனிய அரச காசு காணாது தங்கட காசு சிலவளிச்சுத்தான் படிச்சதெண்ட கதையைப் போடுகினம். எனவே அதை உழைக்க வேண்டாமோ? எண்டல்லே சில பேர் கதைக்கினம். போனவை போக வறுகுகிறவை வறுக நேர்மையாய்ச் சரியான கஸ்ரப்பட்டு வேலை செய்யிற நல்ல டொக்ரர் மாருக்கும் கெட்ட பேரல்லே அநியாயமாய் வருகுது" என்டு நிப்பாட்டினன்.

"சரிதான் கதிரேசண்ணை பிறை வேற்றாய்ப் படிப்பிச்சு டொக்ரர் மாரைத் தயாரிக்கிறது சரிவருமோ?" சரவணையர் இப்பிடிக் கேட்டார்.

"இஞ்சார் சரவணை மன ஆறுதலுக்குக் கதைக்கிற கதைய நீ பெரிசாக்கிக் கனக்க யோசிக்காதை. மூளை கீழை தட்டிப்போகுடும். படிச்சவங்கள் எங்கட சனம் எண்டு விருப்பமாய் அரச ஆசுப்பத்திரியளிலை தங்கடை கடமையைச் செய்தாலே காணும்.

ஆனால்... அதுதான் வலு கஸ்டமாயல்லே கிடக்குது.... ஒருத்தன் நல்லது செய்யிற தெண்டால் எங்கடையளுக்குப் பொறுக்காதல்லோ? சேவைதான் நோக்கமெண்டு நிக்கிறவைக்கும், இல்லையில்லை உதுவும் வியாபாரந்தானெண்டு சனத்திட்டை வருத்தத்தோடை வருமானத்தையும் கேட்டு உறுஞ் சிறவை அரியண்டம் குடுக்கினமெண்டும் ஒரு கதை காதிலை பட்டுது. பொதுவாய் இந்தக் குணம் எங்கடை பரவணிக் குண மல்லே..." எண்டு மூச் செடுக்க நிப்பாட்டிப்போட்டு வந்திட்டன்.. ■



நவீனா

# ஆல்ஃபா ஆண்கள்

உம்பெர்த்தோ எக்கோ என்பவர் எழுதிய 'பௌடலினோ' நாவலில் சுமார் எழுபது வயதாகும் நாயகன் மீது, இருபது வயதுடைய வேற்றுக் கிரகப் பெண் காதல்வயப்பட்டு, பல தடைகளுக்குப் பின் காதலைச் சொல்லி, அவனை முதன் முதலாக முத்தமிடுவாள். வயது என்ற பதத்தின் அர்த்தம் தெரியாத அவள், நாயகனின் வயதைக் கேட்கும்போது, 'நான் இப்போதுதான் பிறந்திருக்கிறேன்' என்பான் அவன். நாவலின் இந்த வரிகளைக் கடந்துவரும்போது ஏற்படும் சிலிர்ப்பு, நாயகனின் வயதை மறக்கச்செய்துவிடுகிறது. ஆல்ஃபா ஆண் எனும் சொல்லாடல் முதலில் மிருகங்களின் வேட்டைக் குழுத் தலைவனுக்கு வழங்கப்பட்டு, பின் சமூகத்தில் தலைமைப் பண்பு மிக்க ஆணுக்கானதாய் மாறி, தற்காலத்தில் வயதில் மூத்த ஆளுமைத்திறன் கொண்டவர்களைக் குறிப்பதாகப் பொருள்கொண்டுவிட்டது. இன்று பெரும்பாலானவர்கள் சமூக வலைதளங்களில் ஆல்ஃபா ஆண்களைப் பற்றிப் புகழ்ந்து எழுதுவதாலும், திரைப்படங்களிலும் அவர்களைக் கொண்டாடும் விதமாகக் காட்சிகள் அமைக்கப்படுவதாலும் வயது முதிர்ந்த எவரையும் ஆல்ஃபா ஆண்களாக இளம் பெண்கள் சித்தரித்துக்கொள்ளும்படியான நிலைக்குத் தள்ளப்பட்டி ருக்கின்றனர்.

இப்படிப்பட்ட உளவியல் சிக்கல் ஒன்றில் மாட்டிக்கொண்ட அஸ்வினி, தினந்தோறும் காலையிலும் மாலையிலும் கல்லூரி வாசலில் தான் எதிர்கொண்ட ஐம்பது வயது மதிக்கத்தக்க ஓர் ஆணின் மீது காதலில் விழுவதற்கு, ஆங்கில இலக்கியத்தில் அவள் வாசித்த ஜேன் ஆஸ்டின் நாவல்களும் ஒரு வகையில் காரணம். அந்த நாவல்களில் விரவிவந்த காதலும் திருமணமும் ஒரு மூத்த ஆணுக்கும் இளம் பெண்ணுக்கும் நிகழ்வதாய் அமைந்துவிட, அவள் தினமும் பார்த்த அந்த நபரைத் தான் தேடிக்கொண்டிருந்த ஆல்ஃபா ஆணாக உருவகப்படுத்திக் கொண்டாள். திரைப்படங்களில்கூட மூத்த நாயகர்களுக்கும் இளம்பெண்களுக்குமான காதலையே அவள் சிலாகித்துப் பேசிவந்தாள். இத்தனைக்கும் அவள் நல்ல திறமைசாலி. வகுப்பில் கேட்கப்படும் கேள்விகள் அனைத்துக்கும் முதலில் அவள்தான் பதில்கூற வேண்டுமென்று நினைப்பாள். வடிவான முகம், மெல்லிய தேகம், வகுப்பில் அமர்ந்திருக்கும் போது தரையில் படியவந்து விழும்படியான




நீண்ட கூந்தல் எனப் பெண்களுக்கானதாய் ஊர் கூறும் லட்சணங்கள் அனைத்தும் நிறைந்தவள்.

பழக ஆரம்பித்த சில நாள்களிலேயே இருவரும் ரகசியமாகத் திருமணத்தைப் பதிவுசெய்து கொண்டது இருபது வயதான அஸ்வினிக்கு ஆரம்பத்தில் சாதனையாகத் தெரிந்தது. எவரும் செய்யத் துணியாத காரியத்தைச் செய்துவிட்ட பெருமிதத்தோடு இருந்தவளுக்கு அந்த மகிழ்ச்சி சில நாள்கள்கூட நீடிக்கவில்லை. அந்த நபருக்கு ஏற்கெனவே திருமணமாகி மனைவியை விவாகரத்துச் செய்த நிலையில், அவருக்கு இரண்டு பெண் குழந்தைகள் இருப்பது பின்னர் தெரியவந்தபோது அஸ்வினிக்கு இடியிறங்கியதுபோல் இருந்தது. திருமண விடயத்தில் அவளுக்கிருந்த ஆர்வக்கோளாறு, அவள் வாழ்க்கையைப் புரட்டிப்போட்டுவிட்டது. மிகப் பெரிய தவறுசெய்துவிட்டதாக உணர்ந்த அவள் முகத்தில் குற்றவுணர்வும் அப்பிக்கொண்டது. 'வயசுல மூத்தவர் என்ன அப்பா மாதிரிப் பார்த்துக் கொள்ளுவார் என்று நினச்சுத்தான் அவரைக் கல்யாணம் பண்ணினன். ஆனா, அவரோட பொண்ணுங்கள இனிமேல் நான்தான் அம்மா மாதிரி பாத்துக்கணும்னு சொல்றார்' என்ற அஸ்வினிக்கு, இன்னொரு அதிர்ச்சியும் காத்திருந்தது. அவளது கணவனின் மூத்த மகள் அவள் பயிலும் அதே கல்லூரியில் இளங்கலை இறுதியாண்டு படித்துக்கொண்டிருக்கிறாள் என்பது அஸ்விணிக்குக் கூடுதல் மன அழுத்தத்தைக் கொடுத்தது. 'அவளுக்கும் எனக்கும் ஒரே வயசு. நான் எப்பிடி அவளை மகளாக நினைக்க முடியும்?' என்ற கேள்வி நியாயமானதுதான். அந்தக் கேள்வி எழுவதற்கான சாத்தியம் ஏன் முன்பே அவளுக்கு வாய்க்கவில்லை?

# கிழக்கில் மாகாண சபைத் தேர்தல் காய்ச்சல்! ஆளப்போவது யார்...?

அகீல்

இலங்கையின் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட ஒன்பது மாகாணங்களுக்குமான தேர்தல்களை ஒரே நாளில் நடத்துவதற்கு இலங்கை அரசு திட்டமிட்டுள்ளது என்று தகவலொன்று ஏற்கனவே வெளியாகியிருந்தது. மாகாண சபைத் தேர்தல்களை அரசு தாமதிக்காது நடத்துவதற்கு முன்வர வேண்டும் என்று கபே அமைப்பு உட்பட வேறு சில அமைப்புகளும் கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றன. மாகாண சபைத் தேர்தல்கள் அடுத்த வருடம் முற்பகுதியில் நடைபெறவிருக்கின்றன என்ற நம்பிக்கையும் மக்களிடையே ஊட்டப்பட்டிருந்தது. ஆனால், தற்போதைய நிலையில், மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறுமா? என்ற கேள்விகளே பரவலாக எழுந்திருக்கின்றன.




### மாகாணசபை முறைமையை ஒழிக்க முஸ்தீபு

பேரினவாத சக்திகள் மட்டுமன்றி, ஆளும் கட்சியின் முக்கிய சில உறுப்பினர்களும்கூட மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்தப்படுவதைத் தடுப்பதற்கும், ஏன்? மாகாண சபை முறைமையை ஒழிப்பதற்கும்கூட வரிந்து கட்டிக்கொண்டு நிற்கின்றனர். மாகாணசபைகள் அமைவதற்கு மூலகாரணமாகவிருந்த 13ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டமே இந்த நாட்டுக்கு அவசியமில்லை என இவர்கள் வாதிட்டுவருகின்றனர். இதனால் அச்ச நிலை ஒன்று தோன்றியுள்ளது.

குறிப்பாக இன்றைய அரசைச் சார்ந்த உள்ளூராட்சி, மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சர் சரத் வீர சேகர, விமல் வீரவன்ச ஆகியோர் இது விடயத்தில் கடும்போக்குடன் கருத்து வெளியிட்டு வருவதையும் அவதானிக்க முடிகிறது. இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர இதற்கு ஒருபடி மேலே சென்று மாகாண சபைகள் ஆரம்பிக்கப்பட்டு இதுவரை கிடைத்த பயன் என்ன? என்பதை ஆராயவும் முனைந்துள்ளார்.

13ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டம் தமிழ் பேசும் மக்களின் தேசியப் பிரச்சினைக்கு ஒரு தீர்வுத் திட்டமாக இல்லாமலிருப்பினும்கூட அது தீர்வைக் கண்டடைவதற்கு வழியமைக்கின்ற ஒரு தொடக்கப் புள்ளியாகக் காணப்படுகின்றது என்பது பலரதும் கருத்தாகும்.

### கலாநிதி அமரசேகர

புதிய அரசமைப்பு நிறைவேற்றப்படும்வரை மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த வேண்டாம் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் சார்பில், அதன் தலைவர் கலாநிதி குணதாஸ அமரசேகர கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளார். இது கவனத்திற் கொள்ளத்தக்கது.

இதேவேளை நிந்தாவூர்ப் பிரதேச சபையின் 4ஆவது சபையின் 29ஆவது அமர்வில் 13ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டம் தொடர்பில் ஏகமனதான தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டுள்ளது. பிரதேச சபைத் தவிசாளர் எம்.ஏ.எம். அஷ்ரப் தாஹிர் அந்தச் சபையில் முன்மொழிந்த பிரேரணை ஒன்றின்படி 13ஆவது திருத்தச் சட்டத்தை மலினப்படுத்தாது அதை வலுப்படுத்த அரசு ஆவணசெய்ய வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

### தேர்தல் காய்ச்சல்

இத்தகைய புறச்சூழல்களால், நாடு பரபரத்துக் கொண்டிருக்கின்ற நிலையில் தான் தற்சமயம் கிழக்கு மாகாணத்தில் மாகாணசபைத் தேர்தல் காய்ச்சல் பரவத் தொடங்கியுள்ளது. கிழக்கு மாகாணத்தின் ஆட்சியை யார் கைப்பற்றுவது என்பது முக்கிய பேசு பொருளாகவும் வியூகங்கள் வகுக்கப்படும் விடயமாகவும் தற்பொழுது மாறியுள்ளது.

தமிழர் ஒருவரை முதலமைச்சராகக் கொண்டு வர வேண்டும் என்றும், முஸ்லிம் ஒருவரையே முதலமைச்சராகக் கொண்டுவர வேண்டும் என்றும் இருவேறு பகுதியினர் திட்டமிட்டு வியூகங்களை வகுக்கத் தொடங்கியுள்ள நிலையில், பொது ஜன பெரமுனவும் வாளாதிருக்கவில்லை. தமது சகாக்களான பிள்ளையான், கருணா, வியாழேந்திரன், அதாவுல்லா, டக்ளஸ் போன்றோரைப் பயன்படுத்திக் கிழக்கின் ஆட்சியைக் கைப்பற்றும் வியூகத்தைச் செயற்படுத்துவதற்கான முனைப்புக்களில் அதுவும் குதித்துள்ளது.

### அமைச்சர் ஹரீஸ்

முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எச்.எம்.எம். ஹரீஸ் பொது மேடையொன்றில் இந்தத் தேர்தல் குறித்துத் தமது கருத்தை வெளிப்படுத்தியுள்ளார். "கிழக்கு மாகாண சபைக்கான எதிர்வரும் தேர்தலில் கிழக்கின் ஆட்சியைத் தமிழரின் ஆதரவுடன் கைப்பற்றுவதற்கு அரசு செயற்படுகின்றது" என்று அவர் எச்சரிக்கிறார்.

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் கிழக்கைக் கைப்பற்றவேண்டும் என்பதற்காகக் கிழக்கு மாகாணத்தில் வாழ்கின்ற தமிழ் மக்களை திருப்திப்படுத்துவதற்கான முயற்சிகளில் ஆட்சியாளர்கள் ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிகிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார். இந்த வியூகத்தை மேலும் மேலும் வலுப்படுத்தி முஸ்லிம்களின் கணிசமான வாக்குகளையும் பெறும் நோக்கில் தேசிய காங்கிரசின் தலைவர் முன்னாள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லாவுக்கு அமைச்சுப் பதவி ஒன்றை வழங்குமாறு அரசுக்கு முக்கிய அமைச்சர் ஒருவர் மந்திராலோசனை வழங்கியுள்ளார் என்றும் தகவலொன்று தெரிவிக்கிறது.

### துரைரெத்தினம்

மட்டக்களப்பின் அரசியல் பிரமுகரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமாகிய இரா.துரைரெத்தினம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில், கிழக்கு மாகாண சபைத் தேர் தலை நடத்துவதற்கு அரசு விரைவாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலியுறுத்தியுள்ளதுடன், கிழக்கில் பெரும் பான்மையாக வாழ்கின்ற தமிழ் மக்கள் 40 வீதமாகவுள்ளனர் என்பதால், முதலமைச்சர் ஒருவரைத் தமிழராகக் கொண்டு வருவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கியதாகச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்கள் சார்பில் ஓரணியில் தமிழ்க் கட்சிகளைப் போட்டியிட வைக்கின்ற தீவிர முயற்சி ஒன்றும் முன்னெடுக்கப்பட விருக்கிறது. ஆலையடி வேம்பு அன்புக் கரங்கள் அனுசரனையில் உதயமாகியுள்ள அம்பாறை மாவட்ட தமிழர் ஒருங் கிணைப்புக் குழு இதற்கான முயற்சியை முன்னெடுக்கவுள்ளது. பொத்துவில் தொடக்கம் பெரிய நீலாவணை வரையுள்ள தமிழ்க் கிராமங்களின் மக்களை இது விடயத்தில் ஓர ணியில் திரளச் செய்வதற்கான கருத்தரங்குகளும் இந்த அமைப்பால் முன்னெடுக்கப்படவுள்ளன.






### சமாதானக் கூட்டமைப்பு


ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் செயலர் நாயகமும் முன்னாளள் இராஜாங்க அமைச்சருமான எம்.ரி.ஹசனலி கிழக்கு மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிடுகையில், தமது கட்சியும் இந்தத் தேர்தலில் களமிறங்குவதற்குத் தயாராக உள்ளது என்று தெரி வித்தார்.

ஆனாலும் தமிழ் - முஸ்லிம் உறவை, இணைப்பை மையப் பொருளாகக் கொண்டு இந்தத் தேர்தலை அணுக வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்றிணைந்து சுமுகமான விட்டுக்கொடுப்புக்களுடன் பேச்சுக்களை நடத்தியும் ஒரே சின்னத்தில் போட்டியிட்டும் கிழக்கின் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு முன்வர வேண்டும் என்றும் அவர் கூறினார்.

இன்றைய அரசின் போக்கைத் தமிழ் - முஸ்லிம் சமூகங்கள் எதிர்கொள்ளவும் ஆரோக்கியமான கருத்துக்களை வெளிப்படுத்தவும் இருப்பைத் தக்க வைத்து உரிமையுடன் வாழவும் இந்த நிலைப்பாடு உதவும் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

கிழக்கில் தேர்தல் காய்ச்சல் இவ்வாறாகப் பரவத் தொடங்கியுள்ள நிலையில், நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியைத் தழுழவிக் கொண்டவர்கள் முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள், புது முகங்கள் எனப் பலர் தேர்தல் நடக்குமோ, நடக்காதோ என்பதைப் பொருட்டாகக் கருதாது இப்போதிருந்தே ஆதரவு தேடி ஆலாய்ப் பறக்கத் தொடங்கியுள்ளனர். மாகாணசபைத் தேர்தல் திருவிழா இனிக் கிழக்கில் பெரும் கல கலப்பாக விருக்கப் போகிறது போலத்தான் உள்ளது...?



# கைலாசாவுக்கு அரோகரா!

காயா

தன் மீதான சர்ச்சைகளால் பிரபலமடைந்த ஜெக ஜாலக் கில்லாடி ராஜசேகரன். அந்தக் கில்லாடியின் பெயர் இன்றைக்கு நித்தியானந்தாவாக நிலைத்துவிட்டது.

ஈக்வெடார் என்கிற தென் அமெரிக்க நாட்டுக்கு அண்மையான தீவு ஒன்றை விலைக்கு வாங்கி அந்தத் தீவைக் கிட்டத்தட்டத் தனிநாடு போன்றே (வத்திக்கான் போன்று) கைலாசாக் குடியரசு என்று பெயரிட்டு அதற்கென்று தனி நாணயங்களையும், நுழைவிசைவு, குடியுரிமைகளையும் உருவாக்கியிருக்கிறார் என்று செய்திகள். இந்துக்களின் தேசம் என்று கைலாசாவுக்குப் பெயரிட்டுள்ளார் என்றும் அந்தச் செய்திகள் கூறுகின்றன. இத்தனைக்கும் இந்தியப் பொலிஸாரால் பல்வேறு வழக்குகளில் தேடப்பட்டுவரும் நபர் அவர். தன்னைக் கடவுளின் அவதாரம் என்று அழைத்துக்கொள்கின்ற ராஜசேகரனை ஆதரிக்கின்ற பெருங் கூட்டத்தின் விளைவே அவர் எட்டியுள்ள இந்தத் தனிநாட்டு வளர்ச்சி.



### பிறப்பும் பிரபல்யமும்

இந்தியாவின் தமிழ்நாட்டில், திருவண்ணாமலையில் பிறந்த ராஜசேகரன் சிறு வயதிலிருந்து ஆன்மீகக் கற்கைகளில் ஆர்வமுள்ளவராக இருந்திருக்கிறார். அதன் தொடராகத் திருவண்ணாமலை, பெங்களூர், மதுரை எனப் பல இடங்களிலும் தனது ஆசிரமங்களை நிறுவி அவற்றின் மூலம் ஏகப்பட்ட சம்பாத்தியங்களை ஈட்டியுள்ளார். தன்போன்ற சாமியர்களின் நெருக்கீடுகள் மற்றும் அவ்வகைச் சாமியர்களுடன் ஏற்பட்ட தொழிற்போட்டிகள் காரணமாக அரசியல் - பொலிஸ் செல்வாக்கால் அங்கிருந்தெல்லாம் அடித்து விரட்டப்பட்டு ஒடுக்கப்பட்டார். இந்த விரட்டல்கள் குறித்து அவர் அடிக்கடி ஆதங்கப்பட்டுமிருக்கிறார். ஆனாலும் இன்றைக்குத் தனி நாடு ஒன்றை உருவாக்கும் அளவுக்கு அவர் வந்துவிட்டார். மற்றைய சாமியர்களைப் போலல்ல ராஜசேகரன். சட்டத்தின் பிடிக்குள் முறையாகச் சிக்கித் தலைமறைவாக இருந்துகொண்டு அவர் செய்கின்ற இத்தகு செயல்கள்தான் அவர் மேலும் மேலும் பிரபலமாவதற்குக் காரணம்.

### நித்தியானந்தாவின் லீலைகள்

2010ஆம் ஆண்டில் நடிகை ரஞ்சிதாவுடன் நெருக்கமாக இருப்பதைச் சித்திரிக்கின்ற காணொளி வெளியாகியதிலிருந்து ராஜசேகரன் சர்ச்சைக்குரியவரானார். நடிகையும் அவரும் நெருக்கமாக உள்ளது போன்ற காட்சிகள் அந்தக் காணொலியில் இடம்பெற்றிருந்தன. தடயவியல் ஆய்வக ஆராய்ச்சி முடிவில் அதைச் சித்திரிக்கின்ற காணொலி உண்மையானது என உறுதி செய்யப்பட்டது. இந்த வழக்கில் நித்தியானந்தாவைக் கைது செய்து சிறையில் அடைத்துப் பின்னர் பிணையில் விடுவித்தது பொலிஸ் - நீதிமன்றத் தரப்பு. இது தவிர, பெங்களூருவில் உள்ள ஆசிரமத்தில் நடந்த சோதனையில், ஆணுறைகள் மற்றும் கஞ்சாப் பொட்டலங்களும் கண்டெடுக்கப்பட்டன என்று அறிவிக்கப்பட்டது.

2012ஆம் ஆண்டில், நித்தியானந்தா மீது பாலியல் வன்புணர்வு வழக்கு ஒன்று தொடரப்பட்டு அவர் கைது செய்யப்பட்டார். குற்றச்சாட்டு எழுந்த உடன் தலைமறைவாகிப் பிறகே தானாக முன்வந்து அவர் சரணடைந்திருந்தார். தலைமறைவாக இருந்தபோது நடத்தப்பட்ட விசாரணையில் நித்தியானந்தா தனது பெண் சிஷ்யையை வன்புணர்வு செய்தார் என்று குற்றச்சாட்டு எழுந்தது. அதற்கு முன்பிருந்தே அவர் மீது அவ்வகைக் குற்றச்சாட்டுகள் அரசல் புரசலாக இருந்து வந்தாலும் அதன் பின்னர் அகமதாபாத்தில் அமைந்துள்ள இவரது ஆசிரமம் மீதும் வழக்குப் பாய்ந்தது. சிறுமிகளை அடைத்து வைத்துள்ளதாக எழுந்த குற்றச்சாட்டு தொடர்பாக அந்த ஆசிரமத்தின் பெண் நிர்வாகிகளான பிராண பிரியா, தத்வபிரியா ஆகிய இருவரையும் பொலிஸார் விசாரணைக்குடுத்தினர். இந்த வழக்கு விசாரணை ஆரம்பித்ததில் இருந்து ராஜசேகரன் தலைமறைவானார்.



### கைலாசாவின் தோற்றம்

தலைமறைவாகியிருந்த ராஜசேகரன் அவ்வப்போது யூடியூப் வலைத் தளத்தில் காணொலிகளை வெளியிட்டு வந்தார். இந்துக்களுக்கு என்று 'கைலாசா' எனும் தனி நாடு ஒன்றை உருவாக்கிவிட்டேன் எனும் அறிவிப்பைச் சென்ற ஆண்டின் இறுதியில் அவர் வெளியிட்டார். அந்த நாட்டின் நாணயங்கள் விநாயகர் சதுர்த்தி அன்று வெளி யிடப்படும் என்றும் அவர் அறிவித்திருந்தார். அதன்படி தனிநாடு என்று அவர் கூறும் கைலாசாவின் நாணயங்களையும் அவர் வெளியிட்டுவிட்டார். 'இந்து முதலீட்டு மற்றும் ரிசர்வ் வங்கி' என்று பெயரிடப்பட்டுள்ள கைலாசாவின் வங்கிச் செயற்பாடுகளை நிர்வகிப்பதற்கு வேறு ஒரு நாட்டுடன் தனது நாடு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். அத்தோடு கைலாசாவுக்கான 300 பக்க பொருளாதாரக் கொள்கையும் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார். கைலாசாவின் ரிசர்வ் வங்கியானது உரோமின் சிறு நகரமான வத்திக்கன் வங்கியை மாதிரியாகக் கொண்டு கட்டமைக்கப்படும் என்றும் அவர் கூறினார். கைலாசா என்பது எல்லைகள் இல்லாத தேசம் என்றும் தங்கள் நாடுகளில் முறைப்படி இந்துத்துவத்தைக் கடைபிடிக்க முடியாத இந்துக்களுக்கான நாடு இது என்றும் குறிப்பிடுகிறார் அவர்.



### 'கைலாசா'க் குடியரசு

உலகிலேயே மிகவும் தூய்மையான இந்து தேசம் என்று ராஜசேகரன் கூறும் கைலாசா தென்னமெரிக்க நாடான ஈக்குவெடாரின் அருகேயுள்ள ஒரு தீவு என்கின்றன இந்திய ஊடகங்கள். கைலாசக் குடியரசு என்று அதிகாரபூர்வமான பெயரைக் கொண்டுள்ள இந்த நாட்டுக்கு என்று தனியான கொடி, முத்திரை, கடவுச்சீட்டு ஆகியவை உள்ளன. எனினும் ஐ.நா. உள்ளிட்ட அமைப்புகளோ, உலக நாடுகளோ இந்தத் தீவைத் தனி நாடாக இன்னும் அங்கீகரிக்கவில்லை. ஆனால், தான் உருவாக்கியுள்ள நாட்டில் மதுரை, காஞ்சிபுரம், திருவண்ணாமலையைச் சேர்ந்தவர்களுக்கே வணிகச் செயற்பாடுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்கிறார் ராஜசேகரன்.

### நித்தியை ஆதரிக்கும் கூட்டம்

இவ்வளவு குற்றச் சாட்டுகள், லீலைகளுக்கு மத்தியிலும் நித்தியானந்தா என்று அறியப்படுகின்ற ராஜசேகரன் இற்றைக்கு இந்தியா முழுவதும் ஆயிரக்கணக்கான ஆதரவாளர்களைத் திரட்டியுள்ளார். இந்தியா மட்டுமின்றி வெளிநாடுகளிலும், இவருக்குச் சீடர்கள் உள்ளனர்.

விதம் விதமாகக் கடவுளர்களை உருவாக்கிக் கொண்டாட்டங்களிலும், கூத்துகளிலும் ஈடுபடுகின்ற மனிதர்களை விடவும் பரிணாமம் குன்றிய சில மனிதர்கள், மனிதர்களைக் கடவுளர்களாகக் கொண்டாடும் நிலைக்குச் சென்றதன் விபரீதங்களில் ஒன்று இது என்றும் இவரது இந்த வளர்ச்சியைச் சொல்லலாம்.

இந்தியாவில் இந்தப் பரிதாபநிலை அதிகம். அரசியல்வாதிகளைப்போல இந்தச் சாமியர் தொழிலும் பெரும் வியாபார மயப்பட்டும் விட்டது. இந்தியச் சினிமா, தொடர் நாடகங்கள், இசை நிகழ்ச்சிகள், வெள்ளை வேஷ்டியுடன் வலம் வரும் அரசியல் சம்பிரதாயம், இந்தியக் கலை - கலாசாரப் பின்பற்றல்கள் என அங்கிருந்து அனைத்தையும் ஏதாவதொரு விதத்தில் நகல் எடுத்து விடுகின்ற ஈழத்துக்கு இது விதிவிலக்காக இருக்குமா என்ன? காலப் போக்கில் நம்மவர்களும் கைலாசாவுக்கு அரோகரா சொன்னால் ஆச்சரியத்துக்குரியதல்ல.

---

## காதல் வரி

1

தாளம் பூக்கள் மலர்ந்திருக்கும்
கடல் நிலத்தில்
தனித்து வளர்ந்திருக்கும்
தென்னையில் சாய்ந்த படி
நிலவை வெறிப்பவனே
நான் சொல்வதைக்கேள்
காதல் என்பது இந்த காற்றறைபோல
உன்னை தொட்டு என்னை தொட்டு
இந்த உலகம் தொடுகிறது
அது உயிர்...

2

கைகள் தொடாமல் காதல் வருவதில்லை என்கிறேன் ...
என் கண்களை பார் என்கிறாய்.
நீல நிறம் அந்த வானம் போல் விரிகிற வெளியாகி ..
- பின் ஒளியாகி சுழன்று.
.அன்பின் அலை தோன்றி ஆர்ப்பரித்து இசையெழுந்து.
என்னை உன்னை ஈர்த்தெடுத்து நீராக்கி பின் நெருப்பாகி
காலவெளிக்குள் எறிந்து
பின் கனவுலகில் தள்ளி காலம் அழியாது.....
-வைத்திருக்க கண்டேன்
அன்பே நான் சொன்னேன்.....
கண்களால் தொடு போதும் காதல் அழிவதில்லை

3

மன்னவா உன் காதலின் தீயில் என்னை இடு
அன்பில் உருகி ஓடும் இதயத்தை கையேந்து.....
குளிர் அருவி நீரெடுத்து குளிர் செய்
கல்லாய் இருந்தவளை
காதலின் சிற்பமாய் செய்தவனே....
நேசமேனும் போர்வைக்குள் மூடு.
இவ்விரவு விடியட்டும்
தேசமெல்லாம் பூத்திருக்கும்
நம் காதல் கொண்டாடு..

-அஞ்சு

■ பேர் அறிஞன்

# சித்தி வீதத்தை உயர்த்துதல் தவிர்க்கவியலாக் கேள்விகள்...

வடபுலத்துக் கல்வியாளர் எனத் தம்மை அடையாளமிட்டுக் கொள்வோரின் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகும் காலப் பேசுபொருளாக இருப்பது பிற மாகாணங்கள் அல்லது மாவட்டங்களுடன் ஒப்பிட்டுக் கல்வியில் பின்னடைந்து விட்டோம் என்பதுதான். இது ஒரு நிரற்படுத்தப்படாததாகவும் முடிவுறுத்தப்படாதாகவுமே இருந்து வருகிறது. இவர்களது பேசுபொருளான வீழ்ச்சி என்பதற்கான மூல காரணி அல்லது காரணிகளை அடையாளமிட்டிருக்கிறார்களா? இந்தப் பிரச்சினையை முடிவிற்குக் கொண்டு வர அல்லது அண்மிக்க மூலகாரணிகள் தொடர்பான - பரிகாரங்கள் தொடர்பான ஆக்க ரீதியான யோசனைகள் எவையாவது உண்டா? ஆண்டுதோறும் பேசிக்கொண்டிருக்கும் இவர்களின் இலக்குத்தான் என்ன?

## பரிதாபத்துக்குரிய அதிகாரிகள்


கல்விசார் உயர்நிலை, இடைநிலை அதிகாரிகளின் வேலை என்பது பரிதாபத்துக்குரியதாக இருப்பதாகவும், செய்வது என்னவென்று அறியாது தமது சம்பள உயர்வுகளோடு தமது பதவிக்காலத்தை முடித்து ஓய்வூதியம் பெறுவதிலேயே கருத்துடன இருக்கிறார்கள் எனவும், அவர்கள் கல்வியியல் மற்றும் உளவியல் சார்ந்த தமக்கான அறிவற்றவர்களாக இருக்கிறார்கள் என்றும் சமூகச் செயற்பாட்டாளர் ஒருவர் பொது இடமொன்றில் சிலரோடு உரையாடிக்கொண்டிருந்தார். அதைச் செவிமடுக்க மட்டுமே முடிந்தது.

அடுத் தடுத்து அவர் தனது கருத்தை முன்வைத்தபோது மறுத்துக் கருத்துச் சொல்லக்கூடிய நிலை இருக்கவில்லை. அமைதியாக மட்டுந்தான் இருக்க முடிந்தது. அல்லது நீங்கள் சொன்னவை சரியானதுதான் என்று சொல்லியிருக்கக் கூடியவாறே எனது அனுபவமும் உள்ளது.

## கீழுள்ளவர்கள் மீது குற்றம் சுமத்துதல்

தற்போதைய கல்விச் செயற்பாடுகள் தொடர்பிலும், அதனை வழிப்படுத்துவோர் பற்றியுமான அவதானத்தில் ஒவ்வொருவரும் நிர்வாகப் படிமுறையொழுங்கில் தமக்குக் கீழுள்ளவர்களின் மீது குற்றம் சுமத்துவதும், அவர்களை உளவியல் நெருக்கீட்டுக்கு உட்படுத்துவதும்தான் நடந்துகொண்டிருக்கின்றன.

நடந்து முடிந்த செயற்றிட்டங்களை ஆய்வு செய்வது நடக்கிறதோ தெரியாது. அப்படியேதும் நடந்தாலும் எப்படி நடக்கிறது என்பதும் கேள்விக்குரியதுதான். ஏனெனில் வகுப்பறைகளுக்கு வெகுதொலைவில் மாணவரது இடர்பாடுகள் தொடர்பில் நேரடிப் பட்டறிவு மிகக் குறைவான ஒரு தொகுதியினரின் பங்கேற்புடன் கற்றலில் நன்கு துலங்கும் (ஒரு சிறுதொகை) மாணவரை முன்னிலைப்படுத்தி அல்லது மாதிரியாகக் கொண்டு தயாராகும் திட்டங்களினால் எதிர்பார்க்கும் அடைவைப் பெறமுடியுமா?



## பொருத்தமற்ற கணிப்பும் திணிப்பும்

மேற்குறித்த அந்தத் தொகுதி ஒரு பரந்துபட்ட திறந்த தொகுதியா? அத்தொகுதி நகர அல்லது நகரை அண்மித்த கல்விக்கான பௌதீக - உளக் காரணிகள் நிறைவான அல்லது நிறைவை அண்மிக்கும் நிலையிலுள்ளது. அதில் பெற்றுக்கொண்ட நிபந்தனைகள் அல்லது கருத்துக்கள் எல்லாமே பற்றாக்குறையாக அல்லது அறவே இல்லாத ஒரு (பெரும்) தொகுதி மீது திணிக்கப்படுவது பொருத்தமானதா?

இங்கு குறிப்பிடப்பட்ட பௌதிகக் காரணிகளாக அடிப்படைத் தேவைகளான உணவு - உடை - உறையுள், குடும்பப் பொருளாதாரம், பாடசாலை கொண்டுள்ள வளங்கள் உள்ளடங்கியவற்றைக் குறிப்பிட முடியும்.

ஊக்கக் காரணிகளாகக் குடும்பக் கட்டமைவு, அயல் மற்றும் சமூகக் கட்டமைவுகள் முக்கியமாகச் சமூகத்திலிருந்து முன்னிறுத்தப்படும் தவறான முன்னுதாரணங்கள் அவற்றின் உந்துதல்கள், தூண்டல்கள் அவற்றால் எழும் கிளர்ச்சிகள், பிறழ்வுகள் என நீண்ட தொடரான ஒன்றுடனொன்று பின்னிப்பிணைந்தவற்றைக் குறிப்பிடமுடியும்.

## கவனவீனத்தின் அறுவடை இது

மேற்குறித்த அக - புறக் காரணிகள் முழுமையாகக் கவனத்தில் கொள்ளப்பட்டோ ஆராயப்பட்டோ உள்ளனவா? கடந்த காலத்தில் தவறவிடப்பட்ட கவனத்தின் அறுவடையைத்தான் இப்போது வன்முறை கொள்ளைக் கலாசாரமாகக் கொண்டிருக்கிறோம் என்பதை மறுக்க முடியுமா?

கடந்த மூன்று தசாப்த காலப் போரிடர் காரணமாக முதலில் தொழில் தேடியும் அதனால் எழுந்த சுவையால் புகலிடமாகக் குடியேறலை நோக்கமாகவும் கொண்ட புலம்பெயர் வாழ்க்கைமுறை எமது தாயக வாழ்க்கைச் சூழலில் ஒரு கிளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளமை மறுக்க முடியாதுள்ளது.

அதாவது கல்வியறி வுத்தேவை தொடர்பான எமது சமூ கத்திலிருந்த முன்னைய எண்ணப்பாட்டைப் பணம் சம்பாதிப்பதற்குக் கல்வியறிவு தேவையற்றது எனும் நிலைக்குப் புரட்டிப்போட்டுள்ளது என்பதை அவதானிக்க முடிகிறது.

எனவே புலம்பெயர் உறவுகளின் உதவிப் பணம் அவர்கள் எம்மையும் அங்கே அழைப்பார்கள் எனும் எதிர்பார்ப்பு எல்லாம்கூடி குறித்த ஒரு தொகையினரின் கல்விக்கான நாட்டம் பின்தள்ளப்பட்டுள்ளது.

புலம்பெயர்வு, புலம்பெயர் உதவிகள் என்பவற்றால் உடல் உழைப்புக்கு ஆள் தட்டுப்பாடான சூழலில் கல்வியறிவுக்குச் சம்மந்தமில்லாத சிறுதொழில்கள் மூலமாக வாழ முடியும் எனுமொரு நம்பிக்கையும் அதற்கான பல முன்னுதாரணங்களும் கல்வியைத் தேவையற்ற ஒன்றாக்கியுள்ளன.

இவ்வாறான சூழலானது முன்னர் குறிப்பிட்ட காரணிகளுடன் இரண்டறக் கலந்துகொண்டு ஒரு புதிய தொகுதியைப் பிறப்பித்துள்ளது என்பதை உணரவேண்டும். அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இத்தொகுதிதான் கட்டாயக் கல்விக் கூடாகப் பெறுபேற்று வீழ்ச்சியாகக் கருதப்படும் விடயத்திற்குக் காரணமானது என்பதைக் கவனத்தில்


கொள்கின்றோமா? கொள்வோமா?

(கேள்விகள் நீளும்...)


### மூளைக்கு வேலை

முடிகிறதா பாருங்கள்

2




வரவேண்டிய எண் யாது?



# நடிப்புலக "பார்டி"களில் கொக்கேய்ன்

கிரிக்கெட் வீரர் டோனியின் வாழ்க்கை வரலாற்றுப் படத்தில் நடித்துப் பிரபலமடைந்த பொலிவூட் நடிகர் சுஷாந்த் சிங்கின் தற்கொலையைத் தொடர்ந்து பொலிவூட்டின் வாரிசு நடிகர்களைச் சாடிப் பேசி வருபவர் நடிகை கங்கணா ரணாவத். பொலிவூட்டில் நிலவும் வாரிசு அரசியலுக்கு எதிராகத் தொடர்ந்து பதிவுகளை வெளியிட்டு வருகிறார் அவர். இந்த நிலையில் பொலிவூட் உலகில் நிலவும் போதைப்பொருள் புழக்கம் பற்றிய இன்னொரு புதுச் சர்ச்சையையும் கங்கணா தற்போது கிளப்பிவிட்டுள்ளார். இதுகுறித்து அவர் கூறும்போது, ''பொலிவூட் உலகில் கொக்கைன் பிரபலம். கிட்டத்தட்ட எல்லாக் ஹவுஸ் பார்ட்டிகளிலும் அது தாராளமாகப் பயன்படுத்தப்படுகிறது. அது விலையுயர்ந்த போதைப்பொருள்தான். ஆனால், பெரிய நடிகர்களின் வீட்டில் நடக்கும் பார்ட்டிகளுக்குச் சென்றால் இது உங்களுக்கு இலவசமாகவே வழங்கப்படும். எம்.டி.எம்.ஏ படிகங்கள் தண்ணீரில் கலக்கப்பட்டுச் சில நேரம் உங்களுக்குத் தெரியாமலே உங்களுக்குள் செலுத்தப்படும். போதைப்பொருள் தடுப்புப் பொலிஸாக்கு உதவ நான் தயாராக இருக்கிறேன். ஆனால், எனக்கு மத்திய அரசின் பாதுகாப்பு வேண்டும். இதனால், என் தொழிலுக்கு மட்டுமல்ல என் உயிருக்கே கூட ஆபத்து நேரலாம். சுஷாந்துக்குச் சில கோர உண்மைகள் தெரிந்ததாலேயே அவர் கொல்லப்பட்டார் - என்றுள்ளார் கங்கணா.

## செம்மண்

### வாரமலருக்கு...

- கவிதை
- கட்டுரை
- சிறுகதை
- நெடுங்கதை
- குறுங்கதை
- நிமிடக்கதை
- நாவல்(தொடர்)
- சிரிப்புத் துனுக்குகள்

ஆகியவற்றை எழுத விரும்புபவர்கள் அவற்றைப் பின்வரும் முகவரிகளுக்கு அனுப்பி வைக்கலாம்!

**அஞ்சல் /தபால்**
**செம்மண் வாரமலர்**
**551A, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**மின்னஞ்சல்**
**shemman.redsoil@gmail.com**
**தொடர்புக்கு: 021 492 7781**

எந்தவொரு ஆக்கத்துக்கும் தெளிவான முழுப் பெயர், முகவரி புனைபெயர் (இருந்தால்), தொடர்பு எண் என்பன குறிப்பிடப்பட வேண்டும். இந்த விவரங்கள் இல்லாத ஆக்கங்கள் எவ்வளவு தரமானவையாக இருந்தாலும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

## எந்நாளும் நலம் வாழ

மருத்துவர்: **கந்தையா சோதிதாசன்**

### என்றும் இளமைக்கு நெல்லிக்காய்

*நல்ல தமிழ் மாதே நமக்கெல்லாம்*
*நன்று செய் நெல்லியின் நலன் கேள்*
*வெல்லுமாம் பித்தம், பீனிசம் போம்*
*சித்தம் தெளிவாக்கும் சிறுமயக்கம் தீரும்*
*வல்லமையால் மேனி வனப்புண்டாம்*
*தேனோடருந்த இளமை நீடிக்கும்*
*தொல்லு புகழ் நெல்லிக்குக் கண்குளிரும்*
*கூந்தல் கறுக்கும் காயகல்பம் என்பதறி*

**விளக்கவுரை:**

நல்ல தமிழ்ப் பெண்ணே! நமக்கெல்லாம் பல நன்மைகளைப் பெற்றுத் தருகின்ற நெல்லிக்காயின் பயன்களைச் சொல்கிறேன் கேட்பாயாக. பித்த அதிகரிப்பால் ஏற்படுகின்ற சத்தி மயக்கம், தலைச்சுற்று என்பவற்றிக்கு நெல்லி மருந்தாகிறது. இது சேரும் தைலம் பீனிசத்தை நீக்குவதோடு. சித்தபிரமைக்கும் குணமளிக்கிறது. இதில் அடங்கியுள்ள உயிர் சத்துகளால் நோய்எதிர்ப்பு சக்தி அதிகரிக்கிறது. இதனால் சரும நோய்கள் நீங்கித் தேகம் பொலிவடைகிறது. இதன் கனிகளைத் தேனில் ஊற வைத்து அருந்த இளமை குன்றாதிருக்கும் என்கின்றன சித்தர் பாடல்கள்.

தொன்மையான புகழுடைய நெல்லியால் கண்களுக்குக் குளிர்ச்சியும் கூந்தல் செழுமையும் கிடைக்கிறது என்பதோடு சித்தர் சொன்ன காயகல்ப (முதுமையைத் தடுக்கிற) மூலிகைகளில் இதுவும் ஒன்றென்பதை அறிவாயாக.


வாழ்முற்றம்

மீண்டும் விரைவில் யாழ் நகரல்..!

461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் சந்தை



- பனைசார் உற்பத்திப் பொருட்கள்
- தும்பு உற்பத்திப் பொருட்கள்
- இயற்கை விவசாய மரக்கறிகள்
- இயற்கை விவசாய இடுபொருட்கள்
- வீட்டுத்ததோட்ட மரக்கன்றுகள்
- இயற்கை உரங்கள்
- கைவினைப் பொருட்கள்
- மட்பாண்டம்
- பாதணிகள்
- உலர் உணவுப் பொருட்கள்
- கடல் உணவுப் பொருட்கள்
- இரசாயணமற்ற ஆரோக்கிய பானங்கள்
- ஈழத்து எழுத்தாளர்களின் புத்தகங்கள்
- சித்திரங்கள்
- பயிற்சி வகுப்புகள் (யோகா, பரதம், கராட்டி, சமையல்....)

உள்ளூர் உற்பத்தி – கலாசாரம் – பாரம்பரியம்

# ஆறாவது குண்டு

**கலியுக பித்தன்**

நெடுங்கதை அத்தியாயம் 06

ராகுலின் மனம் நடந்து முடிந்த சம்பவங்களை அசைபோட்டுக் கொண்டிருப்பதை நிறுத்த மறுத்தது. நேரத்தைப் பார்த்தான் இரவு ஏழு மணியாகி இருந்தது. மழை வேறு விட்டு விட்டு பெய்து கொண்டிருந்தமையால் வானம் கறுத்தே இருந்தது. ஏழு மணிக்கெல்லாம் நன்றாகவே இருள் சூழ்ந்துவிட்டது. திடீரெனக் கதவு தட்டப்படும் ஓசை கேட்கவே, இந்த நேரத்தில் யார் வந்திருக்கிறார்கள் என்று சலிப்புடனே கதவை திறப்பதற்காக எழுந்தான். அந்தக் கணத்தில் அவன் மூளையில் பொறி தட்டியது. பின் அந்த பொறி அவனுக்குள் பயத்தைப் பற்ற வைத்து, கொழுந்துவிட்டு எரிய தொடங்கியது. அவன் சில கணங்கள் மௌனமாக நின்றான்.

'மிஸ்டர் ராகுல், நான்தான் கவிந்த் வந்திருக்கிறன்' வெளியில் இருந்து ஒரு குரல் கேட்டது. கவிந்த் என்றதும் ராகுலின் மனம் சாந்தமானது. பதற்றத்தைப் பக்குவப்படுத்தி துரத்திவிட்டு, கதவைத் திறந்து கவிந்தை பவ்வியமாக வரவேற்று கொண்டான்.

இந்தமுறை கவிந்த் தனியாகவே வந்திருந்தான். அறைக்குள்ளே வந்தவன் அணிந்திருந்த ஜாக்கெட்டை கழற்றி ஒரு கதிரையில் மேலே வைத்து விட்டு, கைகளால் தலை முடியை சிலிர்த்து, முடிகளில் படித்திருந்த மழைத் துளிகளை விரட்டும் முயற்சியில் சில நிமிடங்கள் இறங்கினான். அதில் தோற்றுப்போகவே அந்த கடின முயற்சியை கைவிட்டு அருகிலிருந்த கதிரையில் அமர்ந்து ராகுலை நோக்கி புன்னகை வீசினான். அதை நுகர்ந்து இரசிக்கும் நிலையில் தான் இல்லை என்றாலும்கூட, பதிலுக்கு சில செக்கன்களுக்கு சிறு புன்னகையை உதிர்த்து விட்டு கட்டிலில் அமர்ந்து கொண்டான் ராகுல்.

'என்ன ராகுல், எதையோ தொலைச்ச மாதிரி இருக்கீறீங்க?'

'ச்சாச்சா, அப்டி ஒண்டும் இல்லை சேர்... லேசா தூங்கிட்டன் அவ்வளவு தான்' எதையோ மறைக்க முனைந்தவனாய் பதிலை சொன்னான். அவன் எதை தொலைத்தான் என்பது கவிந்துக்கு தெரியாமல் இல்லை. அதை எடுத்து சென்றவன் கவிந்ததானே.

'நீங்க என்னட்ட எதையும் மறைக்கலையே ராகுல்' குறும்பாகப் புதிர் போட்டான்.

'உங்களிட்ட நான் என்ன....' சொல்ல முற்பட்டவன், கவிந்தின் கைகளில் இருந்த லெட்டரையும், போட்டோவையும் பார்த்த ராகுல் சொல்ல வந்ததை பாதியிலே நிறுத்தி விட்டு, கவிந்தை நோக்கினான். அவன் முகத்தில் புன்னகை தவழ்ந்து கொண்டிருந்தது. சில நிமிடங்களுக்கு அங்கே அமைதி குடிகொண்டிருந்தது.

'என்ன மிஸ்டர் ராகுல் எதை தொலைச்சீங்க?' அந்த லெட்டரும், போட்டோவும் எப்படி கவிந்திடம் போயிருக்கும் என்று யோசித்து கொண்டிருந்தவன் பதில் சொல்ல நினைக்காமல் அமைதியாகவே நின்றான்.

'இதைதானா தொலைச்சீங்க, பாருங்க' என்று தன்னிடம் இருந்த லெட்டரையும் போட்டைவையும் ராகுலிடம் நீட்டினான். அதை ஒற்றி பறித்து கைக்குள் பத்திரப்படுத்தி கொண்டான் ராகுல்.

'எதுக்காக என்ட லெட்டரையும் போட்டைவையும் எடுத்துக்கொண்டு போனீங்க'

'இதுதானே எங்க டியூட்டி'

'எது? அடுத்தவன் பொருளை திருடுறதா?'

'இல்லை, குற்றவாளிக்கு தெரியாம அவனோட தடயங்களை எடுக்கிறது'

'என்னது? என்னோட லெட்டர் தடயமா? நான் குற்றவாளியா?' கண நேரத்தில் கோபத்தின் நுனிக்கே சென்றுவிட்டான் ராகுல்.

'அது தடயமா இருந்திருந்தால் திருப்ப உங்களிட்ட தந்திருக்க மாட்டனே'

'சரி, இப்ப எதுக்கு திரும்ப இங்க வந்தீங்க?' ராகுலின் கேள்வியில் எரிச்சல் ஒட்டிக்கொண்டிருந்தது.

'இந்த கேஸுக்கு துப்பு தேவையா இருக்கு. அதை எடுத்துட்டு போகலாம் எண்டுதான் வந்தன்'

'என்னோட பொருள் வேற என்ன வேணும்' சலிப்போடு கேட்டான்.


'நீங்க தான் வேணும்'

ராகுல் ஆச்சரியமா பார்த்தான்.

'யெஸ் இந்த கேஸுக்கு நீங்கதான் துரும்பு'

'என்ன சொல்றீங்க சேர்? நான் துருப்பா? இந்த கேஸுக்கும் எனக்கும் எந்தச் சம்மந்தமும் இல்லையே'

'உங்களுக்கும் ரஸ்விகாக்கும் சம்மந்தம்



இருக்கா?'

'இருக்கு, அவள் என்னுடைய காதலி'

'அப்டி ன்னா இந்த கேஸுக்கும் உங்களுக்கும் சம்மந்தம் இருக்கு.'

'எனக்கு புரியல'

'மேடர் செய்யப்பட்டதே உங்க ரஸ்விகா தான் மிஸ்டர் ராகுல்'

அவ்வளவு இலகுவாகவே கவிந்த் சொல்லி விட்டான். அவன் இறுதியாக கூறிய வார்த்தைகள் ஈட்டிகளாக மாறி ராகுலின் செவிகளுக்குள் பாய்ந்து, இதயத்தை குத்தி கிழித்தது. நாடி நாளங்களினூடாக ஓட வேண்டிய குருதி, அவன் உடலுக்குள் நாலாபுறமும் சிதறி ஓடியது. அவனை சுற்றி எதுவுமே அசையவில்லை. ஆகாயத்தில் உள்ள கோடி கணக்கான நட்சத்திரங்களும் கற்களாக மாறி அவன் மேல் மழையாக பொழிவதை போல் நொருங்கினான். வார்த்தைகளும் ஊமையாகி விட்டன. வியர்வை துளிகள் ஊற்றுக்களாகி, ஆறாய் உடலெங்கும் பாய்ந்து கொண்டிருந்தது. நெஞ்சு மேலும் கீழுமாய் தன் பாட்டிற்கு ஏறி இறங்கியது. உதடுகளும், கண்களும் போட்டிபோட்டு கொண்டு துடித்தன. கண்கள் வென்று கண்ணீரை வெளிவிட்டன.

'ஐ ஆம் வெரி சொறி ராகுல்..' பரிதாப வார்த்தைகளை உதிர்த்தான் கவிந்த்.

ராகுல் ஏதேதோ எல்லாம் சொல்ல துடித்தான். நாக்கு புரள மறுத்து விட்டது. வெளியில் இருந்த இருளின் கருமையை ராகுலின் முகத்தில் யாரோ அள்ளி அப்பியதை போன்று அவன் முகம் கறுத்துவிட்டது.

'ராகுல்... ப்ளீஸ் கம் டவுண்... இதுவரைக்கும் அது ரஸ்விகா ன்னு தான் எங்க விசாரணை சொல்லுது. பட்....' கையை பிசைந்து கொண்டு பாதியிலையே நிறுத்தி கொண்டான் கவிந்த்.

'பட்...' கண்களை சுருக்கி ராகுல் கேட்டான்.

'எங்களால கன்பார்மா அது ரஸ்விகா ன்னு சொல்ல முடியாது'

ராகுலின் மனதிற்குள் பெருத்த நிம்மதி குடியேறிக் கொண்டது. அவனைச் சுற்றி வசந்தம் மலர்ந்தது. அப்பியிருந்த இருள் அகன்று போக, சின்னதாய் ஒரு பிரகாசம் அவன் முகத்தில் ஒளிர்ந்தது. கற்கள் என்று நினைத்த நட்சத்திரங்கள் பூ மழையாய் அவனை நனைத்தது.

'அது ரஸ்விகா இல்லை எண்டு நாங்கள உறுதிப்படுத்திறத்துக்கு எங்களுக்கு உங்களோட உதவி தேவை'

வேறு உலகத்தில் சஞ்சரித்துக் கொண்டவன் கவிந்தின் குரலைக் கேட்டதும், சுயநினைவுக்கு வந்தான்.

'கண்டிப்பா செய்யிறேன் சேர். அது ரஸ்விகாவா இருக்க முடியாது.' நம்பிக்கையோட பதிலளித்தான்.

'எங்களோட ஆசையும் அதே தான்' ராகுலின் கைகளைப் பிடித்து, அவனுக்கு நம்பிக்கை ஊட்டும் விதத்தில் சொன்னான் கவிந்த்.

'இப்போ நான் என்ன செய்ய வேணும்... இந்த விசயத்தைப் பத்தி கொஞ்சம் சொல்லுங்க' ஆர்வத்தோடு கேட்டான் ராகுல்.

ராகுல் சொல்லி கொண்டிருக்கும் போதே கவிந்தின் தொலைபேசி அலறியது. பட்டனை அழுத்தி காதோரத்தில் வைத்து பேசலானான்.

'ஹலோ சந்துரு சொல்லுங்க'

'சேர் நமக்கு ஒரு துப்பு கிடைச்சிருக்கு'

'என்ன துருப்பு' கண்கள் மகிழ்ச்சியில் அகன்றன.

'ஒரு மிஸ்ஸிங் கேஸ் வந்திருக்கு'

'சோ, வட்? அதுக்கும் இந்த மேடர் கேஸுக்கும் என்ன தொடர்பு?'

'ரெண்டும் நடந்தது ஒரே நாள்ல சேர். அதான் எங்களுக்கு இந்த நிலைமைல கிடைச்சிருக்கிற பெரிய துப்பு'

'சரி நான் நேர்ல வந்து பேசுறன், இப்போ நீங்க எங்க இருக்கீறீங்க.?'

'இப்போ நான் ஓபிஸ்லதான் இருக்கிறன்'

'ஓகே அங்கேயே நில்லுங்க... நான் பதினைஞ்சு நிமிஷத்துல அங்க வந்துர்றன்'

'யெஸ் சேர்... தங் யூ..'

(தொடரும்)

## "லவ்கிராஃப்ட் கன்ட்ரி"




அமெரிக்காவில் இனவெறி அடிப்படையிலான சம்பவங்கள் தொடரும் சூழலில், எச்.பி.ஓ. நிறுவனம் வெளியிட்டிருக்கும் 'லவ்கிராஃப்ட் கன்ட்ரி' ( **Lovecraft Country** ) தொடர் பரவலான கவனத்தைப் பெற்றிருக்கிறது.

கறுப்பினத்தைச் சேர்ந்த நாயகன் தனது பூர்வீகத்தைத் தேடிச் செல்லும் சாகசப் பயணமாக மாயாஜால அம்சங்களுடன் இடம்பெற்றிருக்கிறது இந்தத் தொடர்.

உலகப் புகழ்பெற்ற அமானுஷ்ய எழுத்தாளர் எச்.பி. லவ்கிராஃப்ட் எழுதிய நாவல்களில் வருகின்ற கற்பனை ஊர்களே கதைக் களமாக இடம்பெறுகின்றன. அந்தக் கற்பனைப் பிரதேசங்களுடன், அமெரிக்காவில் நடைமுறையில் இருந்த கறுப்பின மக்கள் மீதான இனவெறிச் சட்டங்களின் கொடூரத்தையும் இணைத்து 2016ஆம் ஆண்டில் மாட் ரஃப் 'லவ்கிராஃப்ட் கன்ட்ரி' எனும் நாவலை எழுதியிருந்தார்.

அந்த நாவலைத் தழுவி உருவாக்கப்பட்ட தொடரே இது. 1950களில் கொரிய யுத்தத்தில் பங்குபற்றிக் காணாமல் போன தனது தந்தையைத் தேடி சிக்காக்கோவுக்குச் செல்கிறான் கறுப்பினத்தைச் சேர்ந்த இளைஞன் அடிகஸ். அவனது பயணம் வெள்ளையின அமெரிக்கர்களின் இனவெறியையும், 1950 களில் அமெரிக்காவில் நடைமுறையிலிருந்த 'ஜிம் க்ரோ' சட்டத்தின் இரும்புப் பிடியையும் நமக்குக் காட்டுகிறது.

மாயாஜாலக் கற்பனைகளை அடிப்படையாகக் கொண்டு இத்தொடர் உருவாக்கப்பட்டிருந்தாலும், வரலாற்றில் கறுப்பினத்தவர்கள் மீதான இனவெறி எந்த அளவிற்கு உக்கிரமாக இருந்தது என்பதும் வெளிப்படுகிறது. கடந்த ஆவணி (ஓகஸ்ட்) மாதம் 16ஆம் திகதி இந்தத் தொடரின் முதல் பாகம் வெளியிடப்பட்டது. இதுவரை இரண்டு பாகங்கள் வெளியிடப்பட்ட நிலையில் அவை இரண்டும் அமோகமான வரவேற்பைப் பெற்றுள்ளன. இந்தத் தொடரில் எல்லாமாக பத்துப் பாகங்கள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# காலம்

ந.சத்தியபாலன்

வேலை முடிந்து வீடு திரும்புகையில் அப்பாவின் ஞாபகம் வந்தது.

அவர் காலையில் நான் புறப்பட்டபோது நினைப்பூட்டிய சஞ்சிகையை வாங்கிக் கொள்வதற்காகச் சைக்கிளைப் புத்தகக் கடையோரமாக நிறுத்திவிட்டுக் கடைக் காரனை அழைத்தேன்...

"உங்கட தீராநதி நேற்றே வந்திட்டுது" என்றபடி அந்தச் சஞ்சிகையைப் பெறுவதற்கான பெயர் பதிந்திருக்கும் பதிவுப் புத்தகத்தில் பெயரைத் தேடினார் கடைச் சிப்பந்தி.

"ஸ்ரீ கோபால கிருஷ்ணன் எண்டு இருக்கும் பாருங்கோ" என்றேன்.

"அப்ப உங்கட பெயரில இல்லையோ மாஸ்ரர்? நான் உங்கடை பெயரையெல்லோ தேடிக் கொண்டிருக்கிறன்... என்னடா... ஸ்ரீ குருதேவ் எண்ட பெயரைக் காணெல்ல எண்டு தேடிக்கொண்டிருக்கிறன்" என்று சொல்லியபடியே அப்பாவின் பெயரைத் தேடிச் சரி போட்டுக் கொண்டார் அவர்.

"அந்தச் சஞ்சிகை அப்பாவுக்காகத்தான் எடுக்கிறனான். அதாலை அவற்றை பெயரையே பதிஞ்சிருக்கிறன்" என்ற என்னிடம், "எங்கட முதலாளி ஸ்ரீதர்சிங் உங்கட அப்பாவிட்ட வைத்தீஸ்வராவில படிச்சவராம்... என்ன மாஸ்ரர்?" என்று கேட்டார்.

"ஓம்! எங்கட அப்பா ஒரு மற்ஸ் மாஸ்ரர். அவரிட்டப் படிச்ச கனபேர் யாழ்ப்பாணத்தில இருக்கினம்" என்று பதிலளித்தபடியே சஞ்சிகையை வாங்கிக் கொண்டு படியிறங்கினேன்.

சைக்கிளை எடுத்துக் கொண்டு திரும்பியபோது, யாரோ ஒருவர் எனது கையைப் பிடித்தார்.

முகக் கவசத்தோடு தலைக் கவசமும் அணிந்திருந்தபடியால், என்னால் உடனடியாக அவரை அடையாளம் காண முடியவில்லை. தலைக் கவசத்தை அகற்றியபடி, "ஸ்கூல் முடிஞ்சு வீட்ட போறீர் போல?" என்று கேட்ட குரலிலிருந்தே அவர் தேவ ரஞ்சன் என நான் அடையாளம் கண்டுகொண்டேன்.

"கவசத்துக்கு மேல கவசம்போட்டு உலாவிறதால ஆக்களை அடையாளம் தெரியுதில்லை" என்ற என்னிடம், தனது இயல்பேயான எள்ளல் தொனியில், "சும்மாவே சனம் முகமூடியிலதான் மறைஞ்சு திரியுது. போதாக்குறைக்குக் கொரோனாவும் சேர்ந்து எல்லாரையும் வாட்டுது. உம்மை இண்டைக்குக் கண்டது நல்லாய்ப் போச்சுது... நவரட்ண ராஜா மாஸ்ரரைத் தெரியுமா உமக்கு...? ரெண்டொரு தரம் உங்கட வீட்டில அவரைக் கண்டதா ஒரு ஞாபகம்... அதால உங்கட வீட்டுக்கு வந்து அந்தத் தகவலச் சொல்லுவம் எண்டு நினைச்சனான்..." அவர் தொடர்ந்தபோது, "என்ன தகவல் அண்ணை?" என்று நான் தொடர்ந்தேன்.


"நவரட்ணராஜா மாஸ்ரர் கிட்டடியில கொழும்பு போய்த் திரும்பின விசயம் அறிஞ்சனீரா?"

"இல்லையே... அவரைக் காணயில்ல. கன நாளாப் போன் எடுத்தாலும் பதிலில்ல எண்டு அப்பாதான் தேடிக் கொண்டிருந்தவர். அவையள் ரெண்டு பேரும் நீண்ட காலச் சிநேகிதர்கள். ஆளையாள் சந்திக்காமல் இருக்கிறது அருமை. நவம் நவம் எண்டு அப்பாவும் அவரைக் காணாமல் இரார். அவரும் கோபல் கோபாலெண்டு... இவரோட நல்ல ஒட்டு. ரெண்டு பேரும் இலக்கியக் காரரும்தானே? கதைச்சுக் கொள்ள விசயத்துக்குப் பஞ்சமில்ல.

நவம் மாஸ்ரரின்ற எழுத்தில எங்கட அப்பாவுக்கு நல்ல அபிமானம். சோக்கான தமிழ் நடை எண்டு எப்பவும் பாராட்டுவார்" என நான் தொடர்கையில், முகத்தைத் திருப்பியபடி தேவா அண்ணர் சங்கடப்படுவது தெரிந்தது.

"என்னண்ணெ பிரச்சினை? ஏதும் சிக்கலோ? என்னவோ சங்கடப்படுகிற மாதிரிக் கிடக்குது?"

"இண்டு காலமை நவம் மாஸ்ரர் இறந்திட்டார் தம்பி. கொழும்பிலயிருந்து திரும்பி ஆஸ்பத்திரியிலையிருந்தவர். முந்தநாள் நோய்த் தொற்று உறுதியானதாய்ச் சொன்னவையள். இண்டு காலமை ஆள் போயிற்றார்" என்றவரின் துயரம் என்னைத் தாக்கியதில் மனங்கலங்கிப் போனேன்.



"அம்மாவைப் பற்றி யோசியாமல் கவனமாய்ப் படிக்க வேணும். நீர் கட்டாயம் கம்பஸ் போக வேணுமெண்டதுதான் அவாவுடைய ஆசை. அதை மறக்காமல் படிக்க வேணும்"

அப்பாவின் நண்பர் நவம். மாமா என்று நாம் எல்லோருமே கொண்டாடுகிற நல்ல உறவு. அவர் போயிற்றாரா? நம்ப முடியவில்லை. அவரது மலர்ந்த முகமும் உற்சாகமான பேச்சும் நினைவுக்கு வந்தன.

அப்பா எப்படி இதைத் தாங்கப் போறார்? அவர்களின் அத்தியந்த நட்பும் மனந்திறந்த பகிர்வுகளும் பரஸ்பரம் செய்து கொள்கின்ற உதவிகளும் யாராலும் மறக்க முடியாதவை.

அம்மாவுக்குத் திடீரென்று தோன்றிய கர்ப்பப்பை நோய்க்கு அவசரமாகச் சத்திர சிகிச்சை செய்ய வேண்டிய நிலை தோன்றியபோது, தானாகவே சிகிச்சைக்கு வேண்டிய பணத்தைக் கொண்டு வந்து அப்பாவின் கையில் கொடுத்து, "ஒண்டுக்கும் யோசிக்காமல் இதைக் கொண்டு போய் ஒப்பிறேசன் அலுவலைப் பாருங்கோ. எனக்கு இந்தக் காசு இப்ப அவசரமில்லை" என்று கூறிய போது அழுகை துடிக்க நன்றி சொல்லிக் கண்ணீர் விட்டது இப்போது போல இருக்கிறது.

அம்மா இன்று குணமடைந்து உலாவுவதற்கு அவரது உதவிதான் காரணம் என்று எண்ணிய போது அப்பாவின் அந்த நல்ல நண்பரை நன்றியுடன் நினைத்துக் கொண்டேன்.

"நவம் மாஸ்ரர் உங்கட அப்பாவுக்குப் ஃபிரண்ட் எண்டு எனக்குத் தெரியும். அதுதான் வந்து சொல்ல நினைச்சனான். வீட்டில சொல்லிவிடும்" என்றபடி தேவரஞ்சன் புறப்படத் தயாரானார்.

விசயத்தை எப்படி அப்பாவிடம் சொல்லப் போகிறேன் என்று எனது மனம் தவித்தது. அப்பா மட்டுமல்ல வீட்டில் யார் இதை அறிந்தாலும் தாங்க மாட்டார்கள்.

வழக்கமான வேகத்தோடு இன்று சைக்கிளையும் செலுத்த முடியவில்லை. மனம் துயரத்தில் சாம்பிக் கிடந்தது. நோயும், துன்பமும், இன்னல்களும், இறப்பும் யாருக்கும் பொதுவானவை தானே என்று நினைத்து ஆறுதல் கொள்ள முடியவில்லை.

நவம் மாமாவின் மனைவி கௌசல்யா அன்ரி நம் யாவருக்குமே ஓர் அன்பான அன்ரியாக விளங்குபவர்.

அம்மா வைத்தியசாலையில் இருந்த நாள்களி லெல்லாம் அடிக்கடி அம்மாவைப் பார்க்க வருபவர் அவர். உடம்புக்குச் சத்துத் தேவை என்று கூறி, தானே காய் கறிச் சூப் வைத்து எடுத்து வருவார். அந்த நாள்களில் பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருந்த என் தங்கைக்கு விசேடமாக ஏதும் திண்பண்டங்கள் செய்து கொடுத்து, "அம்மாவைப் பற்றி யோசியாமல் கவனமாய்ப் படிக்க வேணும். நீர் கட்டாயம் கம்பஸ் போக வேணுமெண்டதுதான் அவாவுடைய ஆசை. அதை மறக்காமல் படிக்க வேணும்" என்று கூறியபடி அவளின் தலையை வருடி அணைத்துக்கொள்வார் கௌசல்யா அன்ரி.

தங்கச்சிக்குப் பல்கலைக் கழக அனுமதி கிடைத்தபோது, ஒரு தாய்போல மகிழ்ந்து கொண்டாடிய அன்புள்ளம் அவருடையது. நவம் மாமாவின் இழப்பை அவர் எப்படித் தாங்கப் போகிறார். அவரது கவலையை எப்படி ஆற்றப் போகிறோம் என்ற குழப்பங்களோடு வீட்டை அடைந்தேன்.

வழமைக்கு மாறாகத் திறந்தபடி கிடக்கும் வாசற்படலையைச் சாத்தியபடி உள்ளே நுழைந்த எனது காதில் பலரும் உரத்த குரலில் வீட்டுக்குள்ளிருந்து பேசிக்கொள்வது கேட்டது.

என்னைக் கண்ட என் தங்கை உள்ளேயிருந்து அவசர அவசரமாக ஓடி வந்தபடியே, "சின்னண்ணை உனக்கு விசயம் தெரியுமா? எங்கட நவம் மாமா எல்லோ இண்டைக்குக் காலமை மோசம் போயிற்றாராம். கொறோனாவாலதானாம் செத்தவர். இன்னும் பொடி கூடக் குடுக்கேல்லையாம்" மூச்சு விடாமல் பேசிக்கொண்டிருந்த அவளிடம், "நானும் அறிஞ்சனான் மீரா!" என்று கூறிவிட்டு, "இப்ப அப்பா எங்க? அவருக்கு என்னெண்டு சொன்னனீங்கள்... அவர் தாங்க மாட்டாரே இதை?" என்று சொல்லிக்கொண்டு உள்ளே நுழைந்தேன்.

உள்ளே சாய்மனைக் கதிரையில் இடிந்து போனவராகச் சரிந்திருந்த அப்பாவின் கண்கள் என்னைக் கண்டதும் கண்ணீரில் கரைந்தோடின. அப்பாவின் கைகளைப் பற்றிக் கொண்டேன்.

"இனி எப்ப தம்பி என்ர நவத்தைக் காணுவன்? அவன் என்ர சொந்தத் தம்பி மாதிரி எல்லோ" என்னிடம் பதிலென்று பேச எதுவும் இருக்கவில்லை. மூலையொன்றுக்குள் குலுங்கிக் குலுங்கி அழுதபடி அம்மா சுருண்டுபோய்க் கிடந்தார்.

பக்கத்து வீட்டு மாமி ஏதோ சொல்லி அம்மாவை ஆற்ற முயன்று கொண்டிருந்தார். விசயமறிந்த வேறு பலரும் எங்கள் வீட்டுக்கு வரத் தொடங்கியிருந்தனர். அவர்களில் பலரும் நவம் மாமாவின் ஆப்த நண்பர்கள். எங்கள் வீட்டாரினூடாகவே நவம் மாமாவுடன் அறிமுகமானவர்கள். எழுத்து இலக்கியம் என்று மணிக்கணக்காய்ப் பேசியவர்கள்.

வந்தவர்களில் ஒருவர் கூறினார்.

"நெருங்கிய உறவினர்களில் சில பேரை மாத்திரம் செத்த வீட்டிலை கலந்துகொள்ள அனுமதி குடுத்திருக்கினமாம். கொஞ்சம் முந்தியாய் விதானையார் நேரிலை வந்து சொல்லிப் போட்டுப் போனவராம். பத்துப் பேருக்கு மேல கூட வேண்டாமாம்.

வயதுபோன ஆக்களை உள்ளே கூட விட வேண்டாமாம். வாசலோட திருப்பி அனுப்பச் சொல்லிச் சுகாதாரப் பிரிவு சொல்லியிருக்காம்" என்று பிரகடனம்போல அறிவித்த குரலைக் கேட்டுப் பெருங்குரலெடுத்து அழுத அப்பாவைத் தேற்றும் வழி தெரியாமல் திகைத்துப்போனோம். எல்லோருடைய கண்ணீரும் நேசமும் ஒரு மொழியாகிச் சங்கமித்துக் கொண்டிருந்தன அங்கே.

## உன்னை அறிந்திடு! உலகம் தெரிந்திடு!

விண்ணைத் தாண்டி வெடித்துக் கிளம்பும்
விடுதலைப் புள்ளா! - நீ
கண்ணைக் கசக்கி கரித்துக் கொட்டும்
கவலையின் மகவா! - நீ

பண்ணை மீட்டும் பசுந்தளிர் விரலின்
மென்மைத் தனமோ ! - நீ
மண்ணைக் கிழித்து வீறுடன் கிளம்பும்
பயிரின் சிசுவோ ! - நீ

இருளைக் கலைத்து ஒளியைக் கொடுக்கும்
சூரிய முதலோ! - நீ
அருளைக் கொடுத்து அணைக்கும் சிவனின்
நுதலின் விழியோ! - நீ

இடறும் இருளை இடித்துக் கலைக்கும்
விண்ணின் இடியோ! - நீ
அடர்ந்த வனத்தில் நெருப்பை உமிழும்
வேங்கைக் கண்ணோ! - நீ

எரியும் தீயின் வீசும் வெப்பக்
காற்றின் கங்கோ! - நீ
எரிந்த படியே வெளியே தள்ளும்
எரிமலைக் குழம்போ! - நீ

உன்னை நீயே ,உணரத் தவறின்
உலகம் உன்னை இகழும்.!
அன்னைத் தமிழின், மானம் காத்தால்
வரலாறு உன்னைப் புகழும்!

மண்ணில் விழுந்த விதையாய் எழுந்தால்
சாவின் பின்பும் வாழ்விருக்கும்! - நீ
கண்ணில் ஒளியாய் கடமை உணர்ந்தால்
காலம் உன்னை நினைவிலிருத்தும்! -நீ

உன்னை அறிந்திடு! உலகம் தெரிந்திடு!
உயர்ந்த பண்பில் உறைந்திடு! - நீ
விண்ணை இடித்திடு! உயரப் பறந்திடு!
உலகை அளக்க, சிறகை விழித்திடு !

- இராம இராகவன்

## மூளைக்கு வேலை விடைகள்

1) 25/7
2) விடை -
1 x 3 - 2 = 3 - 2 = 1




## ‘சூரரைப் போற்று’வதில் குழப்பம்

சூர்யாவின் நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் சூரரைப் போற்று. சுதா கொங்கரா இயக்கத்தில் உருவாகியுள்ள இந்தத் திரைப்படம் ஓடிடி தளத்தில் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டதால் இந்தியாவில் பெரும் குழப்பம் ஏற்பட்டுவிட்டது. திரையரங்கு உரிமையாளர்கள், விநியோகஸ்தர்கள் கடும் அதிருப்தியில் இருக்கிறார்கள். படம் ஓடிடியில் வெளியாவது குறித்துத் தயாரிப்பாளர் சங்கத்திலோ, நடிகர் சங்கத்திலோ தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் இல்லாத இன்றைய அசாதாரணமான சூழ்நிலையில் இது விடயமாக யார், யாரிடம் பேசுவது என்ற குழப்பமான சூழ்நிலை உள்ளது என்று ஸ்ரீ தேனாண்டாள் பிலிம்ஸூம் அறிக்கை வெளியிட்டுள்ளது. கொரோனாவின் முடக்கங்களால் திரையிடுவதில் எழுந்துள்ள சிக்கல்களால் சூரரைப் போற்றின் வெளியீட்டில் குழப்பங்கள் நிலவுவதாகச் சினிமாத்துறையில் பேச்சுகள்.

## இந்த வார சுடோக்கு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | 3 | | | | | | |
| 2 | | | 3 | | | | | |
| | 4 | | 7 | 1 | | 2 | | 3 |
| | | 5 | 4 | | | | 7 | 1 |
| | | 4 | 2 | | 1 | 8 | | |
| 6 | 8 | | | | 7 | 5 | | |
| 1 | | 7 | | 6 | 9 | | 3 | |
| | | | | | 4 | | | 6 |
| | | | | | | 9 | | 5 |

இந்த சுடோக்கு விளையாட்டு தர்க்க ரீதியாக எண்களை ஒரொழுங்கில் அடுக்குவதற்கானது. நேராகவும் கிடையாகவும் 9 பெட்டிகளைக் கொண்டுள்ள இந்தச் சதுரத்தினுள் ஒவ்வொரு சிறிய பெட்டியினுள்ளும் 1 முதல் 9 வரையான ஒரு எண் இடப்பட வேண்டும். பெரிய பெட்டியின் கிடை மற்றும் நேர் வகிடுகளிலும் இரண்டாவது மற்றும் மூன்றாவது நிலைப் பெட்டிகளின் நேர் மற்றும் கிடை வகிடுகளிலும்கூட ஒரு எண் இரட்டிப்பாகக்கூடாது என்பதே விதி. முயற்சி செய்து பாருங்கள். சரியாக நிரப்பி விட்டீர்களானால் அதனை அப்படியே வெட்டி

**செம்மண்**
சுடோக்கு,
551 A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

என்னும் முகவரிக்கு, உங்கள் முழுப் பெயர், வயது, தபால் முகவரி, தொடர்பு எண் என்பவற்றுடன் அனுப்பி வையுங்கள். சரியாக எழுதி வெற்றிபெறும் ஒரு அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250 பரிசாக வழங்கப்படும். விடையும் வெற்றிபெற்றவரின் விவரங்களும் அடுத்தவார பத்திரிகையில் வெளியாகும். வெற்றிபெற்றவர் பரிசுத் தொகையை செம்மண் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கடந்த வாரம் வெளியாகிய சுடோக்கிற்கான விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 9 | 3 | 1 | 7 | 4 | 8 | 6 | 5 |
| 5 | 1 | 8 | 6 | 2 | 3 | 4 | 7 | 9 |
| 6 | 7 | 4 | 9 | 8 | 5 | 2 | 3 | 1 |
| 3 | 8 | 5 | 2 | 9 | 6 | 1 | 4 | 7 |
| 1 | 6 | 9 | 8 | 4 | 7 | 5 | 2 | 3 |
| 7 | 4 | 2 | 5 | 3 | 1 | 9 | 8 | 6 |
| 4 | 5 | 1 | 7 | 6 | 8 | 3 | 9 | 2 |
| 8 | 2 | 6 | 3 | 5 | 9 | 7 | 1 | 4 |
| 9 | 3 | 7 | 4 | 1 | 2 | 6 | 5 | 8 |

## விரைவில் திரையில் ‘பிக் பாஸ் 4’

பலரும் எதிர்பார்த்திருந்த, பலவாறான பேச்சுகளுடன் நீடித்துவந்த 2020ஆம் ஆண்டுக்கான பிக் பாஸ் 4 நிகழ்ச்சி தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பை விஜய் தொலைக்காட்சி வெளியிட்டுவிட்டது. கொரோனா அச்சுறுத்தலால் பிக் பாஸ் நிகழ்ச்சி குறித்து திட்டமிடப்படாமல் இருந்தது. இதனால், இந்த ஆண்டு பிக் பாஸ் நிகழ்ச்சி இருக்காது என்று தகவல் பரவியது. ஆனால் ஹிந்தி, தெலுங்கில் இந்த ஆண்டுக்கான பிக் பாஸ் நிகழ்ச்சி தொடங்கப்பட்டது. ஆகையால் தமிழிலும் இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. இந்த நிலையில் பிக் பாஸ் 4 நிகழ்ச்சிக்கான டீஸரைக் கமல்ஹாசன் தனது கீச்சகப் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். இதற்கு ரசிகர்கள் பலரும் வரவேற்பு தெரிவித்துள்ளனர். கமல் புதிய வேடத்தில் இதில் நடித்துள்ளார். விரைவில் ட்ரெய்லர் வெளியிடப்படவுள்ளது. அதில்தான் நிகழ்ச்சி என்றிலிருந்து ஒளிபரப்பு குறித்த தகவல் இருக்கும் எனத் தெரிகிறது. இந்த ஆண்டு பிக் பாஸ் போட்டியாளர்களாக யாரெல்லாம் இருப்பார்கள் என்பது குறித்து சமூக வலைத்தளங்களில் ஒரு பெரிய விவாதமே நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

## கார்ட்டூன்




# ஆறாத் துயரம்!

ஆபிரிக்காவின் மடகஸ்காருக்குக் கிழக்கேயுள்ள தீவு மொரிஷியல். பவளப் பாறைகளின் தேசம் என்று வர்ணிக்கப்படுகின்ற அந்தத் தீவைச் சுற்றிய பவளப் பாறைகள் நிறைந்த கடற்பரப்பு பல்லுயிர்களின் வாழ்விடமாகவுள்ளது. அந்தக் கடற்கரையில் நடந்த மனிதத் தவறு ஒன்றின் விளைவால் 24 டொல்பின்கள் சாவடைந்துவிட்டன. இந்தச் செய்தி முழு மொரிஷியசையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. கடந்த ஜூலை மாதம் 25ஆம் திகதியன்று ஜப்பானுக்குச் சொந்தமான எம்.வி.வகாஷியோ என்கிற மசகு எண்ணெய் கப்பல் ஒன்று அங்குள்ள பவளப் பாறையில் மோதுண்டதில் எண்ணெய் கசிவு ஏற்பட்டுள்ளது.

ஒரு வாரம் வரையில் கப்பலில் இருந்த எண்ணெய் கடலில் ஓடிக்கொண்டிருந்தது. இந்த எண்ணெய் கசிவின் பின்னர் அந்தக் கடற் கரையில் கடந்த புதன்கிழமை 17 டொல்பின்கள் இறந்து கிடந்தது கண்டறியப்பட்டது. மறுநாள் வியாழக்கிழமை அங்குள்ள பிறிதொரு கரைப் பகுதியில் மேலும் ஏழு டொல்பின்கள் இறந்து கிடந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



டொல்பின்களின் திடீர் இறப்புக்கான காரணத்துக்கும் வகாஷியோ கப்பலின் எண்ணெய்க் கசிவுக்கும் தொடர்புள்ளதா என்பதைத் தீர்மானிக்க உடனடி விசாரணை தொடங்கப்பட்டுள்ளது. புதன்கிழமை கண்டுபிடிக்கப்பட்ட 17 டொல்பின்கள் முதற்கட்டமாகப் உடற் கூறாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இந்த எண்ணைக் கசிவு பெரியளவில் சுற்றுச் சூழல் பேரழிவை மொரிஷியஸூக்கு ஏற்படுத்தும் என்று அறிஞர்கள் எச்சரித்துள்ளனர். மொரீஷியஸையும் அதன் சுற்றுலா சார்ந்த பொருளாதாரத்தையும் பல தசாப்தங்கள் வரை இது நீடித்துப் பாதிக்கக்கூடும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.



# இதனால் சகலருக்கும்...

ஊர்கடக்கும் போதெல்லாம் உம் ஞாபகம்
தானறியாமலே தலை கவிழும்
மறப்பதற்காக நினைவுகள் வேண்டாமாம்
அவர்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை
முளைகளைக் கிள்ளிவிடுவதால்
விதைகள் சாவதில்லை
இது விஞ்ஞானிக்கு மட்டுமல்ல
எங்களூர் விவசாயிக்கும் தெரியும்
அவர்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை
இதில் வியப்பதற்கும் ஏதுமில்லை
மலர்போட்டு மண்ணளைந்து
கண்ணீரால் கழுவிய கருவறைப் பரப்பெல்லாம்
மலம் அப்பிய காலோடு சில மந்திகள் திரிகின்றன
மழை கழுவிக் கழுவித் துடைத்தாலும்
மூத்திர நெடில்கள் போவதாயில்லை
அவர்களுக்குத் தெரிவதெல்லாம்
அது பிணக்காடு என்பதே
தெரிந்துவிட்டுப்போகட்டும் அதனாலென்ன ஆகிவிடப்போகிறது?
ஊதுபத்தியால் பீடி மூட்டினாலென்ன விளக்கை ஏற்றினாலென்ன
அவர்களுக்கு அது நெருப்பு
நமக்கு எது என்பதில்தான் எல்லாமே இருக்கிறது
மூக்கால் தின்று வாயால் கழிக்க
எம்மினத்தால் மட்டுமே முடியும்
இது எம்மில் சிலர்பெற்ற வரம்.
துட்டகைமுனுவுக்குக் கொடுப்பதற்கு எங்களிடம்
மூட்டைகளில் மன்னிப்புக் கிடக்கிறது
பாவம் காக்கை வன்னியனுக்கு கொடுக்க
கைவசம் தண்டனைகூட இல்லை.
தூரப்போய்விடுங்கள்!
அண்ணாந்து பார்த்து எச்சில்துப்புவதும்,
கொப்பளித்த தண்ணீரை குடித்துக்கொள்வதிலும்
உம்குலமே நாறுகிறது!
அடுத்த தலைமுறைக்கு கொஞ்சமாவது சுத்தப்படுத்த
- முயற்சி செய்யுங்கள்.
பார்க்கலாம் எஞ்சிய மன்னிப்புத்துளிகள்
எங்காவது சிந்திக்கிடந்தால் சேகரித்துத் தருகிறோம்
அதுவரையிலுமாயினும் மழையில் நின்றுகொள்
கழுவுப்பட சாத்தியமுண்டு
இப்படியாயிற்று இந்தத்தடவையும் என ஒருத்தி
முனகிவிட்டுச் செல்கிறாள்.
இதுக்கா அள்ளிக்குடுத்தேன்... எனும்போது
வயிற்றுப்பொறியொன்று வெளிக்கிளம்பும்
வந்து பார்!
அது நெருப்பாய்த் தெரிந்தால் நீ மனிதன்
இல்லாவிட்டால் கடவுளாகவோ சாத்தானாகவோ இருந்துவிட்டுப்போ
அதனால் ஆருக்கென்ன ஆகிவிடப்போகிறது.
பறித்துப்போடுவதில் என்ன இருக்கிறது
செடி பூப்பதே அவர்களுக்குத்தானே!

சி.ப.வேந்தன்.

# இரண்டே வருடங்களில் கொரோனா கட்டுக்குள்...



உலகப் பெருந் தொற்றுக் கொள்ளை நோயான கொரோனா இரண்டு ஆண்டுகளுக்குள் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும் என்று உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் ஆதனோம் கெப்ரியேசஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

உலகம் முழுவதும் 2 கோடி 45 லட்சம் பேரைப் பாதித்துள்ள இந்த நோய் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் உலகப் பொருளாதாரத்தையே புரட்டிப் போட்டுள்ளது. நாடுகள் ஒவ்வொன்றும் இதனால் பெரும் நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளன. இந்த நோயிலிருந்து தம்மைப் பாதுகாப்பதற்காக அனைத்து எல்லைகளையும் இழுத்து மூடிய நாடுகள் மெல்ல மெல்ல அவற்றைத் திறந்து இயல்பு நிலைக்குத் திரும்புவதற்கு முயற்சித்துக் கொண்டிருந்தாலும் கொரோனாவின் ஆபத்து முற்றாக நீங்கிவிடவில்லை.

2019ஆம் ஆண்டு சீனாவின் வுகான் மாகாணத்தில் முதன் முதலில் கண்டறியப்பட்டதற்குப் பின்னர் இதுவரையில் 8 லட்சத்து 35 ஆயிரம் பேரின் உயிர்களைக் காவு வாங்கியுள்ளது இந்த நோய்.


அமெரிக்காவே இந்த நோயால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு 60 லட்சம் பேருக்கு நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளது. 1 லட்சத்து 85 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். அதற்கடுத்தடுத்த நிலையில் பிரேசிலும் இந்தியாவும் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. பிரேசிலில் 37 லட்சத்து 25 ஆயிரம் பேரும் இந்தியாவில் 33 லட்சத்து 20 ஆயிரம் பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு லட்சத்து 20 ஆயிரம் பேரும் 61 ஆயிரம் பேரும் முறையே அங்கெல்லாம் உயிரிழந்திருக்கின்றனர். அப்படியிருந்தாலும் 100 ஆண்டுகளுக்கு முன்னர் பரவிய ஸ்பானிஷ் காய்ச்சலைப் போலல்லாமல் இதனை விரைவாகவே கட்டுப்படுத்த முடிந்திருப்பதாக உலக சுகாதார அமைப்பின் தலைவர் தெரிவித்திருக்கிறார்.

1918ஆம் ஆண்டு பரவிய ஸ்பானிஷ் காய்ச்சல் 50 கோடிப் பேரைப் பாதித்ததுடன் 5 கோடிப் பேரின் உயிர்களைக் காவு கொண்டது. அன்றைய காலத்தைப் போலல்லாமல் இன்றைய காலம் தொற்று நோய்கள் வேகமாக உலகெங்கும் பரவக் கூடிய சூழலைக் கொண்டிருந்தபோதும் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக அவற்றைக் கட்டுப்படுத்தக்கூடியதாகவும் இருந்தது என்றும் டெட்ரோஸ் தெரி விக்கின்றார்.

“100 வருடங்களுக்கு முன்னர் இருந்ததைப் போன்றல்ல, இன்று நாம் மிக நெருக்கமாக இணைந்திருக்கின்றோம். அதனால் நோய் பரவல் வேகம் அதிகம். அதே சமயத்தில் அதனைக் கட்டுப்படுத்தக்கூடிய தொழில்நுட்பத்தையும் அறிவையும் நாம் கொண்டிருக்கின்றோம். பூகோளமய மாக்கம், நெருக்கம், தொடர்பாடல் என்பவற்றின் மூலமாக எமக்குப் பாதகமான சூழல் இருந்தாலும் சிறந்த தொழில்நுட்பம் மூலமான சாதகமும் கிடைத்திருக்கின்றது” என்கிறார் டெட்ரோஸ்.

உலக நாடுகள் அனைத்தினது முயற்சிகளையும் ஒன்றிணைப்பதன் மூலமே இந்த நோயை விரைவில் முழுமையாக வெற்றிகொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

# சாதனை படைத்த தினேஷ் சந்திமால்..!




இலங்கை கிரிக்கட் அணியின் முன்னாள் தலைவரும் வலதுகை துடுப்பாட்ட வீரருமாகிய தினேஷ் சந்திமால் உள்ளூர் கிரிக்கெட் போட்டி ஒன்றில் 354 ஓட்டங்களை விளாசித் தள்ளியிருக்கிறார். கொரோனா ஓய்வுகாலத்தைத் திடகாத்திரமாகப் பயன்படுத்தியிருப்பார் போலும், மைதானத்தில் வெளுத்துவாங்கிவிட்டார். அவரது இந்த ஓட்டங்களே இலங்கையின் உள்ளூர் ஆட்டங்களில் பெறப்பட்ட அதிகூடிய ஓட்டங்கள் என்கிற புதிய சாதனையும் படைக்கப்பட்டுள்ளது. தற்போது நடைபெற்றுவரும் உள்ளூர் பிரீமியர் லீக் தொடர் ஒன்றில் இலங்கை இராணுவ விளையாட்டுக்கழகத்துக்காக விளையாடும் சந்திமால் இந்த 354 ஓட்டங்களை குவித்தார். இந்த லீக்போட்டி ஆரம்பித்ததில் இருந்து சிறப்பாக துடுப்பெடுத்தாடி இரண்டு சதங்கள் உள்ளடங்கலாக 1,000 ஓட்டங்களையும் அவர் பெற்றுள்ளார். 33 பவுண்ட ரிகள் மற்றும் ஒன்பது சிக்சர்கள் உள்ளடலங்கலாக 391 பந்துகளில் தனது 354 ஓட்டங்களைக் குவித்தார் சந்திமல். 2015ஆம் ஆண்டில் இலங்கை விமானப்படை அணிக்கு எதிராகத் தமிழ் யூனியன் அணி சார்பாக விளையாடிய ஹித்ருவான் விதானகே பெற்றுக்கொண்ட 351 ஓட்டங்களே இதுவரையில் சாதனையாக இருந்தன. தனது திறமையை நிரூபிக்கத் தவறியதால், 2019 உலகக் கிண்ணத்திற்கான இலங்கை அணிக்குத் தெரிவு செய்யப்படாதவர் சந்திமல். தனது ஆட்டத் திறனை மீட்டு அவர் காட்டியிருக்கும் இந்த வித்தை அவரை மீண்டும் இலங்கை அணிக்கு மீட்டுக்கொண்டு வரும் என்று நம்பலாம்.

# 600 விக்கற்றுகள் அண்டர்சன் சாதனை..!!

டெஸ்ட் கிரிக்கட்டுகளில் 600 விக்கற்றுகளை வீழ்த்திய முதல் வேகப்பந்துவீச்சாளரானார், இங்கிலாந்தின் ஜேம்ஸ் அண்டர்சன். இவர் 156 டெஸ்ட் போட்டிகளை எதிர்கொண்டு இந்த சாதனையை நிகழ்த்தியுள்ளார். பாகிஸ்தான் அணிக்கு எதிராக விளையாடி வரும் இங்கிலாந்து அணியில் இடம்பிடித்துள்ள இவர், 3ஆவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணியின் தலைவர் அசார் அலியை தனது 600ஆவது இலக்குக்காக ஆட்டமிழக்கச் செய்துள்ளார்.



இதன் மூலம் 600 விக்கற்றுகளை வீழ்த்திய பந்துவீச்சாளர்கள் பட்டியலில் 4ஆவது இடத்திலும் வேகப்பந்துவீச்சாளர் என்ற அடிப்படையில் முதலாவது இடத்திலும் அண்டர்சன் காணப்படுகின்றார்.உலகளவில் சுழற்பந்து வீச்சாளர்களான முத்தையா முரளிதரன், ஷேன் வார்ன், அனில் கும்ளே ஆகியோர் முதல் மூன்று இடங்களில் உள்ளனர்.




இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ, கஸ்தூரியர் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.08.2020 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு: 0214927781